# பெண்

தொகுதி : 23



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**தொகுதி : 23**

2018

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**



இல. 4/1. தோமஸ் லேன்.
மட்டக்களப்பு.

**T.P No.: 065-2223297**
**Fax No.: 065-2224657**
**e-mail : suriyaw@slt.lk**



# THE WOMAN

**A Journal Published by**
**Suriya Women's Development Centre,**

ஆசிரியை:
*விஜயலட்சுமி சேகர்*

கணினி வடிவமைப்பு:
*த. சங்கர்*

அச்சகம்:
*வணசிங்கா அச்சகம்,*
*496A, திருமலை வீதி,*
*மட்டக்களப்பு.*


*விலை : 100/=*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...



மற்றுமொரு பெண் சஞ்சிகைக்கூடாக நாம் இணைவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இச் சஞ்சிகையானது பெண்களின் வாழ்வாதாரத்தினையும் அவர்கள் வாழ்வையும், அவர்களது தன்னம்பிக்கையையும் மையப்படுத்தியுள்ளது.

இங்கு நாம் முன்வைக்கும் பெண்களது கதைகளில் அவர்களது வாழ்வின் கதைகளுடன் அவர்கள் உழைப்பின் கதைகளும் அடங்கியுள்ளன. சாதாரணமாக "பெண்" எனும் சொல் மனக் கண்முண்ணே நிறுத்துவது, திருமணம், பிள்ளைகள், சமையல், சடங்குகள், நல்ல பிள்ளை வளர்ப்பு, ஒற்றைக் கணவன்....

இங்கு நாம் சந்தித்த பெண்களை நோக்குகையில் காலம் காலமான பெண்கள் பற்றிய பிம்பங்கள் அவர்கள் யதார்த்த வாழ்வில் பல்வேறு நிலைகளில் உடைந்துள்ளதை, காணாமல் போயுள்ளதை, தேவைக்கேற்ற வகையில் சமூகம் மாற்றி ஏற்றுள்ளதைக் காணலாம்.

அனேகமாக இப் பெண்களின் ஊர்கள் இன்னும் அபிவிருத்திக் காற்றுக்கள் சென்றடையாத பின்தங்கிய ஊர்களாகவே உள்ளன. அத்துடன் இவ் ஊர்கள் யுத்த நெருக்கடியில் பெரிதும் உள்வாங்கப்பட்டிருந்ததுடன் யுத்தப் பின் விளைவுகளும் இன்னும் அப்படியே உள்ளன. குடும்ப வன்முறை, யுத்த வன்முறை, அரசியல் வன்முறை, சிறுவயதில் பெரியோராக்கப்பட்ட கொடுமை, கல்வி மறுப்பு, உறவுகளுடன் ஒன்றித்து வாழமுடியாதிருந்த நிலை, இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் எவ்வாறு இவர்கள் தற்றுணிவு கொண்டு எழுந்தார்கள் என்பது இவர்கள் கதைக்கூடாக விளங்குகின்றது.

இவள், காலையில் கண் விழித்ததில் இருந்து இரவு உறங்கும் வரை தாமும் தமது உறவுகளும் அவதியின்றி உயிர்வாழ கடிகாரமாய் சுற்றுகிறாள். இவள், வீட்டைச் சுற்றிக்கொண்டே ஊரையும் சுற்றுகிறாள். எனினும் அவளது வீட்டு வேலை;. அது அவளது கடமை என்றும், வெளிவேலை; பெண் என்பவள் வீட்டிற்குப் பொறுப்பானவள் என்றும் கைக்கு அகப்படாத காற்றாய் அவளது உழைப்பு கணக்கிடப்படாமல் போய்க் கொண்டே இருக்க, "உழைப்பு" என்றால் வீட்டிற்கு வெளியில் இருந்து ஆண்களால் கொண்டுவரப்படும் வருமானமே என்று எமது கணக்கீட்டுப் படிவங்கள் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றன.

இங்கு நாம் சந்தித்த பெண்கள், பல்வேறு வகையான சூழலைக் கடந்தவர்கள், பல்வகைக் காலங்களைக் கடந்தவர்கள், பல்வகைக் கலாசாரங்களின் தடைகளுக்குள் உள் நுழைந்து வெளியேறியவர்கள்.

"பெண்கள் மாத விலக்கு நேரங்களில் கிணற்றில் தண்ணி அள்ளினால் தண்ணிக்குள் புழு பிடிக்கும்" என்பது சமூகத்தில் நிலவும் ஒரு கூற்று. நாம் சந்தித்த பல பெண்கள் வாழும் நிலமானது குடிநீரைக் கொண்டிருக்கவில்லை. இவர்கள் நீருக்காக பல மைல் தூரம் நன்நீர் வரும் கிணறு நோக்கிச் செல்கிறார்கள். இவர்கள் மாதம் முழுவதும் இவ்வாறுதான் நீர் எடுக்கிறார்கள். பெண்கள் தீட்டுடையவர்களாகவும், அசுத்தமானவர்களாகவும் கொள்ளும் சமூகத்தின் கணக்கு இங்கு மாற்றப்படுகின்றது.

யுத்த காலம் பெண்களின் வாழ்வை மிகவும் பாதித்துள்ளதெனினும் அது இவர்களை தனித்தவர்களாகவும் மேலதிக சுமைதாங்கிகளாகவும் ஆக்கியுள்ளதெனினும் எமது அடுத்த சந்ததியை எதிர்காலத்திற்கு உறுதியுடன் கடத்துபவர்களாகவும் முழு நேர உழைப்பாளிகளாகவும் இப் பெண்கள் உள்ளனர். ஆகவே இவர்கள் உழைப்பை கௌரவப்படுத்துவதும், இவர்கள் உழைப்பிற்கு பெறுமதியளிப்பதும், இப் பெண்களை சமூகத்தில் மதிப்புள்ளவர்களாக்குவதும் எமது ஆய்வினதும் "பெண்"ணினதும் நோக்கமாகும்

**- ஆசிரியை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே...



* உழைப்பு எனும் நூல்கொண்டு...
* தன்னால் முடியும் பெண்ணால் முடியும்
* இழைக்கப்படும் வாழ்வு
* தோப்பில் இருந்தாலும் ஒவ்வொரு மரமும்...
* காலடி இருள் கைவிளக்கு
* சந்தோசமாக வாழப்போறன்
* கனவுகள் பேசவேண்டும்
* எனக்குள் உருவாகும் பலம்
* மணிக்கூட்டுப் பெண்
* கண்திறக்கும் அதிகாலை
* தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து
* புதிய காத்திருப்பு
* கலங்கா விளக்கு
* வசந்தகால நிழல்கள்
* வெளிச்சக்கூடுகள்
* கோபுரம் உயரும் குடிசை நிழல்கள்
* பெண்களும் வாழ்வாதாரமும்...
* பஞ்சானாலும் நஞ்சற்றதே நமது
* கடல் கடந்து வெளிநாடு சென்றேன்...
* நாளை மற்றொரு நாள்
* உலகம் பந்து போன்றது
* என் கனவகள்....
* இலங்கையில் தொழில் ......
* வாசகர் கடிதம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உழைப்ப

## எனும் நூல் கொண்டு....







2014-2015 வரையிலான காலப் பகுதியில் வாழ்வாதாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. நிதி நிறுவனமான டயக்கோனியா, (Diakonia) யு.எஸ்.எயிட் (USAID) உதவியுடன் பயனாளிகளின் தெரிவு ஆரம்பமானது. சூரியா வேலை செய்யும் கிராமங்களான தாண்டியடி தாழங்குடா, திருச்செந்தூர், நொச்சிமுனை, குடியிருப்பு விபுலானந்தபுரம் எறாவூர் அல்கிதாயத் நகர் ஆகிய இடங்களில் இருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் சூரியாவின் சக்திக் குழுவில் இருந்தும் தெரிவு செய்யப் பட்டனர். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சேவையாளர் உதவியுடன் வறுமை யிலும் வறுமையான நூறு குடும்பங்களின் பெயர்ப் பட்டியல் எடுக்கப்பட்டு அவ் விபரங்களின் அடிப்படையில் வீடு வீடாகச் சென்று அவர்களது விபரங்கள் வினாக் கொத்துக்கள் மூலம் தனித் தனியாகப் பெறப்பட்டது.

ஒவ்வொரு ஊரிலிருந்தும் இருபது தொடக்கம் இருபத்தைந்து குடும்பங் களின் விபரங்கள் பெறப்பட்டு அதிலிருந்து வாழ்வாதாரம் பெற்றுக் கொள்ளத் தகுதியுடைய பெண்களின் விபரங்கள் எடுக்கப்பட்டு அவ் விபரங்கள் கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரால் பரிசீலனை செய்யப் பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் மக்களின் பார்வைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் பல இடங்களில் ஒட்டப்பட்டன.

மக்கள் பார்வையை அடுத்து கிராம சேவையாளர் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் அனுமதி பெறப்பட்டது. அதன் பின் பயனாளிகளுக்கு "தொழில் தெரிவும், வியாபாரத் திட்டமிடலும்" பயிற்சி வழங்கப்பட்டு சூரியாவால் இப் பெண்களின் தொழில் முன்னேற்றத்திற்காக 20,000.00 ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் 171 பெண்கள் பயன் பெற்றனர்.

தற்போது இப் பெண்கள் தமது தொழிலுடன் வெவ்வேறு தொழில்களைச் செய்து வருகிறார்கள்.

தற்போது இப் பெண்கள் கிராமசேவையாளர் உட்பட அரச உத்தியோகத்தர்களுடன் நல் தொடர்புகளை கொண்டுள்ளதுடன் சூரியாவால் அவர்கள் கிராமங்களில் உருவாக்கப்பட்ட உதவிக் குழுவிலும் *(Support group)* இயங்குகின்றனர். இதன் மூலம் கிராமத்தின் பிரச்சனைகளை தீர்க்கும் நடவடிக்கையிலும் தமது சூழலில் உள்ள ஏனைய பெண்கள் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறைகளை தடுக்கவும் தம் ஊர் பிள்ளைகளின் தொடர் கல்வி நடவடிக்கைக்கும் உதவிக் கொண்டுள்ளதுடன் தமது ஊர்களின் முன்னேற்றத்திற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் போட்டியிட்டனர்.

இப் பெண்களின் தொழில் தொடர்பான கண்காணிப்பிற்காக அவ்வவ் ஊர்களைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுக்கு "வாழ்வாதாரத் தொழில் கண் காணிப்பு" பயிற்சி வழங்கப்பட்டது. இவர்கள் தொழில் செய்யும் பெண்களை சந்தித்து அவர்களுடைய தொழில் வருமானம், ஏனைய தொழில் பிரச்சினைகளை இனம் கண்டு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

காணிப்பிரச்சினை, சுகயீனம், மரணம், தீராத நோய்கள்(புற்று நோய்) அதிக பிள்ளைகளும் அவர்களைப் பராமரித்தலும் மேலதிகச் சுமையும், வளர்ப்புப் பிராணிகள் இறப்பு போன்ற காரணிகளால் பெண்களின் தொழில் நடவடிக்கைகள் பாதித்துள்ளதை கண்காணிப்பாளர்கள் அறிக்கையிலும் இவர்களுடனான கலந்துரையாடல்களிலும் அறியக்கூடியதாய் இருந்தது. எனினும் அனைத்துத் தடைகளையும் தாண்டி பல பெண்கள் தொடர்ந்தும் தொழிலில் முன்னேறிக் கொண்டுள்ளனர்.

இவர்கள் தொழில் ரீதியாக மாத்திரமன்றி தமது தொழில் உரிமை தொடர்பாகவும் பேசத் தொடங்கிவிட்டனர். இதற்காக ஒட்டோ சங்கம், பனம் பொருட் சங்கம், சந்தைப்படுத்தலும் கடையும் (சுரபி) போன்ற பல்வகை அமைப்புகளாக ஆரம்பித்து, அவை ஒன்றிணைந்த பெண்களின் தொழில் சார் சங்கமாகி அதற்கூடாக தமது தொழில் அமைப்புக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டுள்ளனர். இப் பெண்களின் தொழில் நடவடிக்கைக்கு உதவியாக இவர்களுக்கு பெண்ணிய பொருளாதாரப் பயிற்சி தொடராக நடைபெற்றுக் கொண்டுள்ளது. இதில் பனம் பொருட் சங்கமானது தனியார் அமைப்புக்களுடனும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்துடனும் இணைந்து செயற்படுகின்றது.

இவர்களது "சுரபி" கடைத் தொகுதி மயிலம்பாவெளியில் உள்ள மனச்சோலை காணியில் நிறுவப்படும். அங்கு சூழலைப் பாதிக்காத, இரசாயனம் அற்ற உற்பத்திகள், பெண்களின் கைப்பணிப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன் மூலிகை மரங்களும் நடப்படும்.

தற்போது வருடம் ஒரு தடவை இக் காணியில் பெண்களின் "உற்பத்திப் பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும்" இடம் பெற்று வருகின்றது.

இப் பெண்களின் தொழில் முயற்சி ஆய்வு நடவடிக்கையில் இப் பெண்களை நேர் காணல்கள் செய்ய பின் வருவோர் உதவினர். அவர்களுக்கு சூரியாவின் நன்றிகள்.

ஆய்விற்கு உதவியவர்கள்

» செல்வம் உதயமதி
» சுசிராஜ் ஜெகதீஸ்வரி
» ரசிகரன் ஜெயா
» மரியதாஸ் லெட்சுமி
» அரவிந்தன் ரொசானி
» புவிதராஜா கோகிலவாணி
» சுகுமார் வர்ணா
» இஸ்மையில் சியானா

**அ. இலங்கேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தன்னால் முடியும் பெண்ணால் முடியும்

எனது பெயர் ச.லெ.ஜின்னத்தும்மா நான் ஆறுமுகத்தான் குடியிருப்பு முஸ்லிம் பிரிவில் அல்ஷிதாயத் நகர் எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது வயது 61. எனது கணவர் மரணித்து 14 வருடங்கள் ஆகின்றன. எனக்கு ஒரு ஆண்பிள்ளை அவரும் திருமணம் முடித்து விட்டார். தற்போது நான் தனியாகவே வாழ்ந்து வருகின்றேன்.

எனது ஆரம்ப கால சுயதொழில் கோழி வளர்ப்பு. இத் தொழிலை நான் திருமணமாகி ஒரு வருடத்தில் ஆரம்பித்தேன். அப்போது எனது வயது 24. எனது கணவரின் சுயதொழிலும் கோழி வளர்ப்பாக இருந்ததால் நாங்கள் இருவரும் இணைந்தே இத் தொழிலை செய்தோம். எனது கணவர் சந்தைக்குச் சென்று கோழிகளை விற்பனை செய்வார். நான் எனது கிராம மக்களுக்கு வீட்டில் இருந்தபடியே கோழி முட்டைகளை விற்பனை செய்வேன்.

எனது கணவர் கோழி விற்பனையில் நாள் ஒன்றிற்கு 1000 ரூபாய் கொண்டு வந்து தருவார். இவை 1980 ஆண்டு இடம் பெற்றவை. அப்போது விலை வாசிகள் குறைவு. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்துத்தான் மாடு வாங்கி வளர்த்தோம். பின் படிப்படியாக இச் சுயதொழில் முன்னேற்றம் அடைந்தது. சிறுகடை ஒன்றையும் அமைத்தோம். அப்போது எங்கள் கிராமத்தில் இரு சில்லறைக் கடைகள்தான் காணப்பட்டன. அப்போது எங்கள் வாழ்வாதார நிலை சிறப்பாக அமைந்திருந்தது..

அதன் பிறகு 1985இல் இடம் பெற்ற வன்செயலில் எனது சிறு கடை கொள்ளையடிக்கப் பட்டது. இதில் எங்களுக்கு ரூபாய் 25000 பெறுமதி யான பொருட்கள் நஷ்டம் ஏற்பட்டது. அத்தோடு ஆறு மாடுகள் களவு போனது. கோழிகள் சைக்கிளுடன் திருட்டுப்போனது. இதற்கான சகல ஆதாரங்களும் என்னிடம் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் சிறுகடைக்குப் பதிலாக பன் தட்டு, பெட்டி என்பவற்றை இழைத்தேன். தையல் தொழில் செய்தேன். எனது கணவரும் கோழி வியாபாரத்தை மேற் கொண்டார். இவ்வாறு எங்களது வாழ்க்கை, சுய தொழில் என்பனவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது. சில காலங்களில் எனது கணவர் சுகயீனம் அடைந்தார். 2003ம் ஆண்டு கணவர் மூச்சு வருத்தத்தினால் மரணமடைந்தார்.

எனது கணவரின் மரணத்தின் பின் நாலு மாதங்களும் பத்து நாட்களும் "இத்தா" கடமை முடித்து மீண்டும் சுயதொழிலை ஆரம்பித்து அன்றில் இருந்து இன்று வரை செய்து வருகின்றேன்.

அது மட்டுமின்றி எமது கிராமத்தில் நடை பெறும் பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றுவேன். உழைக்கும் மகளிர் சங்கக்கூட்டம், கிராம அபிவிருத்தி சங்கக்கூட்டம் போன்ற கூட்டங்களிலும் பங்குபற்றுவேன். இவ்வாறான பொதுக்கூட்டங்களிலும் கலந்து கொண்டதன் காரணத்தினால் எங்கள் கிராமத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் வருவது தெரிய வந்தது. அதில் நானும் ஒரு அங்கத்தவராக கலந்து கொண்டேன். தற்போது தலைவி என்ற பொறுப்பில் உள்ளேன்.

"சூரியா"வினால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி மூலம் மாடு ஒன்று வாங்கினேன். ஏற்கனவே என்னிடம் ஒரு மாடு, நாலு ஆடுகள், பத்துக் கோழிகள் என்பன இருந்தன. வாழ்வாதார உதவியாகக் கிடைத்த மாட்டுடன் சேர்த்து இரு மாடுகள் ஆனது. அவை விருத்தி அடைந்து மூன்று மாடுகள் ஆனது. இவ்வாறு சுயதொழிலாக ஆடு மாடு கோழி வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் என்பவற்றை மேற் கொள்வதில் எனது அன்றாட வாழ்க்கை நகர்ந்து செல்கின்றது.

நான் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து உடல் சுத்தம் செய்து, கடவுளை வணங்கி பின் இரு வரிப் பாய் இழைத்து வைத்து விட்டு வீடு, முற்றம் சுத்தம் செய்வேன். பிறகு காலைத் தேனீர் அருந்திவிட்டு கோழிக்கான தீனியையும் போட்டு விடுவேன்.

காலை எட்டு மணிக்கு ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்குச் கொண்டு செல்வேன். எங்கள் கிராமத்தில் உள்ள காணிகளில் தான் மேய்ச்சலுக்காக மாடுகளை விடுவேன். தூர இடங்களில் மாடுகளைக் கட்டினால் அங்கு வருபவர்கள் வேண்டும் என்றே அவற்றை அவிழ்த்து விட்டுச் செல்வார்கள். அதனால் பெரிதும் கஷ்டப்பட்டுள்ளேன்.

காலை 10 மணியளவில் பகல் உணவு சமைக்க ஆயத்தமாவேன். என்னிடம் தொலைக் காட்சி செய்தி கேட்கும் பழக்கமும் உண்டு பின்னர் பனிரெண்டு மணியளவில் "லுஹர்" தொழுகையை முடித்துவிட்டு ஓய்வெடுப்பேன். பின்னர் மரவள்ளிக் கிழங்கு சீவல் செய்யும் இடத்திற்குச் சென்று மரவள்ளித் தோல்களை மாட்டுக்கு எடுத்து வருவேன். நான் போகாத நாட்களில் அவர்களே எடுத்தும் வைத்திருப்பார்கள். பிறகு மாலை நாலு அல்லது ஐந்து மணியளவில் மாட்டினை மீண்டும் வீட்டுக்கு கொண்டு வந்து சேர்ப்பேன். பின் அவைகளை அடைத்து வைத்து விட்டு தீன், தண்ணீர் கொடுத்து விட்டு வருவேன். பிறகு ஆறு மணியளவில் "மஹரீப்" தொழுகை முடிந்த பிறகு இரவு பத்து மணி வரைக்கும் ஓலை கிடுகு பின்னுவேன். பின் பதினொரு மணியளவில் தூங்கச் செல்வேன்.

இவ்வாறு எனது அன்றாட வாழ்க்கை இறைவனின் துணையுடன் ஆரம்பமாகின்றது. இவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்தினால் தான் எனது அன்றாட வாழ்க்கைத் தேவையினை நிறைவு செய்கிறேன். இடையிடையே எனது மகனும் கவனிப்பார். அரசின் உதவியான சமூக உதவிப் பணமாக (p.m.a) மாதம் ரூபாய் 300 கிடைக்கின்றது. சமுர்த்தி உதவிப்பணமும் கிடைக்கும். அத்துடன் மாடு வளர்ப்பினை மேற் கொள்வதற்காக வாழ்வாதார உதவியினை செய்து தந்த சூரியா பெண்கள் அமைப்பிற்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் என்னைப் போன்று இன்னும் எத்தனையோ பெண்களும், வயதான பெண்களும் சுய தொழில் செய்துதான் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். அவர்களுக்கும் சூரியா இது போன்ற வாழ்வாதார உதவியை செய்து கொடுப்பதோடு இன்னும் எங்கள் கிராமத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் பணியாற்ற வேண்டும் என்பது என் எண்ணம் ஆசை ஆகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இழைக்கப்படும் வாழ்வு

தாழங்குடா கிராமத்தில் உள்ள மகேஸ்வரிக்கு வயது 40. இவளுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும், மூன்று ஆண் பிள்ளைகளும் உள்ளனர். அனைத்து பிள்ளைகளும் படித்துக் கொண்டுதான் உள்ளனர். இப் பெண்ணின் கணவர் மேசன் வேலை செய்பவர். இவருடைய வருமானம் கூடுதலாக இருந்தாலும் அதனை அவர் குடித்துவிடுவார். குறைந்த பணத்தைத்தான் வீட்டுச் செலவுக்காகக் கொடுப்பார். இப் பணம் குடும்ப செலவுக்கு போதாமையினால் மகேஸ்வரி இரவும் பகலுமாக உழைத்தார்.

மகேஸ்வரி ஆரம்பத்தில் விறகு வெட்டி விற்று வந்தாள். அத்துடன் வீட்டு வேலைக்கும் செல்வாள். ஒரு பை விறகு 150 ரூபாய். வீட்டு வேலைச் சம்பளம் 500 ரூபாய். இவ்வாறு கஷ்டப்பட்டு குடும்பத்தை கரை சேர்க்க கட்டியிழுத்தாள்... அதே நேரம் கிராமத்தில் நடை பெறும் கூட்டங்களிலும் பங்கு பற்றுவார். 2010ம் ஆண்டு மகளிர் சங்கத்தில் இணைந்து கொண்டார். சுயதொழில் மூலம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதும் பெண்களுக்கு உதவி செய்வதும் இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இச்சங்கத்தின் உதவியின் ஊடாக மரக்கறி வியாபாரம் செய்து வந்தாள். இவள் தன் மரக்கறி களை வீடு வீடாகக் கொண்டு விற்பாள். இவ்வாறு வியாபாரம் செய்து கொண்டு வரும் வேளையில் மழைக் காலம் ஒன்றில் மரக்கறி பழுதடைந்து கடும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. எனினும் தனது சுயதொழிலைக் கைவிடாது மாற்றுத் தொழிலாக ஆடை வியாபாரம் மேற் கொண்டாள். இவளுக்கு உதவியாக அவளது இரு மகள்மாரும் இணைந்து இத் தொழிலை மேற் கொண்டனர். இவர்கள் தமது குடும்ப வாழ்வாதார வருமானத்தை மேம்படுத்த படித்துக் கொண்டே தாயுடன் தொழிலை மேற் கொண்டதால் இவர்களுடைய குடும்பம் சிறப்பாக அமைந்தது மட்டுமன்றி இவர்கள் பெண்கள், ஆண்கள் சிறுவர் இல்லத்திற்கும் காலை, மாலை உணவு சமைத்தும் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரி, காலையில் நாலு மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்து இறைவனை வணங்கிய பின் காலை உணவு தயாரித்து வீடு முற்றம் சுத்தம் செய்து, மதிய உணவு சமைத்து, காலை எட்டு மணியளவில் வேலைக்குச் செல்வார். விடுதிக்குச் சென்று முற்றம், பாத்திரம் என்பவற்றை சுத்தம் செய்து விட்டு அங்குள்ள 30 பிள்ளைகளுக்கும் பகல் உணவு தயார் செய்து விட்டு பாத்திரங்களை சுத்தம் செய்த பின் ஓய்வெடுப்பார். மாணவர்கள் பாடசாலை விட்டு வந்து உணவு சாப்பிட்ட பின் பாத்திரங்களை சுத்தம் செய்து வைத்துவிட்டு மூன்று மணியளவில் தேனீர்போட்டு கொடுத்த பின் இரவு உணவுனைத் தயார் செய்வார். அதன் பின் 5.30 மணியளவில் வீடு திரும்புவார். 6.30 மணிக்கு வீட்டிற்கு வந்து இரவு உணவு தயாரிப்பார். இரவு உணவை எல்லோரும் சேர்ந்து உண்பார்கள்.


இவர்கள் அனைவரும் இவ்வாறு ஒன்றாக வேலை எல்லாம் முடித்து தொலைக்காட்சி பார்த்து விட்டு தூங்கச் செல்வார்கள். இவ்வாறே மகேஸ்வரியுடைய அன்றாட வாழ்க்கை இயங்குகிறது. இவருக்கு மாதம் ஒன்றிற்கு 15000 ரூபாய் வருமானமாகக் கிடைக்கின்றது. தனது குடும்பக் கஷ்டத்தை மனதில் கொண்டு எனினும் தனது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் வீடுவீடாகச் சென்று தொழில் செய்து வருகிறார். மகேஸ்வரி ஓரளவிற்கு தனது குடும்பம் தற்போது உயர்வடைந்துள்ளதாகக் கூறுகிறார்.

தன்னைப்போல் அனைத்துப் பெண்களும் சுயதொழிலில் ஈடுபட்டால் அவர்களது குடும்பமும் முன்னேற்றம் அடைவதுடன் யாரிடமும் கையேந்தி நிற்கத் தேவையில்லை, சுயமாக நாம் முன்னேறிச் செல்லலாம் என்று இவர் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

# சிரித்திடலாம்

தூங்கி வழிந்தபடி
என்னருகே ஒருவன்
அவனருகே அவன் மனைவி
அவன்
கைகளை நீட்டி
சில்மிசம் செய்தபடி
சின்னப் புன்முறுவல்
பூக்கின்றான்
மனைவியின் முறைப்பும்
அவளது கோபமும்
அவனது மயக்க நிலையில்
தெரியவில்லை
பளீர் என மின்னல்
வெட்டியது போல்
ஒரு அடி
அவன் தொடையில்
விழுகிறது.
அவன்
திடுக்கிட்டு நிமிர்ந்தும்
தூங்கி வழிந்தபடி
அருகிலுள்ள என்னில்
சாய்கின்றான்
'வீட்டுக்கு வா
உனக்குத் தருகிறேன்.'
என்றாள் பார்
அவன் மனைவி
இவள் அல்லவா
நவயுக நளாயினி!

- வாசுகி குணரத்தினம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான் பேரின்பராணி. கடந்த காலங்களை உங்களுடன் இணைந்து திரும்பிப் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யுத்த காலங்களில் இடம் பெற்ற, இடம் பெயர்வுகள் என்பது எல்லோருக்கும் தலைவிதியானது போல் நானும் இடம் பெயர்ந்து தற்போது மயிலம்பாவெளியில் வாழ்ந்த வருகின்றேன். எனக்கு வயது 52. நான் எனது சகோதரங்களுடனும் அவர்கள் பிள்ளைகளுடனும் வாழ்ந்து வருகிறேன். எனது வாழ்வை, அதன் வரலாற்றை திரும்பிப் பார்க்கையில் எனது வெற்றிகளை உணர்வதுடன், இதனை வெற்றி கொண்டதும் நான்தானா என்ற கேள்வியில் திகைத்து நிற்கிறேன்.

எனக்கு ஒன்பது சகோதரர்கள். எங்கள் குடும்பத்தையும் யுத்தம் எனும் கொடிய நோய் மரணம் வரை கொண்டு சென்றது. என் இரு சகோதரர்களை இராணுவத்தினர் கடத்திச் சென்றனர். தப்பிப் பிழைப்போராக இடம் பெயர வேண்டிய சூழல். இதனால் என் உயிராய் இருந்த புல்லுமலையில் என் நில புலன்கள், சொத்துக்கள், நினைவுகள் கனவுகள் அத்தனையையும் தொலைத்துவிட்டு தாய்க்கும் சகோதரிக்கும் துணையாக சோகப் பயணம் மேற்கொண்டு மயிலம்பாவெளியில் குடியேறினேன்.

எனது அப்பா இறந்து விட்டார். எனது அம்மாவும் தனியாகத்தான் இருந்தார். எனது தங்கையுடன் நாங்கள் மூவர். அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றி எனது தாயையும் சகோதரியையும் பராமரித்தும் பாதுகாத்தும் வந்தேன். காலங்கள் உருண்டோடின எனது அம்மா வயது முதிர்ந்தவள். நோய் வாய்ப்பட்டு என்னையும் என் சகோதரியையும் விட்டுப்பிரிந்தாள். நானும் என் தங்கையும் அநாதைகளானோம். என் மூத்த சகோதரர்களின் அன்பும், அரவணைப்பும் ஆறுதலளித்தது. நானும் தங்கையும் வாழப்பழகிக் கொண்டோம். இருவருமே வேலைக்குச் சென்றோம்.



# தோப்பில் இருந்தாலும் ஒவ்வொரு மரமும் தனி மரம் தான்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இரண்டு பேருக்குமே திருமணம் நடக்கவில்லை. எனது வாழ்க்கையை நானாகவே வெறுத்தேன். காரணம் எனது அக்காவின் கணவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கடத்தப்பட்டார். எனது அக்காவும் மூன்று பெண் பிள்ளைகளும் கடும் கஸ்டத்திற்கு ஆளானார்கள். நானும் அக்காவுடன் சேர்ந்து அந்தப் பிள்ளைகளுக்காகவே கஸ்டப்பட்டேன். எனினும் எமனுக்கு எனது குடும்பத்தின்மேல் அதிக அன்புபோல். எனது சகோதரியையும் என்னிடம் இருந்து பிரித்தெடுத்து விட்டான். ஏன் எதற்கு என்று எனக்கு இன்னும் விளங்கவில்லை. தங்கையும் தூக்குப்போட்டுத் தன்னுயிரை மாய்த்து விட்டாள்.

எனக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை என்னை நானே மாய்த்துக் கொள்ள விரும்பினேன். எனது அக்காவின் பிள்ளைகள், எனது மூத்த சகோதரர்களின் உறவுகள் எல்லாம் தூக்குக்கயிற்றை பாசக்கயிறாக இறுக்கியது. அவர்களுக்காகவே வாழத்தொடங்கினேன். ஆனால் என் சோகம் என்னை விட்டு வைக்கவில்லை நான் நோய்க்குள்ளானேன். என் சகோதரர்களும் அவர்களது பிள்ளைகளும் வேலைக்குப் போக வேண்டாம் என என்னை வற்புறுத்தினார்கள். நான் வேலையை விட்டு விலகினேன். எனது அக்காவின் மகளின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் தான் வாழ்ந்து வந்தேன்.

இவ்வாறு எனது வாழ்வு சென்றுகொண்டிருக்கையில் சூரியா பெண்கள் அமைப்புப் பற்றியும் அதன் சேவை பற்றியும் எனக்குத் தெரிய வந்தது. 2013ம் ஆண்டு நானும் அதில் ஒரு அங்கத்தவரானேன். எங்களுரில் நாங்கள் ஒரு சங்கமாகினோம். எனக்கும் வாழ்வாதார தொழில் செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. எனக்குக் கிடைத்த வாழ்வாதார உதவி என்றால் இதுதான். அவர்களால் வழங்கப்பட்ட மா அரைக்கும் இயந்திரம். இது எனது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பாக அமைந்ததெனலாம். நான் சரியாக காலை 5.30 மணிக்கு எழுந்து எனது காலைக் கடன்களை முடித்து விட்டு 6 மணிக்கு பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்து விட்டு தேநீர் போட்டுக் குடிக்கையில் மா அரைப்பதற்காக மக்கள் வரத் தொடங்குவார்கள். கலை 9.00 மணிக்குள் மா அரைத்துக் கொடுத்தல், இடம் துப்பரவு செய்தல் போன்ற வேலைகளை முடிப்பேன். மதிய உணவு தயாரிப்பது அக்காவின் மகள் வீட்டில். அங்கு காலை 10..30 மணிக்குள் சென்று விடுவேன். அக்காவின் மகளும் நானும் இணைந்து உணவினைத் தயாரிப்போம். பகல் 12..30 இல் இருந்து 1..30 இற்குள் எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவோம். பின்னர், 1..30 இல் இருந்து 3..30 மணிவரை தூங்குவேன்.

தூங்கி எழுந்து வீட்டிற்கு வந்து கை, கால் அலம்பி சரியாக பின்னேரம் 4.00 மணியளவில் அரைத்து வைத்த மாவினை வறுக்கத் தொடங்குவேன். பின் அதனை உலர வைத்தல், பக்கட் பண்ணல், வேலை செய்த இடத்தினை சுத்தம் செய்தல் என தொழில் சார்ந்த வேலைகளை சரியாக ஆறு மணிக்குள் முடித்துவிட்டு எனது வீட்டு, ஏனைய வேலைகளைத் தொடர்வேன். இவற்றை சரியாக 7.00 மணிக்குள் முடித்துவிட்டு இரவு உணவினையும் எடுத்துக்கொண்டு அக்காவின் மகளின் வீட்டிற்கு என்னுடன் இருக்கும் மற்றய அக்காவின் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தூங்குவதற்காக சென்று விடுவேன். அங்கு இவர்கள் இருவருக்கும் 7.00 மணி தொடக்கம் 9.00மணி வரை பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு இரவு சாப்பாட்டையும் முடித்து விட்டு நித்திரைக்குச் செல்வேன்.

இவ்வாறுதான் என்னை அடுத்தவர் பராமரிக்க நான் அவர்களைப் பராமரிக்க என எனது வாழ்க்கை தொடர்கின்றது. எவ்வாறெனினும் நான் சொந்தக் காலில் நிற்கின்றேன். நான் சொந்தக் காலில் நிற்கக் காரணம் எனது சுயதொழிலாகும். இது எத்தனையோ எனது தேவைகளில் பலவற்றை இலகுவாக நிறைவு செய்ய உதவுகிறது. எனினும் நான் எதிர்கொள்ளும் பாரிய சவால் எனது "ஆஸ்த்துமா"(தொய்வு) நோயும், இரண்டு வருடங்களைக் கடந்து தற்போது தேய்வினை, உடைவினை சந்திக்கும் மா அரைக்கும் இயந்திரமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் தாழைநகர் எனும் பெயர் போன தாழங்குடாவில் அவதரித்து மிளிர்கிறாள் லெட்சுமி. இவள் வைரமுத்துவிற்கு இரண்டாவது மகளாக பிறந்தவள். குடும்ப சூழ்நிலை காரணமாக தரம் ஒன்று வரையும் தாழங்குடாவில் கல்வி கற்றாள். பெற்றோர் தன்னை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பாமையால் அவளுக்கு எழுத வாசிக்க முடியவில்லை தனது பெயர் கூட எழுதத் தெரியாத நிலமை ஏற்பட்டது. இதனால் அவளுக்கு ஏற்பட்ட இயலாமை என்ற கவலையும் காலப்போக்கில் இயல்பாகிப் போனது.

இவளது திருமணம் 18 வயதில் சிங்கராஜா என்பவருடன் நடந்தது. அவளுக்கு இரு பிள்ளைகள் பிறந்தன. அதில் ஒரு ஆண் குழந்தை பிறந்து 8 நாட்களில் இறந்து விட்டது. இதனால் அவள் பெரிதும் கவலை அடைந்தாள். ஆனால் அக் கவலையை வெளிநபர்களிடம் காட்டிக்கொள்ள வில்லை. சந்தோஷமாக இருப்பது போல் காணப் பட்டாள். அதன் பின் சில மாதங்களுக்குப் பிறகு ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சில காலங்கள் இவ்வாறே ஓடின ஆனால் அந்த சந்தோஷமும் நிலைக்கவில்லை அப் பிள்ளையும்

# காலடி இருள்

# கை விளக்கு





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறந்துவிட்டது. சிறிது காலத்தின் பின் அவளுடைய கணவரும் இறந்து விட்டார். மீண்டும் அவளுடைய வாழ்வு இருட்டாகிவிட்டது. அவள் எல்லாவற்றை யும் இழந்து தனிமையில் வாடினாள்.

தனிமையில் வாடினாலும் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் இழக்கவில்லை தன்னைத் தானே தலைமை தாங்கும் பெண்ணானாள். வறுமை அவளை வாட்டியது அவளுக்குத் தெரிந்த பாய் பின்னும் தொழிலை மேற் கொண்டு வருமானத்தைப் பெற்று வாழ்க்கையை நடாத்தி வந்தாள். இவளு டைய பேச்சு மற்றவரை கவரக்கூடியதாகவும் பிறரை சிரிக்க வைப்பதாகவும் இருக்கும்.

பின்னர் தனது கிராமத்தில் சூரியா பெண்கள் அமைப்பினால் தென்றல் மகளிர் சங்கம் ஒன்று உருவானதாகவும் அது பெண்கள் பிரச்சினைகளை தீர்ப்பதாகவும் கணவனை இழந்தவர்களுக்கு உதவி செய்வதாகவும் அறிந்தாள். அதனால் அச்சங்கத்தில் அவளும் இணைந்து கொண்டாள். அதன் பின் அவளுடைய வறுமையையும் தொழில் ஊக்கத்தையும் அறிந்து 2016 ம் ஆண்டு சூரியாவினால் ஓலை மட்டை விற்பனை, பாய் விற்பனை என்பவற்றிற்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தான் முதலில் பாய் பின்னும் தொழில் மட்டுமே செய்து வந்ததால் குறைந்த வருமானம் கிடைத்ததாகவும் கூறினாள். ஆனால் சூரியாவினால் வாழ்வாதார உதவி பெற்றதன் பின் வருமானத்தை கூடுதலாப் பெற்றுக் கொண்டாள். மாதம் 2000 ரூபாய் மற்றும் 2500 ரூபாய் வரை மாதாந்த வருமானம் வருவதாகக் கூறுகிறாள். மாதம் 15 அல்லது 17 பாய் பின்னும் லட்சுமியின் பாய்களை வீட்டுக்கு வரும் மொத்த வியாபாரி ஒரு பாய்க்கு 100 ரூபாய்ப்படி கொடுத்து கொள்ளவனவு செய்கிறார்.

லட்சுமி ஓலைமட்டை, பாய் பின்னுவதற் கான ஓலை என்பவற்றை காசு கொடுத்து வாங்கு வாள். ஆனால் தற்பொழுது அவ்வாறு வாங்கு வதில்லை ஏனெனில் மட்டைகளை வீடுகளுக்குச் சென்று இலவசமாகப் பெற்றுக் கொள்வதாகவும் மற்றும் பனை ஓலைகளை காடுகளுக்குச் சென்று வெட்டி எடுத்து வந்து காயவைத்து சாயம் போட்டு எடுப்பதாகவும் கூறினாள்.

இவ்வாறு தொழில் செய்த இவளுக்கு கண்பார்வை குறைவு ஏற்பட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கண்பார்வைக்கான சத்திர சிகிச்சை மேற் கொண்டாள். இதனால் 3 மாதம் தொழிலும் செய்ய முடியாமல் போனது. தற்போது கண்பார்வை சரியாகிவிட்டது.

இவளுக்கு சமுர்தியினால் மாதாந்தக் கொடுப்பனவாக ரூபாய் 2000.00 வழங்கப்படுகிறது. வீட்டில் மின்சார வசதி இல்லாததால் குப்பி விளக்கின் ஒளியல் இவள் இரவுகளின் இருள் அகற்றப்படுகிறது.

நாளாந்த வேலைகளைச் செய்வதற்காக அதிகாலை 4..30 க்கு எழும்பினாலும் இருள் காரணமாக வீட்டிற்குள் இருப்பதாகவும் 5.00 மணியளவில் வீட்டு வேலைகளை முடித்து விட்டு அருகில் உள்ள பெண்ணின் வீட்டுக்குச் சென்று அவரது வீட்டு வேலைகளை முடித்து மீண்டும் வீட்டிற்கு வந்து ஏனைய வீட்டுக் கடமைகளை முடித்து, காலை 9.00 மணியளவில் பாய் பின்ன ஆரம்பித்து 11..30 மணியளவில் வேலையை இடை நிறுத்தி, மதிய உணவு வேலைகளை முடித்து, உணவு உண்டு, மீண்டும் வேலைகளை ஆரம்பித்து பி.ப 3..30 வரை செய்து முடித்து, பி.ப 4.00 மணியளவில் ஓலை மட்டை வெட்டச் சென்று, மாலை 5..30க்கு வீடு வந்து, மீண்டும் இரவு 8.00 மணிவரை பாய் இழைத்து, அதன் பின் இரவு சமையல் வேலைகளை முடித்துவிட்டு 9.40 மணிய ளவில் நித்திரைக்குச் செல்வாள். இவள் வீட்டுக் கடிகாரத்தைப் போன்று லட்சுமியின் ஒவ்வொரு நாளும் இவ்வாறு மீண்டும் மீண்டும் சுழலும்.

தனது முயற்சி, சூரியாவின் உதவி, இதனால் தற்போது சூரியாவால் வழங்கிய பணத்தொகையை விட இரு மடங்கு பணம் சேமித்து இருப்பதாகக் கூறினாள். மேலும் இவளுடைய வாழ்வானது கடல் மாதிரி நீண்டு கொண்டே செல்வதுடன் தனக்கு 69 வயது ஆனாலும் 20 வயது இளமையுடன் இருப்பதாகக் கூறுகிறாள்.

"பாதைகள் மாறலாம் பயணங்கள் மாறாது என்பதற்கமைய இவளுடைய பாதைகள் அமைகின்றன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோசமாக வாழப்போறன்

**நா**ன் நிவேதினி ஆறுமுகத்தான் குடியிருப்பு எனும் கிராமத்தில் ஒரு வறிய குடும்பத்தில் மூன்றாவது பெண் பிள்ளையாகப் பிறந்தேன். எங்களை எங்களது பெற்றோர்கள் கூலி வேலை செய்து வளர்த்தனர். இப்போது எனது வயது 28. நான் தற்போது திருமணமாகி குடும்ப வாழ்வில் ஈடுபட்டு வருகின்றேன். எனக்கு இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். இருவரும் பாடசாலைக்குச் செல்கின்றனர். நான் கஸ்டப்பட்ட மாதிரி எனது பிள்ளைகளும் கஸ்டப்படக்கூடாது என நினைத்துக் கொண்டு இந்தச் சுயதொழிலில் ஈடுபட்டு எனது அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றேன்.

எனது குடும்ப பொருளாதாரச் சூழல் காரணமாக என்னால் முழுமையாகக் கல்வி கற்க முடியவில்லை. எனது கல்வியை தரம் பத்து வரை முடித்து விட்டு தும்புக் கைத் தொழில் நிலையத்தில் இரண்டு வருடம் தொழில் புரிந்தேன். சம்பளம் ரூபாய் 6000.00 அப் பணத்தில்தான் எனது தேவையைப் பூர்த்தி செய்து வந்தேன். சில காலத்தின் பின்னர் எனக்கு திருமணமானது. திருமணமாகி ஒரு சில காலம் சந்தோசமாக வாழ்ந்திருப்பேன். அதன் பிறகு வீட்டுப் பிரச்சினை, வீட்டு வன்முறை என்ற சிக்கல்கள் என் வாழ்வையும் புரட்டிப் போடத் தொடங்கியது. அத் தருணத்திலே ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தேன். இவ்வாறு தொடர்ந்தும் தீராத இப் பிரச்சனைகளால் ஒரு நாள் எனக்கு நானே தீ வைத்துக் கொண்டேன். ஆனால் அதிஷ்ட வசமாக உயிர் தப்பி விட்டேன். பின்னர் கொழும்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்றேன். ஆனால் குழந்தைகளைப் பார்பதற்கு ஊரில் உதவி இல்லாததால் அங்கும் முழுமையாக என்னால் வேலை செய்ய முடியவில்லை. பின்னர் மட்டக்களப்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் சேர்ந்து இரண்டு மாதம் வேலை செய்தேன். அதன் பின்னர் ஏறாவூரில் உள்ள ஒரு வீட்டில் கிழங்கு சீவல் தொழிலுக்காகச் சென்றேன். அங்கு தொழில் செய்து கொண்டிருக்கையில் அத் தொழிலை கற்று சுயமாக தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் எழுந்தது. சுயதொழில் செய்வதற்கான வருமானம் இல்லாத போதிலும் எப்படியாவது இத் தொழிலைத் தொடர வேண்டும் எனும் விடா முயற்சி எனக்குள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது.

இதனால் இருந்த ஒரு சிறு "முதல்" கொண்டு தொழில் தொடங்கினேன். அது எனது சொந்த முயற்சியாக இருந்தது. கணவர் கூலி வேலை செய்து கொண்டு வரும் பணத்தை வைத்து அன்றாட வாழ்க்கையை நடத்தியதுடன் நான் செய்த சுயதொழிலில் வரும் வருமானத்தைக் கொண்டு அத் தொழிலை சற்று விரிவாக்கத் திட்டமிட்டேன். அவ்வாறானதொரு தருணத்தில்தான் எங்களது கிராமத்தில் சூரியாப் பெண்கள் அமைப்பு கடமையாற்ற ஆரம்பித்தனர். இதனால் அவர்களால் எங்களூரில் உருவாக்கப்பட்ட பெண்கள் சங்கத்தில் நானும் ஒரு அங்கத்தவராகி சேமிப்பும் செய்து வந்தேன்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வறிய குடும்பத்தைச் சேர்ந்த சிறு கைத் தொழில் முயற்சியாளர்களை குறிப்பாக பெண் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து முன்னேற்றுவது அவர்களது திட்டத்தின் நோக்கமாகும். இந் நோக்கத்திற்கமைய "சூரியா" எனது தொழில் முன்னேற்றத்திற்கும் உதவியது. இதனால் நானும் எனது தொழிலை மேம்படுத்திக் கொண்டேன். தொழிலை ஆரம்பிக்கும்போது எனது வருமானம் குறைந்தளவில் காணப்பட்டது. தற்போது ரூபாய் 5000-6000 வரை வருமானமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் எனது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும். குடும்பத்தை சந்தோசமாக கொண்டு செல்லக் கூடியதாகவும் உள்ளது.

நான் தினமும் அதிகாலை 4.30 மணியளவில் எழும்பி காலைக்கடன்களை முடித்து விட்டு சிறிது நேரம் சீவல்களைப் பக்கட் பண்ணுவேன். ஆறுமணியளவில் வேலைகளை முடித்து விட்டு ஏழு மணிக்கு எனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்து விட்டு கிழங்கு சீவல்களைத் தரம் பிரிப்பேன். 11.00 மணியளவில் மதிய உணவு தயார் செய்யவேன். பகல் உணவின் பின் தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டே பொதிகளை தயார்செய்து முடிப்பேன். அவற்றை சைக்கிளில் எடுத்துச் சென்று கடைகளுக்கு கொடுத்து விட்டு அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து மீண்டும் சீவல் செய்வதற்கான பொருட்களை வாங்குவேன். இதன்போது கடைகளுக்கு அதிகமாக தேவைப்படும் பட்சத்தில் பொருட்களை அதிகமாக வாங்கி சீவல் செய்ய வேண்டிவரும்.

இவ்வாறு எனது வியாபாரத்தை முடித்து விட்டு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு அம்மாவிடம் பிள்ளைகளை கூட்டிச் சென்று விடுவேன். அதன் பின்னர் சகல வேலைகளையும் முடித்து விட்டு வரவு செலவுகளையும் பார்த்து விட்டு மிகுதியாக இருக்கும் வேலைகளைத் தொடங்குவேன். கிழங்கு சீவுவது, துப்பரவு செய்து பக்கட் பண்ணுவது , லேபல் ஒட்டுவது , விலை தீர்மானிப்பது , நிறை பார்த்து பொதி செய்யப்பட்டவற்றை தரம் பிரித்து வைத்து விட்டு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று மீண்டும் பார்ப்பது.... இரவு 11.00 மணியளவில் தூங்கச் செல்வேன்.

இவ்வாறு எனது வேலைகள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டே இருக்கும். நான் துணிவுடன் தொடர்ந்து செல்கையில் எனக்கு எத் தடைகள் வந்தாலும் எனது முயற்சியும், எனது தன்னம்பிக்கையும் என்றும் பக்க பலமாய் எனக்கிருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் எனக்கில்லை. இதில் முக்கியமாக எனது தொழிலுக்காக உதவி செய்த எனது நிறுவனமான சூரியா நிறுவனத்தை அடிக்கடி நினைவு கொள்கிறேன்.



மயிலம்பாவெளியில் உள்ள மனச்சோலைக் காணியில் பெண்கள் தமது தொழில் வாழ்வு சார்ந்து கலந்துரையாடல் நடத்துகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவுகள் பேசவேண்டும்

சிவஞானம் சரஸ்வதி நொச்சிமுனையில் உள்ள மீள்குடியேற்றப் பகுதியில் வாழ்கிறார். இவரது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். இவருக்கு பிறப்பிலேயே வாய் பேச முடியாத இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். தனது குடும்பத்தையும் தனது கனவுகளையும் எம்முடன் பின்வருமாறு சரஸ்வதி பகிர்ந்து கொண்டார்.

எனது ஆரம்பத் தொழில் கோழி வளர்ப்பாக இருந்தது. திருமணமாகி சில காலத்திலேயே இத் தொழிலைத் தொடங்கி விட்டேன். எனினும் பிள்ளைகள் பிறந்த பின்பு தொழிலை இடை நிறுத்தி கணவரின் உழைப்பிலேயே வாழ்க்கையை நடத்தி வந்தேன். எனினும் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கிய பின்னர் வருமானமும் குறைய செலவுகளும் அதிகரித்தது. இதனால் தையல் தொழிலை மேற்கொண்டு சிறிது வருமானம் ஈட்டத் தொடங்கினேன்.

அத்துடன் எங்கள் கிராமத்தில் நடைபெறும் மகளிர் சங்கக் கூட்டம், கிராம சங்கக் கூட்டம் போன்ற பொதுக் கூட்டங்களிலும் பங்கு பற்றுவேன். இவ்வாறு பொதுக்கூட்டங்களில் பங்குபற்றுவதன் காரணமாக எங்களது ஊரில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் தொடங்கப்பட்ட பெண்கள் சங்கத்திலும் அங்கத்தவராகி வாழ்வாதார உதவி பெற்றேன்.

எனக்கு தையல்தொழில் தெரியும் என்பதனால் துணிகளை எடுத்துத் தந்தார்கள். அவற்றை விதவிதமாக தைத்து எனது ஊரிலேயே விற்பனைகளை மேற் கொண்டு வருமானப் பெற்றேன். தற்போது இது பெரிய வியாபாரமாக உள்ளதுடன் வாடிக்கையாளர்களும் நிறைய இருக்கின்றார்கள். இவ்வாறுதான் என் வாழ்கையை நடாத்திக் கொண்டிருந்தேன்.

தற்போது தையல் தொழிலுடன் சிற்றுண்டி செய்தும் விற்பனை செய்கிறேன். அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து எனது காலைக் கடமைகளை முடித்து கடவுளை வணங்கிவிட்டு ஒரு நாளைக்கு ஏதாவது ஒன்றுபடி காலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உணவாகச் செய்து (இடியப்பம், பிட்டு) எனது ஊர் கடைகளுக்குக் கொடுப்பேன். ஏனெனில் நாளடைவில் தையல் தொழில் வருமானம் குடும்பத்திற்குப் போதாமல் போனது.

கடைகளுக்கு சிற்றுண்டி செய்து கொடுத்து விட்டு வந்து, காலை உணவு செய்து, பிள்ளைகளை பாடசாலைக்கும் கணவனை வேலைக்கும் அனுப்பி விட்டு எனது தையல் வேலைகளை ஆரம்பிப்பேன். பின்னர் 11 மணியளவில் மதிய உணவுகளை செய்ய ஆரம்பிப்பேன். அது முடிய பிள்ளைகளும் பாடசாலையில் இருந்து வருவார்கள். அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டு விட்டு அவர்களை மாலை நேர வகுப்பிற்கு அனுப்புவேன். அதன் பின் சிறிது நேரம் தையல் வேலைகள். அதைத் தொடர்ந்து அடுத்த நாள் காலை உணவிற்காக மா இடித்து வறுத்து வைப்பேன். மாலையானதும் பிள்ளைகளும் வீட்டிற்கு வருவார்கள். இரவு தொடங்க பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு அனைவரதும் உணவு அடுத்த நாளுக்கான ஆயத்தம் அத்தனையையும் கவனித்துவிட்டு இரவு உணவையும் முடிப்பேன். சிறிது நேரம் தையல் வேலையை ஆரம்பித்து 11 மணியளவில் இதனை முடித்து வைத்துவிட்டு நித்திரை கொள்ளச் செல்வேன். இவ்வாறுதான் எனது அன்றாட வாழ்க்கை நகர்ந்து செல்கின்றது.

எனினும் ஏதோ ஒரு வகையில் பொருளாதார ரீதியாக முன்னையதை விட இப்பொழுது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை உணர்கிறேன். அது கடன் இல்லாமல் சந்தோசமாக குடும்பத்துடன் வாழ உதவுகின்றது. அத்துடன் சமுர்த்திக் கொடுப்பனவும் பெற்று வருகிறேன்.

எனக்கு ஒரு ஆசை என் பிள்ளைகள் வாய் திறந்து பேசவேண்டும். அவர்கள் படித்து பெரிய இடத்தில் வேலை செய்ய வேண்டும். இதற்காகத்தான் கஸ்டப்பட்டு வேலை செய்கிறேன். என்னைப் போன்று கனவுகளுடன் உள்ள பெண்கள், வயதான பெண்கள் விதவைப் பெண்கள், இன்னும் இன்னும்.. சுய தொழில் செய்து தமது கனவுகளுக்காக வாழ்க்கையை நடாத்தி வரும் பெண்கள். அவர்களுக்கும் இது போன்று சூரியா வாழ்வாதார உதவிகளை செய்து கொடுப்பதோடு எங்களது ஊரில் உள்ள பெண்களது ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் பணியாற்ற வேண்டும். என்பது என் ஆசையாக உள்ளதுடன் சூரியாவிற்கு எனது நன்றியினையும் தெரிவிக்கின்றேன்.

# சுமை தூக்கிகள்

எத்தனை
மலைகள் கடந்தாலும்
உயர ஏறமுடியாத சுமைகள்.

சுமக்க வேண்டியவனையும்,
அவன் கைத்துணையோடு,
சேர்த்துச் சுமக்கும்.
சுமை தூக்கிகளாக,
பல பெண்கள்....

ஏறமுயற்சிப்பதென்னவோ
சிகரத்தின் உச்சியில் தான்.
கால்கள் தான்,
இறக்கத்தில் சறுகி
சரி செய்து விடுகின்றன.

ஓராயிரம் ஆண்டுகளுக்கும்,
முன்னாலிருந்து,
சுமை தூக்கிகளாக நாங்கள்...
குடிகாரக் கணவனின்
பதிவிரதை ஆனதால்,
எங்கள் வாழ்கையும் தான்,
தள்ளாடுகிறது.

இறக்க முடியாத சுமைகளை,
ஒரு கை பிடிக்க,
எவரேனும்,
முன்வரமாட்டார்களா என்ற,
நப்பாசையோடு,
சுமந்து சுமந்தே,
முடிந்து விடப் போகிறது.
எங்கள் வாழ்க்கை.



**- சம்மாந்துரை மஷூறா -**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எனக்குள் உருவாகும் பலம்


நாற்பத்தொன்பது வயது நிரம்பிய கன்னிமலர் தாழங்குடாவில் வசித்து வருகிறார். பதினாறாவது வயதில் திருமணம் செய்த கன்னிமலருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் தற்பொழுது கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். சிறு வயதிலிருந்தே மிகவும் கஷ்டப்பட்டு வளர்ந்த இவர், திருமணம் முடித்த பின்பும் சிறுதொழிலைச் செய்தே தனது குடும்பத்தை வழி நடத்தி வருகிறார். இவர் அரிசி, தேங்காய், மிளகாய்த்தூள், முட்டை போன்றவற்றை விற்று தனது வருமானத்தை ஈட்டி வருகின்றார். இவருக்கு தொழில் செய்ய இவரது பிள்ளைகளும் உதவியாய் உள்ளார்கள்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்துடன் தனக்கு ஏற்பட்ட தொடர்பினை பின்வருமாறு தருகிறார்.

“எனது கிராமத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் பெண்களை வலுவூட்டும் வாழ்வாதாரக் கூட்டங்கள் இடம் பெற்றன. இக் கூட்டத்திற்கு நானும் சென்றேன். பெண்களது வாழ்வாதார தொழிலை முன்னேற்ற அவர்கள் உதவி வழங்கிய போது அவ் உதவி எனக்கும் வழங்கப்பட்டது. எனக்கு 20.000 ரூபாய் பெறுமதியான அரிசி மூடை, தேங்காய், மிளகாய்,, முட்டை போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன. இத் தொழிலால் எனக்கு இலாபம் கிடைத்தது. ஆகவே எனக்கு தொழிலில் மேலும் அதிகமாக ஈடுபட ஆர்வம் ஏற்பட்டது. இதனால் மரக்கறி வியாபாரம், வீட்டுத் தோட்டம் செய்தல், கோழி வளர்ப்பு, படுக்கை விரிப்புக்கள், தலையனை உறைகள் விற்பனை, மற்றும் பிள்ளை பராமரிப்பு போன்ற மேலதிக தொழிலில் ஈடுபட்டேன். இதனால் கூடுதலான வருமானம் பெறக்கூடியதாக உள்ளது. நான் காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து வீட்டு வேலைகளை தொடங்குவேன். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7மணி வரை பயிர்களுக்கு நீர் ஊற்றிவிட்டு ஏழு மணிக்கு குளித்து காலை உணவை உண்பேன். 7.30 மணிக்கு பிள்ளை பராமரிப்பதற்காக காத்தான் குடியில் உள்ள ஒரு வீட்டிற்குச் செல்வேன். பிள்ளைப் பராமரிப்பிற்கு மாதம் ரூபாய் 15000 தருவார்கள். அங்கு நான் 8.00 மணியில் இருந்து 10.00 மணி வரை வீட்டைச் சுத்தம் செய்தல், 10.00 – 11.30 மணி வரை சமையல், 11.30 – 12.00 மணி வரை குழந்தையை குளிப்பாட்டி உணவு வழங்குதல், 12.00 – 2.00 மணிவரை அவ் வீட்டாரின் ஆடைகளை சலவை செய்தல் என எனது வேலைகளை முடித்துவிட்டு 2.00 – 2.30 மணிக்குள் மதிய உணவு உண்பேன். 2.30 – 3.30 மணி வரை குழந்தையை பராமரிப்பதுடன் 3.30 மணிக்கு குழந்தையை அதன் தாயிடம் ஒப்படைத்து விட்டு எனது அடுத்த வேலைக்கு புறப்படுவேன்.

அங்கிருந்து பக்கத்தில் உள்ள மா அரைக்கும் ஆலைக்குச் சென்று பின்னேரம் 3.30 – 4.30 மணி வரை மா வறுத்துக் கொடுப்பேன். இதற்குக் கூலியாக இரண்டு அல்லது மூன்று ரூபாய் கிடைக்கும். ஐந்து மணிக்கு வீட்டிற்குப் புறப்படுவேன். வரும்போது வழியில் குறிஞ்சா, வல்லாரை, முருங்கையிலை போன்ற இலைகளைப் பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வருவேன். மாலை 6.00 மணிபோல் வீடு வந்து சேர்வேன். பின்னர் 7.30 மணி வரை இரவு சாப்பாட்டை தயார் செய்து விட்டு 8.30 மணி வரை அவ் இலைகளை அரிந்து பொதி செய்வேன். இதற்கு வருமானமாக 250.00 ரூபாய் கிடைக்கின்றது. 9.30 மணிக்கு இரவுச் சாப்பாட்டை நாடகங்கள் பார்த்த படியே சாப்பிட்டு முடிப்பேன். அதன் பின்னர் 10.00 மணிக்கு நித்திரை செய்வேன். மீண்டும் அதிகாலை ஐந்து மணிக்கு எழும்புவேன். இது தான் எனது நாளாந்தச் செயற்பாடாகும்.

எப்பொழுதும் பெண்கள் தொழில் செய்ய வேண்டும் என "சூரியா" உத்தியோகத்தர் கூறுவார். இவரது வாக்குப்போல் நான் இப்போது கூடுதலான தொழிலைச் செய்கின்றேன். இதற்கு எனது கணவன் பிள்ளைகள் உதவி புரிகின்றனர். இதனால் தொழி லில் வெற்றியடைக்கூடியதாக உள்ளது.

எனது மூன்றாவது மகள் நெசவிற்கும் நான்காவது மகள் புடவைக்கடைக்கும் வேலைக்குச் செல்வதுடன் உயர்தரம் படிக்கும் ஐந்தாவது மகன் பாடசாலை விட்டு வந்து படுக்கை விரிப்பும், தலையணையுறையும் விற்கச் செல்கின்றான். இவ்வாறு எனது இந்தத் தொழிலை மகன் நடத்திச் செல்கின்றான். சூரியாவால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவியினால் கூடிய இலாபமும் வருகின்றது. இப்பொழுது எனது குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது.

எனது எதிர்கால ஆசை சூரியா எனக்கு உதவி வழங்கியதைப் போன்று இங்கு கஷ்டப்படும் பெண்களுக்கு நானும் உதவி வழங்க வேண்டும். எங்களின் சேவையானது தொடர்ந்து கொண்டே செல்ல வேண்டும். மற்றைய ஆசை எனது தொழில் இன்னும் வளர்ச்சியடைந்து எனது பிள்ளைகளை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதாகும். இன்றுபோல் என்றும் தைரியம் நிறைந்த பெண்ணாக நான் இருக்க காரணம் எனக்குள் உள்ள சக்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிக்கூட்டுப் பெண்

ரேவதி தொழிலை 20 வருட காலமாக செய்து வருகிறார். கிழமையில் மூன்று நாள் வியாபாரத்தில் ஈடுபடும் இவர் இதில் சனிக் கிழமையில் கல்லடி சந்தைக்குச் சென்று அரிசி, அரிசி மா இலைக்கறி வகைகள் குரக்கன் மா, மிளகாய்த்தூள் , கோழிமுட்டை என்பன விற்பனை செய்து வருகிறார். வியாபாரம் முடித்து இவர் வீடு திரும்பும் நேரம் மாலை 4.00 மணி ஆகும். சிவப்பரிசி மா, வெள்ளையரிசி மா, கிழமையில் மூன்று மரைக்கால் வீதம் ஆறு மரைக்கால் விற்பனை செய்கின்றார். இதற்கான அரிசியை அறுவடைக் காலங்களில் மொத்த விலையில் பெற்று களஞ்சியப்படுத்திக் கொள்கிறார்.

வியாபாரத்திற்கு செல்லும் நாட்களில் காலை 4.00 மணிக்கெல்லாம் எழும்பி சமையல் வேலைகளை ஆரம்பித்துவிடுவார். சமையல் வேலையுடன் அன்று இடிப்பதற்கான அரிசியையும் தண்ணீரில் போட்டு விட்டு காலை 7.00 மணி பஸ்சில் ஏறி மட்டக்களப்பிற்கு வந்துவிடுவார். அங்கிருந்து வீடு வீடுகாகச் சென்று தனது வாடிக் கையாளர்கள் உட்பட ஏனையோருக்கும் தனது பொருட்களை விற்பனை செய்து விட்டு காலை 10.00 மணி பஸ்சில் ஏறி வீட்டிற்கு வந்துவிடுவார்.


மதிய உணவை சாப்பிட்ட பின்னர் மா இடிக்கத் தொடங்குவார். இவருடன் மகளும் சேர்ந்து உதவி செய்தாலும் அதற்கான சம்பளத்தை மகளுக்கு கொடுத்துவிடுவார். பின்னர் இடித்த மாவை நன்றாக வறுத்து ஆற வைத்து பையில் பொதி செய்வார்கள். இவரிடம் மா அரைக்கும் இயந்திரம் உள்ளதால் அருகில் உள்ளவர்களுக்கு மா அரைத்துக் கொடுப்பதால் அதன் மூலமும் சிறிது வருமானம் பெறுகிறார். வியாபாரத்திற்கு செல்லாத நாட்களில் மா வறுப்பதற்கான விறகுகளை சேகரித்து வைப்பதில் ஈடுபடுவார்.

இத் தொழிலைத் தொடர்வதற்கு சமுர்த்தி வங்கி, மக்கள் வங்கி போன்ற இடங்களில் கடன் பெற்றிருப்பதுடன் அக் கடனை இத்தொழிலில் இருந்து கிடைக்கும் லாபத்தின் மூலம் கட்டி வருகிறார். கணவன் விறகு விற்றல் தொழிலில் ஈடுபடுவதுடன் மகளும் கணவனும் தனக்கு ஒத்துழைப்பதாகக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்திறக்கும் அதிகாலை



எனது பெயர் செல்வம் உதயமதி நான் நொச்சிமுனைக் கிராமத்தில் வசித்து வருகிறேன். வயது ஐம்பது. எனது கணவர் இறந்து இரு வருட மாகின்றது. எனக்கு மூன்று பிள்ளைகள். அதில் இரு ஆண்பிள்ளைகள் திருமணம் முடித்துச் சென்று விட்டார்கள். தற்போது நானும் மகளும் உள்ளோம். மகள் தையல் பயிற்சி ஒன்றிற்குச் செல்கிறார்

நான் கலியாணம் கட்ட முந்தியே கன காலமாக வடை, பட்றிஸ், என சிற்றூண்டி செய்து விற்று வந்தேன். 1988ம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டேன். கணவன் ஓடாவி வேலை செய்பவர். அது இந்திய ஆமிக் காலம். கணவனிடம் அடையாள அட்டை இருக்கவில்லை. இதனால் இவருக்கு வெளியில் சென்று வேலை செய்ய முடியவில்லை. நான் மட்டும் தொழிலில் ஈடுபட்டேன். எனது கணவரும் எனக்கு ஒத்தாசையாக இருந்தார். இந்த வருமானத்தில்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஒருவாறு கணவர் அடையாள அட்டை பெற்றதும் நாங்கள் திருகோணமலைக்குச் சென்று தொழில் செய்ய ஆரம்பித்தோம். கல் வெட்டும் அச்சு மரத்தில் வெட்டி விற்பது எங்களது தொழில். 1989ம் ஆண்டு எனது மகன் பிறந்தான்.

1990ம் ஆண்டு. யுத்தம் துரத்தி துரத்தி தலைவிரித்தாடிய காலம். யுத்தத்தின் நடுவே இனங்களுக்கிடையே இனப்பிரச்சனை வேறு பிடுங்கித் தின்றது. அப்போது எனது மகனுக்கு 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம். ஊரை விட்டு ஓட வேண்டிய சூழ்நிலை. கைக்குழந்தையான அவனுக்குக்கூட உடுப்பு எடுக்க அவகாசம் இருக்கவில்லை. பழகிய, புளங்கிய உபகரணங்களையும் போட்டது போட்டபடி கைவிட்டு விட்டு திருகோணமலையிலிருந்து பதினைந்து நாட்களாக காட்டு வழியாக நடந்து மட்டக்களப்பு வந்தடைந்து அகதி முகாமில் ஒரு வருடமாகத் தங்கி வாழ்ந்தோம். முகாமில் இருக்கையில் சிறுகடை ஒன்றினை ஆரம்பித்தோம்.

எனக்கு இரண்டாவது பிள்ளையும் பிறந்தது. ஆனால் காலமும், சூழலும் எங்களை இங்கு எதுவிதமான தொழிலும் செய்ய முடியாமல் ஆக்கியது. கணவர் கொழும்பில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்தார். பிரச்சினை அதிகம் ஆக ஆக வருமானம் சிறுத்துக்கொண்டே போனது. ஒருவாறு நான் ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்று வேலை பார்த்து பிள்ளைகள் இருவரையும் வளர்க்கக்கூடியமாதிரி நிலமை அமைந்தது. எனது சிற்றண்டி வியாபாரத்தையும் தொடர்ந்தேன். ஓடர்களும் கிடைக்கத் தொடங்கியது. இரண்டு வருடகாலத்தில் நான் இருப்பதற்காக சிறு வீடு ஒன்றினை அமைத்து நிலத்திற்கு சீமேந்து இழுத்தேன். கணவர் முகாமில் எதுவித தொழிலும் இல்லாமல் இருந்தார். அதோடு அவரையும் கொழும்பிற்குச் சென்று பார்த்து வருவேன். இதற்குள் சீட்டு ஒன்றினைக்கட்டி வந்தேன்.

1994ம் ஆண்டு. சீட்டு பணத்திலும் கடன் பெற்றும் கணவரை கட்டாருக்கு அனுப்பினேன். கணவரால் மூன்று மாதம் பணம் அனுப்ப முடியவில்லை. நான் ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்குச் சென்று கொண்டிருந்தேன். பின் கணவர் பணம் அனுப்பியதும் வாங்கிய கடனுக்கு வட்டி கட்டக் கூடியதாக இருந்தது. நான் தொடர்ந்தும் ஆடைத் தொழிற்சாலைக்கு சென்று வந்தேன். சில காலம் நிறுத்தி வைத்த சிற்றுண்டி வியாபாரத்தை மீண்டும் தொடர ஆரம்பித்தேன். ஒரு வருட காலமாகிவிட்டது. கடன் கட்டி முடியாவிட்டாலும் கடனுக்கு வட்டி கட்டக்கூடிய வருமானம் என்னிடம் காணப்பட்டது.

ஒரு வருடம் மூன்று மாதத்தில் கட்டார் சென்ற கணவர் வீடு திரும்பிவிட்டார். வாங்கிய கடனும் முடியவில்லை அவர் மீண்டும் ஓடாவி வேலைக்கு காத்தான்குடிக்குச் சென்று நாள் ஒன்றிற்கு ரூபாய் 500 கூலி பெறுவார். அவ் வருமானத்தையும் கொண்டு கடனையும் செலுத்தி வாழ்க்கையை நடத்தி வந்தேன்.

1999ம் ஆண்டு எனது மகள் பிறந்தாள். ஒருநாள் கணவர் வேலை செய்து கொண்டிருக்கும் போது கூரையில் இருந்து விழுந்து விட்டார். அவரை மூன்று மாதம் வைத்தியசாலையில் வைத்திருக்க வேண்டி வந்தது. இதனால் எங்களது வீடு வளவை விற்றேன். பின்னர் நொச்சிமுனையில் சிறு வளவு வாங்கி அங்கு சிறு கடை வைத்து கணவரின் உதவியுடன் சிற்றூண்டி வகை செய்து விற்று மூன்று குழந்தைகளுடன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தோம்.

2004ம் ஆண்டு. சுனாமி வந்து அத்தனையையும் அழித்தது. சுனாமியால் மீண்டும் அகதி முகாம். சத்துருக்கொண்டான் அகதிமுகாமில் இரண்டு வருட காலமாக வாழ்க்கை நடத்தி நொச்சிமுனைக்கு வந்து சேர்ந்தோம். அத்துடன் ஊரில் இயங்கிய சங்கங்களில் அங்கத்தவராக நானும் இணைந்து கொண்டேன். மாதர் சங்கத்தில் மூன்று வருடகாலம் தலைவியாகவும் இரண்டு வருடம் மகளிர் சங்கப் பொருளாளராகவும் மற்றும் நொச்சுமுனையில் சூரியாவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சங்கத்தில் இரண்டு வருடம் தலைவியாகவும் பணியாற்றினேன்.

பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தல், திருமணப்பதிவு, பிறப்புப் பதிவு இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுதல், போன்ற என்னால் இயன்ற உதவிகளை எல்லோருக்கும் செய்வேன். கணவர் வேலை செய்து கொண்டிருக்கும் போது ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டார். இதனால் கொழும்பு வைத்தியசாலையில் மூன்று மாதங்கள் வைத்திருந்தேன். அங்கிருந்து வந்து வீட்டில் ஆறு மாதங்கள் வரை பராமரித்தேன். இந்தச் சூழலில் குடும்ப வருமானத்திற்காக மிகவும் கஸ்டப்பட்டேன். செய்து வந்த தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதற்கு போதுமான வருமானம் இல்லாததால் குத்தி, திருவிலை, உளவாரம் போன்றவற்றை வீட்டில் இருந்தே கணவர் செய்து கொண்டு வந்தார்.

இத் தருணத்தில் சூரியாவினால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி எமக்கும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாங்கள் இருவரும் சேர்ந்து செய்ய கூடிய அளவிற்கு நாங்கள் செய்து வந்த தொழிலுக்கு பொருள்கள் வாங்கக் கூடிய மாதிரி இவ் உதவி இருந்ததுடன் மீண்டும் தொழிலில் அபிவிருத்தி அடையக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

2015ல் எனது கணவன் இறந்து விட்டார். கணவன் இறப்பதற்கு முன்னே மகன்மார் இருவரும் திருமணம் செய்து விட்டார்கள். இவருடன் சேர்ந்து செய்து வந்த தொழிலை என்னால் தொடர முடியாமல் போனது. இதனால் சிற்றுண்டி வகைகள் செய்து விற்று தொழில் செய்ய நினைத்து அதனை ஆரம்பிப்பதற்கு சமுர்த்தி கடன் பெற்றேன். இத் தொழிலைச் செய்து இப்போது நானும் மகளும் வாழ்ந்து வருகின்றோம். அரச உதவியாக பொது சன உதவு தொகை *(p.m.a)* மாதம் ரூபாய் 350 வருகின்றது. மகன்மார் கணவனுடன் வாழ்கையில் சமுர்த்தி உதவியாக ரூபாய் 1500 கிடைத்தது. இவர்கள் என்னைவிட்டுப்போக வருமானமும் போக அரசும் சமுர்த்தி உதவியை ரூபாய் 420 ஆக சுருக்கி விட்டனர்.

காலன் கணவனைப் பறித்தான். ஆனால் நானே கணவன் இல்லாது கஸ்டப்படும் வேளையில் ஆதரவாய் இருந்த சமுர்த்தி கொடுப்பனவை வெட்டிச் சுருக்கியது அரசின் சமுர்த்தித் திட்டம்.... நான் சிற்றுண்டி வகைகள் ஓடருக்கு வரும் போது செய்து கொடுக்கிறேன். எனது வருமானத்தைப் பெருக்க வாழ்வாதாரக் கொடுப்பனவு தந்த சூரியா விற்கு எனது நன்றி. இது எனக்கு பேருதவியாக இருந்தது. தற்போது நான் எனது முயற்சியால் குடும்பத்தை நடாத்தி வருகின்றேன். அத்துடன் என்னைப் போன்ற பெண்கள், வயதான பெண்கள், இளம் பெண்கள், கணவன் இறந்த பெண்கள், குடிகாரக் கணவன்மாருடன் வாழும் பெண்கள் இவர்களும் கௌரவமாக சமூகத்தில் வாழ சூரியா உதவ வேண்டும். எங்கள் கிராமத்தில் உள்ள ஏனைய பிரச்சினைகள் தீரவும் இவர்கள் பணியாற்ற வேண்டும்.

## பனையும் பெண்ணும்

பனம்பழங்கள் விழுகின்ற காலத்தில்
அவள் வந்திருந்தாள்
பனங்காடுகள் அவளின்
தாய் பிள்ளைகள்.
பனை பற்றிய பல தகவல்கள்
கைவசம் வைத்திருந்தாள்
பனைகளின் ஜீவன்
அதன் மத்தியில் இருப்பதாகச்
சொன்னாள்.
பனைகளின் ஒவ்வொரு பருவமும்
அவளுக்கு நேர்த்தியாய்
தெரியும்.
பனையைக் கொண்டு
பலதரப்பட்ட பொருளாதாரத்தால்
ஊரின் சிற்றரசியாய் வலம் வந்தாள்
அவளின் பனை மரங்களில்
பஞ்ச வர்ண கிளிகள் விருப்பத்துடன்
கூடுகட்டி குடும்பம் நடத்தின.
பனைகளோடு அவள் இயைந்து
விட்டாள்.
பனங்காடுகளை பிரியும் நாளொன்றில்
நெடுநாள் காதலனை பிரிந்த
துயரத்துடன்
பனை நிலத்தை பிரிந்தாள்.
பனங்காடுகளைப்பற்றி
எத்துணையளவு அறிந்தாளோ
பனங்காட்டு நரிகளைப் பற்றியும் நன்கறிவாள்
அவளது பனங்காடுகளை கொள்ளையடிக்க
அவைகள் தருணம் பார்த்திருந்தன.
'தொப் தொப்பென்று' விழும் பழங்களுக்கு
அவைகள் நாக்கை தொங்கப்போட்டு
அலைவதையும் அறிவாள்.
இன்று குள்ள நரிகளிடமா
நல்ல நரிகளிடமா என்று அறியாமல்
நிலத்தை தாரை வார்த்துவிட்டு
நிலமிழந்து நடக்கிறாள்.



**எஸ்தர்** (மலையகம்)
திருகோணமலையிலிருந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து

தாழங்குடா கிராமத்தைச் சேர்ந்த சௌந்தரம்மாவிற்கு வயது 56 ஆகும். இவருக்கு ஐந்து பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் உள்ளனர். இவர்களில் நாலு பிள்ளைகள் திருமணம் முடித்து விட்டனர். இரு பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கணவனது கூலி வேலையில் இருந்து கிடைக்கும் வருமானம் பிள்ளைகளை வளர்ப்பதற்கு போதாமல் இருந்தபடியால், சௌந்தரம்மா வீட்டில் ஓலை மட்டை இழைப்பது, தேங்காய் எண்ணெய் உருக்குவது போன்ற தொழில்களைச் செய்கிறார்.

கணவனது வருமானத்துடன் தனது வருமானத்தையும் சேர்த்து கடைசி இரு பெண் பிள்ளைகளையும் சற்று கூடுதலாகப் படிப்பித்தார். தனது பிள்ளைகளை நல்ல வழிக்கு, நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது இவரது பேரவா. இதற்காக இரவு பகல் பாராது கண்விழித்து குடும்பத்திற்காய் பாடுபடுகிறார்.

கணவரும் கூலி வேலைக்குச் செல்வதுடன் வீட்டில் இருக்கும் போது அரிசி வியாபாரமும் செய்கிறார். சௌந்தரம்மாவிற்கும் தான் பார்த்த தொழிலுடன் அரிசி வியாபாரமும் செய்ய ஆர்வம் ஏற்பட்டது. இதனால் அரிசி வியாபாரத்தை இவரும் செய்வதுடன் வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுக்கு அரிசி, தேங்காய் எண்ணெய் போன்றவைகளை விற்று வருவார்.


சௌந்தரம்மாவும் கணவரும் தொழிலில் ஈடுபடும் போது அவர்களது இரு பிள்ளைகளும் பனை ஓலை தொப்பி, கூடை, தட்டு என்பன செய்து விற்பார்கள். இவர்களுக்கு தந்தையும் உதவியாக உள்ளார். பிள்ளைகளுக்கான பனங் குருத்துக்களை இவர்களது தந்தை பனை மரத்தில் ஏறி வெட்டிக்கொடுத்து உதவிபுரிவார்.

2009 ம் ஆண்டு தாழங்குடாவில் "சூரியா" பணியாற்றத் தொடங்கியது. அங்கு சூரியாவால்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உருவாக்கப்பட்ட "தென்றல் மகளிர் சங்கத்தில்" சௌந்தரம்மாவும் இணைந்து கொண்டார்.. சூரியா வால் வாழ்வாதார உதவி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட 21 பெண்களில் ஒருவராக சௌந்தரம் மாவும் தெரிவு செய்யப்பட்டார். சௌந்தரம்மாவிற்கு சிறுகடை அமைப்பதற்கான ரூபாய் 20000.00 இற்கு பெறுமதியான பொருட்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. இதன் மூலம் தனது சுயதொழி லான தேங்காய் எண்ணெய் உருக்குதல் ஓலை மட்டை பின்னுதல் பன் தொப்பி அரிசி வியாபாரம் சிறுகடை போன்றவற்றை மேலும் விருத்தி செய்துகொண்டார்.

சௌந்தரம்மா காலை 4.00 மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்து, உடல் சுத்தம் செய்து, இறைவனை வணங்கி, தேங்காய் எண்ணெய் உருக்குவதற்குரிய தேங்காய்களை அவிய வைப்பார். அதன் பின் வீட்டு முற்றம் சுத்தம் செய்து தேனீர் அருந்தி விட்டு தனது கடையைத் திறந்து வியாபாரம் செய்யத் தொடங்கிவிடுவார்.

பிறகு காலை 8.00 மணிக்கு கடையில் வியாபாரம் செய்து விட்டு சந்தைக்குச் சென்று மரக்கறி வகைகள் கடைச் சாமான்கள் போன்ற வற்றை எடுத்து வருவார். எடுத்து வந்த பொருட்கள் அனைத்தையும் மீண்டும் வியாபாரம் செய்து கொண்டிருக்கும்போதே காலை உணவையும் உண்பார் சௌந்தரம்மா. அதன்பின் காலை 10..30 மணிக்கு பகல் உணவை சமைப்பதற்கு ஆயத்த மாகுவார். உணவு சமைக்கும் போதே தன்னுடைய கணவனுடைய ஆடைகளையும் சுத்தம் செய்து, தனது பேரப்பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டே சுயவேலைகளையும் செய்து முடிப்பார். பகல் 1.00 மணிக்கு தனது வேலைகளை முடித்து, சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொள்வார். பின்னேரம் 3..30 க்கு மீண்டும் கடை வியாபாரத்தை தொடங்கி விடுவார். வியாபாரம் செய்து கொண்டே அவித்த தேங்காய்களை எடுத்து எண்ணெய் உருக்கத் தொடங்குவார். ஓரே நேரத்தில் கடையையும் பார்த்துக் கொண்டு எண்ணெய் உருக்கியும் தனது வேலையை விடாமுயற்சியுடனும் சிறந்த முறையிலும் செய்து முடிப்பார். பின் மாலை 5..30 மணிக்கு மீண்டும் தேனீர் அருந்தி விட்டு வாடிக்கையாளரிடம் சென்று கடன் அறவீடு செய்து கொண்டே வருவார். பின் மாலை 6.00 மணிக்கு கடையில் வியாபாரம் செய்து கொண்டே ஓலை மட்டை பின்னுவார். இவ்வாறு தனது வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு இரவு 9.00 மணிக்கு நித்திரை செய்வார்.

இவ்வாறுதான் சௌந்தரம்மாவின் வாழ்க்கை சுழல்கிறது. இத் தொழில் மூலம் கிடைக்கும் இலாபத்தினால் தங்களுடைய அன்றாட வாழ்க்கைத் தேவையினை நிறைவு செய்வதாகக் கூறும் இவர், "அரசினால் எனக்கு எந்தவித வருமானமும் இல்லை. மகன் திருமணம் முடிக்க முதல் வெளிநாட்டில் இருந்தமையால் சமுர்த்தி முத்திரை கிடைக்க வில்லை. தற்போது மகன் திருமணம் முடித்து விட்டான். அதன் பிறகும் சமுர்த்தி முத்திரை கிடைக்கவில்லை. இதனால் இருவரும் சேர்ந்து கடையில் கிடைக்கும் வருமா னத்தை வைத்துத்தான் வாழ்ந்து வருகிறோம்" என்று அரசின் உதவியைப் பற்றிக் கூறுகிறார்.

இவ்வாறு அன்றாட தேவையினைப் பூர்த்தி செய்து தனது வாழ்க்கையைக் கொண்டு செல்லும் சௌந்தரம்மா, இச் சுயதொழில் மூலம் மிக உயர்வடைந்து மகிழ்ச்சியாகக் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பெயர் சுசீலா. நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே தாழங்குடாவில்தான். இப்போ எனக்கு வயது நாற்பத்தொன்பது. எனக்கு நான்கு பெண் சகோதரிகளும் ஒரு ஆண் சகோதரரும் உள்ளனர். இதில் இரு சகோதரர்கள் இறந்து விட்டனர். இதனால் மூன்று பெண் சகோதரிகள் மட்டுமே உள்ளனர். எனது கணவர் ஒரு கூலித் தொழிலாளி. எனக்கு ஐந்து பெண் பிள்ளைகள் உள்ளனர். பிள்ளைகள் வளர வளர கணவருடைய வருமானம் குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கு போதாமல் போய்விட்டது. கணவருடைய உழைப்பும் மிகவும் குறைவு. இதனால் எனது குடும்ப சூழ்நிலை மிகவும் கஸ்டமாக இருந்தது.

நானும் வேலை செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்தேன். அரிசி ஆலைக்கு வேலைக்குச் சென்றுவரத் தொடங்கினேன். அங்கு கூலியாக நாநூறு அல்லது ஐந்நூறு தருவார்கள். காலங்கள் செல்லச் செல்ல செலவுகள் கூடியதே தவிர குடும்ப வருமானம் குறைந்த மட்டத்திலிலேயே இருந்தது. இந்த நிலையில் கணவரும் ஒவ்வொரு நாளும் குடித்து விட்டு வீட்டிற்கு வரத் தொடங்கிவிட்டார். கணவரது குடி, வருமானம் குறைவு, பிள்ளைகளின் அதிகரித்த செலவு, சமாளிக்க வேண்டிய கட்டாய பிள்ளைகளின் படிப்புச் செலவு, இல்லாமையால் எனக்குள் உருவாகும் கவலையும் கோவமும், இதனால் கணவருக்கும் எனக்குமான தினசரிச் சண்டை என குடும்பத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியும் தொலைந்து கொண்டிருந்தது.

விடிந்தால், எதுவும் நடவாததுபோல் கணவர் பேசத்தொடங்கிவிடுவார். நானும் பேசி விடுவேன் இவ்வாறு எனது குடும்பம் ஓடிக்கொண்டே இருந்தது. இதற்குள் எனது இரு பிள்ளைகளும் திருமணம் முடித்து விட்டார்கள். கணவரும் கொஞ்சம் கொஞ்சமாய் மாறத் தொடங்கி குடிப்பதை நிறுத்தி விட்டார். இதனால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

பிறகு அரிசி ஆலைக்குச் செல்வதையும் நிறுத்தி விட்டேன். அத் தருணத்தில் தாழங்குடாவில் சூரியாவால் உருவாக்கப்பட்ட "தென்றல் மகளிர் சங்கம்" பற்றி கேள்விப்பட்டு அதில் நானும் ஒரு அங்கத்தவராய் இணைந்து கொண்டேன். மாதா மாதம் நடை பெறும் கூட்டத்திற்கு தவறாமல்



# புதிய காத்திருப்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சமூகம் அளிப்பேன். பெண்கள் எல்லாரும் ஒரு நாளில் ஒன்றாய்ச் சேர்வது, ஊர்க் கதை உலகக் கதை எமது கதை என எங்களுக்குள் கதைப்பது, சேமிப்பைப் பற்றிச் சிந்திப்பது, ஊர்ப் பிரச்சனை களை அலசுவது ஆராய்வது, ஏதாவது நல்லவிதமாய் செய்ய முடிவெடுப்பது என கூட்டம் மகிழ்ச்சியாக வும் பிரயோசனமாகவும் செல்லும்.

எனக்கும் சூரியாவினால் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. அரிசி மூடை, மிளகாய் மூடை, தேங்காய் என கடைக்குத் தேவையான ரூபாய் 20,000 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டது. இத் தொழில் எனக்கு இன்றுவரை லாபத்தைப் பெற்றுத் தந்து கொண்டிருப்பதுடன் இன்னும் வெவ்வேறு விற்பனையில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. தற்போது வழமையான விற்பனையுடன் மரக்கறி இலைகள், தலையணை உறைகள் விற்பது, வீட்டுத் தோட்டம் செய்வது, கோழி வளர்ப்பது, பிள்ளைகள் பராமரிப்பது என பல்வேறு வேலைகளைச் செய்கிறேன். இதற்கு எனது பிள்ளைகளும் உதவுகிறார்கள். இவ்வாறு ஒரு தொழில் மூலம் பல தொழிலில் ஈடுபட ஊக்கத்தை அளித்தது சூரியாவேதான்.

காலையில் 5.00 மணிக்கெல்லாம் வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கும் நான் காலை 7.00 மணிக்குள் பயிர்களுக்கும் நீர் ஊற்றி முடிப்பேன். காலை 7.00 மணிக்கு குளித்து காலை உணவைச் சாப்பிட்டு முடித்து விட்டு 7.30 மணிக்கு பிள்ளை பராமரிப்பதற்காக காத்தான்குடியில் உள்ள ஒரு வீட்டிற்குச் செல்வேன். இதற்கு கூலியாக மாதம் ரூபாய் 15000 வழங்கப்படுகிறது.

இதற்கூடாகவே எனது வாழ்வு நகர்கின்றது.

# இதற்குத்தானா?

இதற்குத்தானா
வெடிச்சுட்டு, உறவுக்குச் சொல்லி
விருந்து வைத்துக் கொண்டாட்டம்.

எனக்கு பன்னிரண்டு வயது
புதிதான அனுபவம்
உள்ளாடையில் பட்ட
இரத்தக்கறையைக் கண்ட அம்மா
சுனாமி அலை கண்டது போல்
சுழன்று தவித்தாள்

இப்போது
வயிற்றுவலியால்
துடியாய்த் துடிக்கிறேன்
ஏன் இந்த வேதனை என்று

மாதவிடாய் வந்ததற்கு
ஒரு வைபவமா?
இரத்தக்கறை கண்டதற்கு
இலட்சங்கள் செலவா?


எனக்கோ வயிற்றுவலி
அம்மாக்கோ இதயவலி
மாதாமாதம் வட்டிக்கட்டுவதால்..



**- தம்பிலுவில் ஜெகா**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலங்கா விளக்கு

எனது பெயர் உசனார் மைமுனார்ச்சி. நான் ஆறுமுகத்தான் குடியிருப்பு முஸ்லிம் பிரிவு அல்ஹிதாயத் நகரில் எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனக்கு வயது ஐம்பத்தியொன்று. எனது கணவர் மரணித்து பன்னிரெண்டு வருடங் களாகின்றன. எனக்கு இரு பெண் பிள்ளைகளும் நாலு ஆண் பிள்ளைகளுமாக ஆறு பிள்ளைகள் உள்ளனர். இதில் இரு பெண் பிள்ளைகளும் திருமணம் முடித்து விட்டார்கள். தற்போது எனது வீட்டில் நானும் எனது ஆண் பிள்ளைகள் நாலு பேரும் வசித்து வருகின்றோம். நான் பதினேழு வருடங்களாக சிற்றுண்டி வியாபாரம் செய்தே வாழ்க்கையை நடத்தினேன். மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் பிள்ளைகளைப் படிப்பித்து வந்தேன். ஆனால் இவர்கள் பாடசாலை செல்லாமல் படிப்பினை இடைநிறுத்தி விட்டார்கள்.

எனது கணவர் மரணிக்கும் போது எனக்கு வயது 36. அன்றில் இருந்து இன்று வரை நான் கடற்கரைக்குச் சென்று சிற்றுண்டி விற்றுத்தான் எனது பிழைப்பை நடத்தி வருகிறேன். ஆரம்பத்தில் கடற்கரையில் கடையப்பமும் கச்சானும் விற்று வந்தேன். இதற்காக அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து உணவுப் பொருட்கள் செய்து, வீட்டு வேலை களையும் முடித்து விட்டு நடந்து கடற்கரைக்குச் செல்வேன். அங்கு போய்ச் சேரும் போது ஏழு அல்லது எட்டு மணியாகிவிடும். ஒரு மரம்தான் எனது கடை. அதன் நிழலின் கீழ் வியாபாரத்தை ஆரம்பித்து விடுவேன். காலை 11 மணியளவில் எல்லா உணவுப் பொருளும் விற்று விடும். மீண்டும் நடந்தே வீட்டிற்கு வருவேன். விற்று வந்த வருமா னத்தில் சமைக்கத் தேவையான சாமான் எல்லாம் வாங்கி உணவு சமைத்து பிள்ளைகளுடன் சேர்ந்து சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் ஓய்வெடுப்பேன்.

பிறகு மாலை நாலு மணிக்கு மீண்டும் கடையப்பத்திற்கு தேவையான சாமான்கள் வாங்கி வந்து கையால் மா இடிக்கத் தொடங்குவேன். இது அடுத்த நாள் காலை வியாபாரத்துக்கான எனது ஒழுங்குபடுத்தலாகும். இவ்வாறு அடுத்த நாளைக்குத் தேவையான அனைத்தையும் முடித்து வைத்து விட்டு இரவு வீட்டுச் சாப்பாட்டையும் ஒழுங்கு படுத்தி விட்டுத்தான் இரவு நித்திரை கொள்வேன். இவ்வாறு ஆறு வருடங்களாக எனது சிற்றுண்டி தொழிலை ஒரு மர நிழலின் கீழ் செய்து வந்தேன். பிறகு மீனவர் சங்கத் தலைவரினால் எனக்கு குடிசை அமைத்து வியாபாரம் செய்வதற்கான இடம் ஒன்று தரப்பட்டது.

அந்த இடத்தில் நான் ஓலைக் குடிசை ஒன்றைக் கட்டி அதில் மேலும் சில பொருட்களை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிகமாக்கி விற்பனை செய்யத் தொடங்கினேன். இதனால் வியாபாரம் சற்றுக் கூடியது. பிட்டு, இடியப்பம், தோசை இவைகளுக்கான கறிவகைகள், சம்பல், தேனீர் போன்றன எனது கடையில் விற்பனை செய்யப்பட்டன. ஒரு நாள் வருமானமாக 1000 அல்லது 1500 ரூபாய் கிடைக்கும். கடலில் மீன்கள் அதிகமாக கிடைக்கின்ற நாட்களில் வியாபாரம் இன்னும் கூடுதலாக நடக்கும்.

இந்த லாபத்தில் எனது பிள்ளைகளை வளர்த்து வந்தேன். கூடுதலாக வியாபாரம் நடக்கும் நாட்களில் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவுப் பொருட்கள் எல்லாம் விரைவாக முடிந்து விடும். இதனால் பிறகு உணவு கேட்டு வரும் மீனவர்களுக்கு கொடுப்பதற்கு உணவுகள் இருக் காது. ஆகவே கடையிலும் சிலவற்றை செய்யலாம் என யோசித்தேன். ஆனால் உணவு சமைப்பதற்கு விறகு அடுப்புத்தான் பயன்படுத்த வேண்டும். எனது கடையோ ஓலை. கடற்கரை என்றால் காற்றுக்கும் பஞ்சமில்லை. விறகடுப்பைப் பாவித்தால் எனது கடைக்கு எந்த விதப் பாதிப்பு வரக் கூடாதே. ஆகவே ஒருவாறு கடையினை தகரத்தினால் அமைத்தேன்.

வியாபாரம் கூடுதலாகச் செல்லச் செல்ல எனது உணவுப் பொருட்களுடன் வெளியில் இருந்தும் சில வகை உணவுப் பொருட்களை வாங்கி விற்கத் தொடங்கினேன். இப்போது எனது கடையில் தேனீர் , பாண், பனீஸ், பிட்டு, இடியப்பம், தோசை, பாலப்பம், நிலக்கடலை, பொரி வகைகள் என்பன உண்டு. வாரத்தில் ஆறு நாட்கள் கடற்கரைக்கு வியாபாரத்திற்குச் செல்வேன். வெள்ளிக்கிழமைகளில் நான் முழு நேரமும் வீட்டில் இருப்பேன். இப்படி வீட்டில் இருக்கும் போதுதான் எங்களூரில் சூரியாவினால் அமைக்கப்பட்ட சங்கக் கூட்டத்திற்கும் செல்லத் தொடங்கினேன். எனது பிரயாசையைப் பார்த்த அவர்கள் எனது விருப்பப் படி எனது தொழிலை மேலும் முன்னேற்ற எனக்கு வாழ்வாதார உதவியாக சிற்றூண்டி வியாபாரத்திற்கு தேவையான பொருட்கள் வழங்கினார்கள்.

நான் காலை மூன்று மணிக்கெல்லாம் எழும்புவேன். முகம் கழுவி கடவுளை வணங்கி விட்டு இடியப்பம், பிட்டு, என்பவற்றை அவிக்கத் தொடங்குவேன். அதற்குத் தேவையான கறிசம்பல் போன்றவற்றை தயாரித்து எடுத்துக்கொண்டு காலை ஆறு மணியளவில் கடலுக்குச் செல்ல ஆயத்தமாகுவேன். சில வேளை நடந்து செல்வேன் சில வேளை ஆட்டோவில் செல்வேன். எப்படியும் காலை 7 அல்லது 7.30 மணிக்கு கடற்கரையை அடைந்து விடுவேன். அதன் பிறகு கடையைத் திறந்து கடை, கடை முற்றம் எல்லாம் சுத்தம் செய்து அடுப்பை மூட்டி தேனீர் போட்டு தேனீர் வியாபாரத்தை ஆரம்பிப்பேன். அத்துடன் சாப்பாடு முடிய முடிய அவற்றையும் திரும்ப திரும்ப தயாரிப்பேன். எப்படியும் காலை 11 மணியளவில் வியாபாரம் முடியும். யாவாரம் முடிய கடையைச் சுத்தம் செய்துவிட்டு வீடு திரும்புவேன். பகல் பன்னிரெண்டு மணியளவில் வீட்டிற்கு வந்து சேர்ந்து, குளித்துவிட்டு சமைக்கத் தொடங்கி பகல் சாப்பாடு முடிய கொஞ்ச நேரம் ஓய்வெடுப்பேன்.

பின்னேரம் நாலு மணிபோல் சிற்றுண்டிக்குத் தேவையான சாமான் வாங்குவதற்கு கடைக்குச் செல்வேன். எல்லாச் சாமான்களும் வாங்கி முடிய மாலை ஆறு மணி ஆகிவிடும். வீட்டிற்கு வந்தவுடன் இடியப்பத்திற்கு வேண்டிய அரிசியை ஊற வைத்து மா இடிப்பேன். பிட்டிற்கு தேவையான மாவை எடுத்து வைத்துவிட்டு இடியப்பத்திற்கு வேண்டிய மாவை புழுக்கி வைப்பேன். கறி சமைப் பதற்கு தேவையான விறகுகளையும் சேகரித்து வைப்பேன். அதன் பிறகு வீட்டு வேலை மற்றெல்லா வேலைகளையும் முடித்து விட்டு இரவு உணவையும் சாப்பிட்டு நித்திரை கொள்ள நடுச்சாமம் பன்னிரெண்டு மணியாகும்.

மீண்டும் அதிகாலை மூன்று மணிக்கெல் லாம் எழுந்து எனது அன்றய நாள் வியாபாரத்துக் கான ஆயத்தங்களை தொடங்கி விடுவேன். இவ்வாறே எனது அன்றாட வாழ்க்கை செல்கின்றது. இவ் வியாபாரத்தின் மூலம் செலவுகள் அனைத்தும் போக இலாபமாக ஒரு நாளைக்கு ரூபாய் 2000 அல்லது 2500 ரூபாய் கிடைக்கும். இவற்றைக் கொண்டே எனது சீவியத்தை நடத்துகிறேன்.

எனது சிற்றுண்டி வியாபாரத்தினை முன்னேற்றுவதற்காக வாழ்வாதார உதவியை செய்த சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத் திற்கு எனது மனமார்ந்த நன்றினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு எங்கள் ஊரில் தொழில் செய்து வாழ ஆசைப்படும் பெண்களுக்கும் சூரியா உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்பது எனது ஆசையும் கோரிக்கையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாதேவி புது மண்டபத்தடியில் வாழ்கிறார். புதுமண்டபத்தடி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல இடப் பெயர்வுகளைச் சந்தித்த ஒரு பகுதியாகும். இங்கு வாழ்ந்த பெரும்பான்மை யான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டதுடன், இப் பிரதேசம் கால் நடை வளப்பிலும், பால், தயிர் விற்பனையிலும் பிரசித்தி பெற்றிருந்தது. வீட்டுக்கு வீடு வீட்டுத் தோட்டம் இல்லாத வீடு இருக்க வில்லை. மருந்தடித்து நஞ்சூட்டப்படாத மண்ணில் பிள்ளைகளும் நாட்டுக் கோழிகளும் கட்டுப்பாடற்று சுதந்திரமாய்த் திரிந்தன, விளையாடின. திருவிழாக் காலங்களில் கூத்துச் சத்தம் கேட்காத வாசல்கள் இருப்பதில்லை, நன்மையோ தீமையோ ஒருபானைச் சமையலில் ஊரே ஒன்றுபட்டுவிடும். யாரும் தனித்து சோகம் சுமந்ததாக அவ்வூர்ச் சரித்திரம் இருக்க வில்லை. யுத்தத்தின் முன் நடந்த இவ்வாறான கதை களெல்லாம் ஒரு கனாக் காலமாகி விட்டது மக்களுக்கு.

யுத்தத்தின் பின் மீண்டும் ஊரின் பழைய வாழ்வைக் கட்டியெழுப்ப அனைவரும் முயன்றாலும் "அபிவிருத்தி" எனும் பெயரில் நுழைந்த புதுப் புது கூத்தாடிகள் கூட்டத்தினால் ஊரே ரெண்டு பட்டது உண்மையானது. இவ்வாறானதொரு சூழலில் வசிக்கும் பத்மாதேவியும் சுழல் காற்றாய் வந்த அத்தனை வன்செயலுக்கும் தாக்குப் பிடித்து அங்கு இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

பத்மாதேவியின் கணவர் தற்போது மத்திய கிழக்கு நாடொன்றில் ஒரு வருடமாகத் தொழில் புரிகிறார். பத்மாதேவிக்கு மூன்று பெண் பிள்ளைக ளும் இரண்டு ஆண் பிள்ளைகளும் உள்ளனர். இவர்களில் 3 பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின் றனர். கால் நடை வளர்ப்பில் ஆர்வம் இருந்தாலும் ஊருடன் சேர்த்து அனைத்தையும் இழந்த இவர்களி டம் ஆர்வம் மட்டுமே எஞ்சியிருந்தது. இந்த நிலையில் சூரியாவிடம் இருந்து பெற்ற சுயதொழி லுக்கான உதவியால் பத்மாதேவி ஆடு வளர்ப்பில் ஈடுபடத் தொடங்கினார்.

ஆடு வளர்ப்புத் தொடங்கி தற்போது மூன்று வருடமாகின்றது. இத் தொழில் மூலம் இவர் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு தடவை இலாபம் பெறுவதாகவும் கூறினார். இவ் ஆடுகள் ஆறுமாதத்திற்கு ஒரு தடவை குட்டி போடுகின்றது. தன்னிடம் தற்போது ஐந்து பெட்டை ஆடும், மூன்று கடா ஆடும் உள்ளதாகக் கூறினார். பெட்டை ஆட்டை இத் தொழிலுக்கான மூலப் பொருளாக வைத்து விட்டு கடாவை விற்று மீண்டும் பெட்டை ஆடு வாங்குகின்றார். தற்போது விற்பதற்கான கடா ஆடு இரண்டு இவரிடம் உள்ளது. இரண்டு கடாவையும் நாற்பதாயிரம் ரூபாவிற்கு விற்பதற்கு விலை பேசியுள்ளார். பத்மாதேவி காலையில் நேரத்திற்கு வீட்டு வேலைகளை முடித்து ஆடுகளை மேய்க்கச் செல்வார். பாடசாலை முடிந்து மகன் வந்ததும் ஆட்டு மேச்சலை மகன் பொறுப்பெடுப்பார்.

ஆட்டுக் கடா ஒன்று பதினேழாயிரத்துக்கு விற்று மகனுக்கு பாடசாலை செல்ல சைக்கிள் வாங்கிக் கொடுத்துள்ளார். பத்மாதேவியிடம் மாஅரைக்கும் இயந்திரம் ஒன்றும் உள்ளதால் மா அரைத்துக் கொடுத்து உழைக்கக் கூடியதாகவும் உள்ளது. இதன் வருமானமாக கிழமையில் ரூபா 4,000.00 தொடக்கம் 5,000.00 வரை இலாபம் பெறுகிறார்.



# வசந்தகால நிழல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சக்கூடுகள்

நான் புஸ்பராஜா வசந்தி. கல்லடி திருச்செந்தூரில் வாழ்கிறேன். எனக்குத் திருமணம் 1987ம் ஆண்டு நடந்தது. அப்போது எனது வயது 15. 1989ம் ஆண்டு யுத்தம் காரணமாக எனது கணவர் அகதியாக இந்தியா சென்று விட்டார். மிகவும் கஸ்டத்தின் மத்தியில் எனது மூத்த மகனுடனும் தாய், தந்தை, சகோதரர்களுடனும் வாழ்ந்து கொண்டு இருந்தேன். எனது இரண்டாவது அண்ணாதான் கூலித்தொழில் செய்து எங்களது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

1990ம் ஆண்டு யுத்தகாலத்தில் நடந்த வன்செயலில் அண்ணா கொல்லப்பட்டார். அண்ணா இறக்கும்போது எனது மூத்த மகனுக்கு 1வயது இருக்கும். அப்பா ஊனமுற்றவர் அவராலும் தொழில் செய்து குடும்பத்தைத் காப்பாற்ற முடியவில்லை. ஒரு நேரச் சாப்பாட்டிற்குக்கூட மிகவும் கஷ்டப்பட்டோம். அம்மாதான் பக்கத்து வீடுகளுக்குச் சென்று வீட்டு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

எனது இரண்டாவது அண்ணா இறந்து நான்கு மாதத்தால் எனது தந்தையும் இறந்து விட்டார். வீட்டின் வறுமை, உதவியின்மை, பாதுகாப்பு இன்மை, புரிந்துணர்வு இன்மை, சிறந்த வழிநடத்தல் இன்மை, என அடுத்தடுத்து வந்த பிரச்சினைகளால் அழுத்தங்கள் அதிகரிக்க பிரச்சனைகளை எதிர் கொள்ளும் சக்தியை நான் இழந்தேன். இதனால் ஏற்பட்ட தலைவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் அளித்த ஆலோசனை என்னைத் தனிமைப்படுத்த யோசிக்க வேண்டாம், சந்தோமாக இருக்கவேண்டும் என்பது. இதனால் என்னைக் கல்லடியில் உள்ள கைத்தறிப் பேட்டைக்கு (நெசவு) பயிற்சி வகுப்புக்கு அனுப்பினார்கள். அதன் மூலம் எனக்கு வருமானமாக 3600ரூபாய் கிடைத்தது.

அந்த வருமானத்திலும் பார்க்க அங்கு கிடைத்த புதிய நண்பிகள் மூலம் உற்சாகமாகவும், சந்தோஷமாகவும், கலகலப்பாகவும் காணப்பட்டேன். அப்போது எனது மகன் நேசறியிலும் எனது தம்பி 10ம் தரத்திலும் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். இவர்களின் படிப்புச்செலவிற்கு எனது பணம் உதவினாலும் அம்மாவின் வீட்டு வேலைத்தொழில் வருமானத்திலேயே எங்கள் அன்றாட சீவியத்தின் அதிக செலவுகளை சமாளித்து வாழ்ந்து கொண்டிருந்தோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வருடமாக எனது கணவரிடம் இருந்து எந்த விதத்தொடர்பும் இல்லாது இருந்தது. எனது மகனும் வளர்ந்து விட்டான். வருமானத்திலும் பார்க்க செலவுகள்தான் குடும்பத்தில் கூடுதலாகக் காணப்பட்டன. இதனால் எனது தாய் என்னை வேறு திருமணம் முடிக்க வற்புறுத்தினார். எனக்கு வேறு திருமணம் முடிக்க விருப்பமில்லை. ஏனெனில் எனது நோக்கம் எனது மகனையும் தம்பியையும் நன்றாகப் படிப்பித்து ஒரு வேலை எடுத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் முதலில் தம்பி ஒரு வேலை எடுத்தால் தம்பி எங்களை பார்ப்பான். இதுவே எனது குறிக்கோளாக இருந்தது.

அம்மாவின் இத்திருமணப் பேச்சு காரணமாக நான் அழுது மிகவும் மனம் வருந்தி வேதனைப்பட்டு இருந்த வேளையில் எனது தம்பி அக்கா நீங்கள் கவலைப்பட வேண்டாம் நான் உங்களைப்பார்ப்பேன் என்னால் இயன்ற முழு உதவியையும் உங்களுக்கு செய்வேன் என்றான். அது போலவே லீவு நாட்களில் மேசன் கூலியாகச் சென்று அதில்வரும் வருமானத்தில் எங்களது குடும்பத்தைக் காப்பாற்றினான். அத்துடன் எனது அம்மாவின் தூரத்து உறவினரொருவர் மாதம் ஒருமுறை பண உதவி செய்து வந்தார். குறுகிய வருமானம் என்றாலும் சந்தோஷமாக எனது மகனையும் வளர்த்துக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

எனது கணவர் ஏழு வருடங்களின் பின் இந்தியாவில் இருந்து திரும்பி வந்தார். இங்கு கூலித்தொழில் செய்யத் தொடங்கினார். அவரது வருமானமும் கிடைக்க குடும்பத்தில் கஸ்டமும் கொஞ்சம் குறைந்தது. இதனால் சந்தோசமாகவே இருந்தோம். எனக்கு இரண்டாவது மகனும் பிறந்தான்.

ஆனால் இரண்டாவது மகன் பிறந்து ஆறு மாதத்தால் கணவர் என்னை விட்டுப்பிரிந்து திருகோணமலைக்குச் சென்று விட்டார். சென்று மூன்று வருடங்களாக எந்தவிதத் தொடர்புமின்றி இருந்தார். இந்த சமயத்தில் மிகவும் மனவேதனையும் துன்பமும் கவலையும் மன அழுத்தமும் என்னைச் சூழ்ந்து கொண்டதை உணர்ந்தேன். மாற்றுத் திருமணம் முடித்ததால்தான் இவ்வாறு நிகழ்கிறது என்றும் நினைத்தேன். அதாவது எனது அண்ணா எனது கணவரின் அக்காவைத் திருமணம் முடித்தவர். ஆனாலும் எனது குடும்பத்தில்தான் பிரச்சினையாக இருந்தது. பிரச்சினைகளைத் தாண்டியும் நாம் வாழவேண்டும். இப்போ எனக்கு இரு மகன்மார் இருக்கிறார்கள். இவர்கள் இருவரையும் நன்றாக வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனது தம்பியும் எனக்கு உதவி செய்தான். அக்கா நீங்கள் தையல் பயிற்சி பெறலாம் என்று கூறியதுடன் அதற்கான நூல், துணி, பணம் அனைத்திலும் உதவி செய்தான். அனைத்தும் பயின்று முடித்த பின் எனது கணவர் 3 வருடத்தால் மீண்டும் திரும்பி வந்தார். வந்து சேர்ந்து இங்கு மீண்டும் கூலித் தொழில் செய்யத் தொடங்கினார்.

அப்போது நான் மூன்றாவது கர்ப்பம் தரித்தேன். எனினும் எனக்கு அந்தப்பிள்ளை வேண்டாம் என்று வெறுப்புடன் இருந்தேன். திரும்பவும் எனது கணவர் என்னை விட்டுப் பிரிந்து விடுவார் என்றும் பிள்ளைகளை எப்படிப் பராமரிப்பேன் என்றும் பயந்தேன். ஆனால் எனது கணவர் தான் பிழை செய்து விட்டேன் என்றும் திரும்பவும் அந்தப் பிழை செய்ய மாட்டேன் என்றும் இனியும் உன்னை விட்டுப்பிரிய மாட்டேன் என்றும் உறுதியுரை கூறினார்.

மகன் பிறந்து சிறிது காலத்தின் பின், எனது கணவர் உழைப்பது அனைத்தையும் குடித்து விட்டு வந்தார். இதனால் எனது குடும்பம் மிகவும் வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்தது அந்த சமயத்தில் தான் 2010ம் ஆண்டு மாநகரசபை கட்டிடத்தில் தையல், பெயின்ரிங், பூ வேலைப்பாடு போன்ற பயிற்சி நெறியில் கலந்து கொண்டேன். பயிற்சி முடித்திருந் தாலும் தையல் தொழில் செய்வதற்கான உபகர ணங்கள், முற்பணம் என்னிடம் இருக்கவில்லை. இவ்வாறானதொரு நேரத்தில் தான் "சூரியா"வின் வாழ்வாதாரத் திட்டம் எனக்கு உதவியது. அந்த உதவியால் வாடகைக்கு தையல் இயந்திரம் ஒன்று எடுத்து உடைகளைத் தைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் சிறு தொகையைச் சேமித்து அதில் புதுத் தையல் இயந்திரம் ஒன்றை வாங்கி அதில் தற்போது தொழில் செய்து வருகிறேன்.

இதில் வரும் வருமானத்தில் எனது தாயையும் எனது மகன்மாரையும் எனது குடும்பத் தையும் பராமரித்துக் கொண்டு இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இளைய மகன் தரம் 11ல் கல்வி கற்கிறார் இவரது படிப்புத் தேவைக்கும் இதன் மூலம் கிடைக்கும் வருமானம் பெரும் உதவியாக உள்ளது.

நான் காலை 5.00 மணிக்கு எழுந்து முகம் கழுவி 5.30 மணியளவில் பூக்கள் பறித்து கடவுளை மனதார வணங்கி பின்பு 5.45 மணியளவில் வீடு வாசல் அனைத்தும் கூட்டித் துப்பரவு செய்து, காலை 6.00 மணிக்கு வீட்டில் உள்ளோருக்கு காலை உணவு தயாரித்துப் பரிமாறி அது முடிய காலை 9.00 மணிக்கு தையல் வேலை செய்யத் தொடங்கி 11.00 மணி வரை தையல் . 11.00 மணிக்குப் பின் மதிய உணவு சமைத்து அனைவருக் கும் கொடுத்து மீண்டும் பி.ப 1.00 மணி தொடக்கம் பி.ப 5.00 மணி வரையும் தையல் வேலையில் ஈடுபடுவேன்.

மாலை 5.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை தேநீருடன் சிறிது ஓய்வு. பின் மாலை 6.00 மணிக்கு முகம் கழுவி பின் கடவுளை வணங்கி கடவுளுக்கு இன்றைய நாளுக்காக நன்றி கூறுவேன். இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை கை வேலை செய்து.இரவு சாப்பாட்டிற்கு பின் சிறிது ஓய்வு எடுத்து நித்திரை செய்வேன். எனது நாளாந்தம் வருமானமாக ரூபாய் 1000 பெறுகிறேன். இதில் செலவுக்கு போக மீதியை சேமித்து வருகிறேன்.

அத்துடன் சூரியாவின் வள்ளுவர் குழுவிலும் அங்கம் வகிக்கிறேன். மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நிர்வாக உறுப்பினராக இருக்கிறேன். சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவராக இருக்கிறேன். மரண நலன்புரிச் சங்கத்திலும் உறுப்பினராக இருக்கிறேன். சூரியா திருச்செந்தூர் உதவிக் குழுவிலும் உறுப்பினராக இருந்து வருகிறேன். எனது இவ்வாறான செயற்பாடுகளுக்கும் தனித்து நின்று செயற்படுவதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் அனைத்திலும் நான் முன் நின்று செயற்படுவதற்கும் காரணம் சூரியா அளிக்கும் உற்சாகமும் பயிற்சிகளும் ஆகும்.

# எனது யாத்திரை

எனது யாத்திராவில்
உனது நிழல் கூட
என்னுடன்
வர அனுமதியேன்.

பாதைகளில்
மறியல் போடுவதே
உனக்கு
அத்துப்படியாயிற்று.

வழியமைக்கவும்
உனக்குத் தெரியாது
வழிவிடவும்
உனக்கு தெரியாது.
கிடைக்கிற வழிகளில்
நடக்கவும் தெரியாது.

என் பாதைகள்
எனக்கே உரியன.
தனித்துவமானவை.
கண்டுகொள்ள உனக்கு
கண்களுமில்லை.

எனக்கு
முன் பிறந்தவனென்பதற்காக
உன்னையே
பின் தொடர்ந்துவர
என்னை நிர்ப்பந்தியாதே.

எனது பாதைகள்
அற்புதமானவை
அழகானவை



- சம்மாந்துறை மஷ்றா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபுரம் உயரும் குடிசை நிழல்கள்

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் எனும் கிராமத்தில் தனியாக வாழ்ந்து கொண்டிருக் கும் 60 வயதுடைய வசந்தகுமாரி மூன்று பிள்ளை களுக்கு தாயாவார். இவருக்கு 2 ஆண் பிள்ளையும் 1 பெண் பிள்ளையும் உள்ளனர். இவர்கள் மூவரும் திருமணம் முடித்து விட்டனர். கணவரும் இறந்து விட்டார். இவர் தற்போது தனித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர் பல வருட காலமாக கடையப்பம் செய்து விற்பனை செய்து வந்தார். தற்போது சிறிது காலமாக தனது வருமானத்தை அதிகரிக்க தான் வசித்துவரும் குடிசையினுள் சிறு கடை ஒன்றை தொடங்கியுள்ளார்.

2003ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கடையப்பம் செய்து வியாபாரம் செய்து வருகின் றார். இவருடைய கணவர் சந்தையில் நாட்டாமை வேலை செய்து குடும்பத்தை வழிநடத்தி வந்தார். மூன்று பிள்ளைகளும் படித்துக் கொண்டிருந்தார்கள். எனினும் கணவர் கொண்டு வரும் வருமானம் பிள்ளைகளை தொடர்ந்து படிக்க போதாமையால் வசந்தகுமாரி தானும் கடையப்பம் செய்து விற்றார். இத்தொழிலை செய்வதற்கு கணவரும் பிள்ளை களும் ஒத்துழைத்து வந்தார்கள். இவ்வாறு இருவரது வருமானத்தில் தனது குடும்பத்தேவையையும் நிறைவு செய்து மற்றும் பிள்ளைகளைப் படிப் பித்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்கையில் 2004ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட சுனாமியால் முழுவதுமாக பாதிக்கப்பட்டார். இவருடைய வீடு உட்பட வீட்டுப் பாவனைப் பொருட்கள், கடையப்ப வியாபாரப் பொருட்கள் அனைத்தும் சேதமடைந்தன. எதுவு மற்ற நிலையில் அகதி முகாமிற்குச் சென்றதால் வசந்தகுமாரியால் தொழில் செய்ய முடியவில்லை. எனினும் சிறிது காலம் கழித்து அகதி முகாமில் கடையப்பம் செய்து விற்பனை செய்யத் தொடங் கினார். பின்னர் திராய்மடுவில் வீடு கொடுக்கப் பட்டது. அதன் பின் அங்கு தனது தொழிலைத் தொடங்கினார்.

இவருடைய கணவர் தொழிலிருந்து நீங்கிவிட்டார். பிள்ளைகளும் வளர்ந்து தொழில் செய்யத் தொடங்கி விட்டனர். வசந்தகுமாரியின் வருமானத்திலும் பிள்ளைகளின் வருமானத்திலும் குடும்பம் நடந்தது. அடுத்து இரு ஆண் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் திருமணம் முடித்துச் சென்றனர். மூன்றாவதாக மகளுக்கு திருமணம் செய்து கொடுக்கும் போது வீடு உட்பட வீட்டுப் பொருட்கள் மற்றும் நகை கொடுத்து சிறப்பாக திருமணம் செய்து வைத்தார். இவருடைய பணம்தான் இத் திருமணச் செலவுகளில் அதிகமாகக் காணப்பட்டது.

தாம் வாழ்ந்திருந்த வீட்டைத் திருமணம் முடித்த மகளுக்குக் கொடுத்துவிட்டு கணவனுடனும் கடசி மகனுடனும் எற்கனவே திருமணம் முடித்துச் சென்ற மகனின் வீட்டிற்கு வந்தார்கள். சிறிது காலத்தின் பின் மகனின் வீட்டிற்கு முன்னால் உள்ள வேறு ஒருவரின் காணிக்குள் சிறு குடிசை கட்டி அதில் குடியேறினார்கள். ஆனால் எப்பொழுதும் தனது தொழிலை கைவிடாது மகனின் வீட்டிலும் தற்போது குடிசையிலும் அத் தொழிலைத் தொடர்ந்தார்.

இவருடைய கணவர் ஆஸ்த்துமா நோய் உடையவர். தனது வருமானத்தின் மூலமும் தனது கடசி மகனின் வருமானத்தின் மூலமும் தனது கணவரை பராமரித்து குடும்பச் செலவுகளையும் பூர்த்தி செய்தார். பின்னர் தனது மூன்றாவது மகனும் திருமணம் முடித்து சென்று விட கணவனும் மனைவியும் தனித்தவர்களானார்கள்.

சில காலத்தில் கணவனும் நோயினால் இறந்து விட்டார். எனினும் பிள்ளைகளுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தனது தொழிலைத் தொடர்ந்து செய்தார். வசந்தகுமாரியின் வீட்டில் நீர், மின்சாரம், மலசல கூடம் இல்லாத காரணங்களால் இவ் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மகளின் வீட்டிற்குச் செல்வதுடன் நித்திரை செய்வதற்காகவும் இரவில் மகளின் வீட்டிற்குச் செல்லுவார் வசந்தகுமாரி.

"வருமானத்தைக் கூட்டுவதற்கு வயது தேவையில்லை அதற்கேற்ற களம் இருந்தால் போதும்" என்பதற்கிணங்க தனது குடிசையிலும் தற்போது சிறு கடை வைத்து வருமானத்தைப் பெருக்கி வருகிறார். இவ்வாறு இத்தொழிலை மேற்கொண்டு தனது தேவையை மட்டும் பூர்த்தி செய்யாமல் தனது பேரப்பிள்ளைகளையும் பராமரித்து அவர்களுக்குத் தேவையான தன்னால் இயன்ற பொருட்களை வாங்கிக் கொடுக்கிறார். இதன் மூலமாக தனிமை மறந்து சந்தோஷமாக இருக்க இவரால் முடிகிறது.

அனுமதிப் பத்திரம் இல்லாது இதுவரை காலம் நடத்திய தனது கடைக்கு அனுமதிப் பத்திரம் தான் எடுப்பதற்கான நோக்கத்தில் இருப்பதாகவும் மகன் புதிதாய் வாங்கியுள்ள காணிக்குள் கடை ஒன்று வைத்து வருமானத்தைப் பெருக்க உள்ளதாகவும் இதுவே தனது நோக்கம் என்கிறார் வசந்தகுமாரி.

கடையப்ப வியாபாரத் தொழிலை பல வருடமாக மேற்கொண்டு சீட்டுக் கட்டி வந்த சேமிப்பாலும் சூரியாப் பெண்கள் நிலையத்தின் உதவியாலும்தான்தான் கடை வைத்ததாக மிகவும் சந்தோஷத்துடன் இன்று கூறுகிறார்.

## என்ன இது...



என்ன இது
எல்லாமே சொத்தலுமாய்
பொத்தலுமாய்
வந்தவர்கள் சொன்னார்கள்

வருவது வரட்டும்
உசுப்பல்கள் ஆரம்பமானது....
பலம் கொண்ட மட்டும்...
கண்மூடிப் பல் கடித்து...

இலைகளுடன் கிளைகளும்
சேர்ந்துதிரும் வரை
தீராவெறி தீரும் வரை
உசுப்பல்கள் ஆரம்பித்து...

ஓ....ய்ந்த பொழுதொன்றில்
சுட்டெரிக்கும் தணலில்
மொட்டையாய் நின்றது
மரம்

**விஜயலட்சுமி சேகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் வாழ்வாதாரமும்

## ஓர் மீள் கட்டவிழ்ப்புப் பார்வை

**வா**ழ்வாதாரம் என்பதைனை நாம் "மனித வாழ்வின் தேவைகளை ஈடேற்றுவதற்கான மூலங்கள்" *(A Means of Securing the necessities of life)* என்பதாக வரையறுக்கலாம். இதனை வேறுவார்த்தையில் கூறுவதாயின் "தண்ணீ, உணவு, உறையுள், மருந்துப் பெருட்கள், ஆடை முதலான அத்தியவசியத் தேவைகளை எய்துவதற்கான உரித்தே "வாழ்வாதாரம்" என்று குறிப்பிடலாம். பெண் நிலை நின்று நோக்குமிடத்து பெண்களின் வாழ்வாதார முயற்சிகளும், முன்னெடுப்புக்களும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதனை மறுக்க முடியாது. தந்தையாதிக்க மயப்படுத்தப்பட்ட பொருளாதார பூட்கைகளும், நிகழ்ச்சித் திட்டங் களும் பெண்ணை மையப்படுத்திய, அவர்களுக்கு இயைபான வாழ்வாதார வார்ப்பினை வழங்கு வதற்குத் தயாராக இல்லை. எடுத்துக்காட்டாக இந்தியா, பங்களாதேஷ், இன்னும் ஆபிரிக்க நாடுகளில் தண்ணீர், விறகு சேகரிக்கும் பொருட்டுப் பெண்கள் பல மைல் தொலைவு நடக்க வேண்டி யவர்களாக உள்ளனர். இப் பொறுப்புக்களில் ஆண்களின் பங்குபற்றுதலைத் தந்தையாதிக்க விதிகள் மறுதலித்து விடுகின்றன.

நமது நாட்டிலும் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம், வேறு முதலீட்டு முயற்சிகளில் பெண்களின் பங்கேற்பும், பெண் களின் கருத்தோட்டமும், அவர்களின் மெய்யான தேவைப்பாடுகளும் எத்துணை அளவு கவனம் செலுத்தப்பட்டது என்பது கேள்விக் குறியே.

"ஆண், வெளி உலகம் சார்ந்தவன். பெண் வீட்டுத்துறை சார்ந்தவள்" எனும் தந்தையாதிக்க கண்ணோட்டமும் பெண்களின் ஆரோக்கியமான வாழ்வாதார முன்னேற்றத்திற்குத் தடையாகவே உள்ளது.

இத்தகைய சூழலில் இருந்து இந்த ஆய்வு முயற்சியானது போருக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் நேர்காணல் ஊடாக இப்பிரச்சினையின் மெய்யான பரிணாமத்தை வெளிக் கொண்டுவரும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்குட்பட்ட பெண்கள், தாம் செய்து வந்த சுயதொழிலை மேம்படுத்துவதற்காக சூரியாவின் வாழ்வாதார உதவி பெற்ற பெண்கள் குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இங்கு சூழ்நிலை நேர்காணல் **(In-Depth Interview)** பின்பற்றப்பட்டது. அடிப் படையில் நேர்காணல் என்பது குறித்த சமூகப் பிரச்சினை, சமூக யதார்த்தம், நிகழ்வுகள் கூற்றுகள் என்பவற்றைத் திரட்டுவதற்கான மூலாக உள்ளது. இவ் ஆய்வில் பங்கெடுத்த பெண்களுக்கும் எவ்விதமான மனத்தடையும் அற்றவர்களாகத் தம் மனப் பதிவுகளை வெளிக் கொணர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பிடப் பட்டதொரு அரச சார்பற்ற ஸ்தாபனம், இளம் பெண்களை தச்சுத் தொழில், மின்சார இணைப்பு, நீர்க் குழாய் பொருத்துதல் முதலான தொழிற் துறைகளில் பயிற்சியளித்த போதிலும் மேற்படி தொழில்களில் "ஆண்களையே" பார்த்துப் பழகிய சமூகக் கட்டமைப்பினால் "பெண்களை" அங்கீகரிக்க முடியவில்லை.

கொடிய உள்நாட்டு யுத்தம், சுனாமி முதலிய வற்றால் கணவனை இழந்த பெண்கள், தனித்து வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி யெழுப்புவதற்கான "பொருத்தமானதும், சாத்தியப் பாடானதுமான சமூகப் பொறிமுறை" ஒன்று சமகாலத் தேவையாகின்றது. அந்தவகையிலும் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

**சந்திரசேகரன் சசிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சானாலும்
# நஞ்சற்றதே நமது

எனது பெயர் பாலசுந்தரம் அமுதா வயது 41. ஆறுமுகத்தான் குடியிருப்பில் வசிக்கின்றேன். நான் பிறந்தது வாழ்வது எல்லாமே குடியிருப்பில்தான். எனது குடும்பத்தில் நான் மூன்றாவது பிள்ளை. எனக்கு இரு சகோதரிகளும் இரு சகோதரர்களும் இருக்கிறார்கள். எனது அப்பா கூலித் தொழில் செய்து வருபவர். எனது குடும்பம் மிகவும் கஸ்டப் பட்ட குடும்பமாகும். நான் அவ்வளவாக பள்ளிப் படிப்பு படிக்கவில்லை. 9ம் ஆண்டு வரைக்கும்தான் படித்தேன். எனக்கு 20 வயது ஆனதும் அம்மா, அப்பா ஒருவரைத் திருமணம் முடித்துத் தந்தார்கள். எனக்கு இப்போது 3 பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் 15 வருடங்களாக காய்கறித் தோட்டம் செய்து வருகின்றேன். எனது பிள்ளை களின் கல்விக்கும், நாளாந்த சமையல் வேலைக்கும் ஏனைய சிறு சிறு செலவுகளுக்கும் இத் தோட்டத்தில் இருந்து வரும் வருமானம் மிகவும் உதவுகிறது.



எனது குடும்ப நிலை பற்றி கூறுவதாயின், எனது கணவர் மீன் வியாபாரம் செய்பவர். ஒழுங்காக தொழில் இருப்பதில்லை. ஒரு நாளைக்கு தொழிலுக்குப் போவார், ஒரு நாளைக்குப் போக மாட்டார் அதனால் எனது மூத்த பெண் பிள்ளை சாதாரன தரப் பரீட்சை எழுதாமல் ஆண்டு 11 உடன் படிப்பை நிறுத்தி விட்டு ஆரையம்பதியில் உள்ள ஆடைத் தொழில்சாலைக்கு வேலைக்குச் செல்கின்றார். எனினும் கஸ்டம் தீரவில்லை. இதனால் இரண்டாவது பிள்ளையும் ஒழுங்காக பாடசாலைக்குச் செல்வதில்லை. எனக்கும் அடிக் கடி வருத்தம் வரும். இருக்கிற நோய் எல்லாம் எனக்குத்தான் என்டு டொக்கரும் சொல்கிறார்.

இவ்வாறு இருக்கிறபோதுதான், சூரியா பெண்கள் நிறுவனம் எங்களது கிராமத்திற்கு வருகை தந்தது. இன்றுடன் கிட்டத்தட்ட 5 வருடங்கள் இருக்கும், சூரியா வந்து. அவர்கள் சிறு குழுக்கள் அமைத்தனர். நானும் அக் குழுவில் இருந்தேன். அவர்கள் கலந்துரையாடல் நடத்து வார்கள். அதில் பெண்கள் தலைமைத்துவம், பெண்கள் முன்னுக்கு வரவேண்டும், எதையும் பெண்களால் செய்ய முடியும், எனப் பல கருத்துக்களை கலந்துரையாடுவார்கள். இக் கலந்துரையாடல்கள் எனக்குள் தைரியத்தைத் தந்தது. "பெண்களால் எதையும் செய்ய முடியும்" என்பதே இன்று என்னுடய கருத்தாகும். எனது தோட்ட வேலைக்கு உதவியாக வோட்டர் பம், கோஸ் என்பன சூரியா தந்தார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான் அதிகாலையில் 4 மணிக்கு எழும்பி, வீட்டு வேலை செய்து, அதன் பின்னர் பிள்ளை களை பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி, தோட்ட வேலை ஆரம்பிப்பேன். ஒவ்வொரு நாளும் காலை 6 மணி தொடக்கம் காலை 11 மணிவரை தோட்ட வேலை செய்வேன். பிறகு வீட்டு வேலை கள் சமையல், கடை, உடுப்புக் கழுவுதல், எனத் தொடரும். மீண்டும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தோட்ட வேலை செய்து விட்டு, வீட்டு வேலைகள் செய்வேன். தோட்டத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு ரூபா 300 - ரூபா 400 வரை கிடைக்கும். எனது தோட்டமானது இயற்கை முறையில் ஆனது. நான் கிருமிநாசினி தெளிப்பது இல்லை. எனவே மக்கள் விரும்பி மரக்கறிகளை வாங்குகிறார்கள்.

இதுவரைக்கும் நான் கடன் என்று எதுவும் எடுக்கவில்லை. சமுர்த்தி வங்கியினூடாக மாதாந்தம் ரூபா 360 எடுக்கின்றேன். இந்த மாதம்தான் சமுர்த்தியில் கடன் போட்டுள்ளேன். என்றாலும் எனக்கு அடிக்கடி நோய் வருவதனால் தோட்டத் தொழில் செய்வது மிகவும் கஸ்டமாக இருக்கின்றது தற்போது தோட்ட வேலை அனைத்தும் எனது அண்ணாதான் செய்கின்றார். நான் சிறுசிறு உதவிகள் செய்து கொடுப்பேன். எனக்கு தோட்ட வேலை செய்ய முடியாதிருப்பதால் எனது கணவனுக்கு மீன் வியாபாரம் செய்வதற்கு "சூரியா" உதவிகள் செய்தால் நல்லது.

இதுவரைக்கும் நான் எதிர் நோக்கிய சவால்கள், பிரச்சனைகள் என்று பார்க்கின்றபோது அதிகளவில் எனது கணவனால்தான் பாதிக்கப் பட்டுள்ளேன். தொடர்ச்சியாக குடித்துவிட்டு வந்து அடிப்பார். பிள்ளைகள் தடுக்க வந்தால் அவர்களுக்கும் அடிப்பார். இவ்வாறான குடும்ப வன்முறைகள் எங்களது கிராமங்களில் அதிகம் நடைபெறுகிறது. அத்துடன் சிறு பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல், பிள்ளைகளை பாடசாலையில் இருந்து இடை நிறுத்தி விட்டு வீட்டு வேலைக்கு அனுப்புதல், மட்டக்களப்பு கடைகளுக்கு வேலைக்கு அனுப்புதல், பாலியல் துஸ்பிரயோகம், கடன் தொல்லை இப்படி ஏராளம். அதிகளவானவர்கள் வங்கிகளிலும், கொம்பனி களிலும் கடன்களை எடுத்து விட்டு அதனை கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். கட்டாயம் கடன் பிரச்சனைகள் முடிவுக்கு வர வேண்டும். இதனால் பாலியல் சேட்டைகள் நடைபெறுகின்றன.

# தனியே விடுங்கள்



என் உழைப்பை
சுரண்டாதீர்
எனை வதைத்து
உண்ணாதீர்
மண்ணுலகைவிட்டு
நானும் மடிகையில்
பெண் இவள்
தெய்வமென
பெருங்கோயில்
கட்டாதீர்
சராசரிப் பெண் என்றே
சாத்திரம் பேசாதீர்
விரசாமல் விட்டானே

உனைக் கணவன்
என்றே
கூசாமல்
சொல்லாதீர்
எனைத் தனியே
விட்டிடுங்கள்
வாழ்ந்தாலும்
வீழ்ந்தாலும்
வானுயரப் பறந்தாலும்
பெண் ஜென்மம்
இவளென்று
பிற்போக்காய்
கூறாதீர்.

**- வாசுகி குணரத்தினம்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நான் சந்திராவதி. வயது 39. ஆறுமுகத்தான் குடியிருப்பில் வசிக்கிறேன். என் பெற்றோர் கனகாலமாக பிள்ளை பாக்கியம் இல்லாது இருந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் வயது போய்த்தான் என்னையும், என் அண்ணாவையும் பெற்றெடுத்தார்களாம். தங்களுக்கு வயதுபோன பின் பெண்பிள்ளையை வீட்டில் வைத்திருக்கக் கூடாது என்று என்னை சிறு வயதிலேயே அதாவது 15 வயதிலேயே கலியாணம் கட்டி வைத்து விட்டார்கள். எனது கணவரும் சிறுவயதாக இருந்தாலும் ஆத்துக்கும், கடலுக்கும் போய் மீன்பிடித் தொழில் செய்து கொண்டு வருவார். எனது தாய் தகப்பனும் என்னோடுதான் இருந்தார்கள்.

குடும்பக்கஸ்டத்தின் காரணமாக கடல் கடந்து உழைப்பதற்காக வெளிநாடு சென்றேன். வெளிநாட்டில் சவுதியில் நல்ல வீடுதான் கிடைத்தது. நல்லா சாப்பாடு தந்தாங்க, உடுப்பெல்லாம் வாங்கித் தந்தாங்க ஆனா சம்பளம் தரவே இல்ல. நானும் பார்த்தேன், என்னை நன்றாகத்தானே பார்க்கிறார்கள் சம்பளம் தருவார்கள்தானே என்று. ஆனால் சம்பளம் தரவே இல்லை. ஒரு நாள் வீட்டுக்காரர்களோடு சண்டை போட்டு ஏஜென்சிக்கு கூட்டிப் போனேன். இப்படி ஒன்பது தடவை வீட்டுக்காரனோடு சண்டை பிடிச்சி, பிடிச்சி ஏஜென்சிக்கு போய் வந்தேன். ஒரு பிரயோசமும் இல்லை சம்பளம் அறவே தரல்ல.

என்னுடைய வீட்டிற்கும் ஒரு கோல் கூட எடுக்க முடியாதிருந்தேன். கணவர், பிள்ளைகளின் நிலை தெரியாது. என்ன செய்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை கடல் கடந்து வெளிநாடு வந்தும் கஸ்டம், கஸ்டம்தானே ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரு நாள் காலை வீட்டுக்காரனும் அவனது மனைவியும் என்னிடம் இரண்டு பிள்ளைகளையும் தந்து விட்டு வேலைக்கு போய் விட்டார்கள். நான் பிள்ளைகள் இருவரையும் தூங்க வைத்தேன். குசினிக்கதவை நன்றாக இழுத்து மூடினேன். என்ட பாஸ்போட் வைக்கும் இடம் எனக்கு தெரியும். அதையும் எடுத்தேன். என்ட

# கடல் கடந்து வெளிநாடு சென்றேன்

## பாதியிலே திரும்பி வந்தேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய உடுப்பையும் என்ட பெட்டிக்குள் போட்டு எடுத்தேன். மேல் மாடியில் இருந்து எட்டிப் பார்த்தேன். ரோட்டில் வண்டி போய்க் கொண்டிருந்தது. யாருக்கும் தெரியாமல் பாய்ந்து வந்து வண்டி ஓட்டுனரிடம் சொன்னேன். ஏஜென்சியிடம் கொண்டு போய் விடு என்று. அதே மாதிரி கொண்டு போய் விட்டான்.

ஏஜென்சியிடம் எல்லா விடயத்தையும் சொன்னேன். வீட்டுக்காரன் ஏஜென்சிக்கு அறிவித்தான். வந்து தேடினான். என்னை மறைத்து வைத்து விட்டு நான் வரவில்லை என்று சொல்லி விட்டார்கள். என்னை எம்பசியில் 7 நாட்கள் வைத்திருந்தார்கள். அங்கு உண்ண உணவு இல்லை, தண்ணீர் இல்லை. காரணம் 700 பேருக்குக் கிட்ட பெண்கள் என்னைப்போல் அங்கிருந்தனர். முந்தியவருக்குத்தான் சாப்பாடு கிடைக்கும். ஆனா எல்லோரும் பாவம் தானே. நான் எனக்குக் கிடைப்பதை பங்கிட்டு சாப்பிட்டுக் கொள்வேன். என்ன செய்வது எனக்கு சாப்பாடு முக்கியம் இல்லை. என்ட சம்பளம் முக்கியம். அதோட நானும் எப்படியாவது இலங்கைக்கு போகவேனும் என்பது என்ட ஏக்கமாக இருந்தது. என்ட கையில மோதிரமும் 400 ரூபாய்க் காசும் இருந்தது. பொருள் பண்டம் எதுவும் கையில் இருக்கக் கூடாது என்று அதையும் எம்பசியில் வாங்கி எடுத்திட்டாங்க.

திரும்பவும் இலங்கை எம்பசில இருந்து அரபி எம்பசிக்கு அனுப்பி வைத்தார்கள். அங்க அவிச்ச கோழியும், வெள்ளைச் சோறும், பச்ச மிளகாய் ஒரு துண்டு, வெங்காயமும் தருவார்கள். இதுதான் சாப்பாடு. இப்படியா கொஞ்சகாலம் அங்கேயே இருக்க வேண்டியிருந்தது. "கும்பிட்ட கடவுள் கை விடமாட்டான்" என்பது பொய் இல்ல. ஒரே நாளில் திடிரெண்டு "இலங்கைக்குப் போக தயாராகுங்கள்" என்று சொன்னார்கள். அதுவும் சும்மா இல்ல 700 பேரையும் ஒரே நாளில். 50, 60 பாஸ்போட்டை அள்ளிக் கொட்டி விட்டான். தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூன்று இன மக்களும் தான் இருந்தோம். சந்தோசமோ சந்தோசம் இனில்லன்ட சந்தோசம். ஆனா பிள்ளைகள், கணவருக்கு வெறும் கையோடு போற என்ட கவலை. போன் பண்ணி சொல்ல வழியில்லை. பாழும் கிணற்றில் இருந்து விடுதலையான மாதிரி சொல்ல முடியாத ஆனந்தம்.

எப்படியோ இலங்கை எயாபோட்டில் இறக்கி விட்டார்கள். வெளிச்சத்தைக் கண்டதே இலங்கையில்தான். இலங்கை எயாபோட்டில் பஸ்சிற்க்கு போக 300 ரூபாய் தந்தார்கள். அத எடுத்திட்டு நாங்க மூன்று பேரும் வந்தம். வந்து வீட்டில இறங்கினா சரியான வெள்ளம் வேற. வீட்டில இருந்தவங்களுக்கு நான் உயிரோட வந்ததே காணும் என்று அழுதார்கள். இப்படித்தான் நான் நிறைய கஸ்டப்பட்டன். இப்படி இருக்கையில்தான் ஒரு நாள் சூரியா நிறுவனம் ஊருக்குள் சேவை செய்து வருவது பக்கத்து வீட்டார் சொல்லித் தெரிய வந்தது. அந்தக்குழுவில் நானும் சேர்ந்தேன். அக்குழுவில் சேர்ந்தது மிகவும் நல்லது. வாழ்வாதார திட்ட உதவி நிறையப் பேருக்கு செய்தாங்க. எனக்கு மீன்பிடிப்பதற்கான வலைகள் வாங்கித் தந்தாங்க. நானும் எனது கணவருடன் இருந்திருந்து போட்டு மீனுக்கு போவன். கருவாடு காய வைப்பன். என்ட கணவருக்கு நிறைய ஒத்தாசை வழங்குவன். எனக்கு 4 பிள்ளைகள். ஒரு மகன் கலியாணம் கட்டி விட்டான். மற்ற மூன்று பேரும் படிக்கிறார்கள்.

நான் இப்ப கருவாட்டு வியாபாரமும் செய்கிறன். அத்தோடு மெயின் வீதியில் மரக்கறிக் கடையும் போட்டிருக்கிறன். ஒரு நாளைக்கு 500ரூபாய், 600 ரூபாய்க்கு வியாபாரம் போகும். வியாபாரத்தையும் கவனித்துக் கொண்டு வீட்டை யும் பார்த்துக் கொண்டு குழுக்கூட்டங்களுக்கும் போவேன். குழுக்கூட்டம் சும்மா எல்லாம் போடுறது இல்ல. கூட்டத்தில சுகாதாரம் சம்மந்தமாக, சமூகம் சம்மந்தமாக கதைப்பாங்க. அதனாலதான் நான் சூரியாக் கூட்டத்திற்கு போறன். நான் இந்த வியாபாரத்தினாலதான் நிம்மதியா சோறு சாப்பிடுறன். கரண்ட் காசு கட்டுகிறன், பிள்ளைகளை படிக்க வைக்கிறன். இதுக்கெல்லாம் நான் சூரியாவிற்குத்தான் நன்றி சொல்லனும். எனது கணவர் இப்ப வாடகைக்குத்தான் தோணி வாங்கி மீன் பிடிக்கிறார். ஆனா நமக்கென்று ஒரு தோணி இருந்தால் இன்னும் அதிகமான மீன்களைப் பிடிக்கலாம். நல்லா உழைக்கலாம். அதுமட்டுமில்ல பலகார வகைகளும், இனிப்புப் பண்டங்களும் எனக்கு நிறைய செய்யத் தெரியும். அதனையும் செய்து மரக்கறிக் கடையுடன் போட்டு விற்கப் போறன். நானும் எனது குடும்பமும் சந்தோஷ மாக இருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளை
## மற்றொரு நாள்

நான் ஜெயரஞ்சினி. எனது ஊர் எண்ணம் பாவல்பூவல். எங்களுரின் கடந்த காலத்தை எண்ணும் போது அது எங்களால் மறக்கவே முடியாதது. யுத்தங்களின்போது எனது குடும்பம் மாத்திரம் அல்ல என்ர கிராமமே படாத பாடுகள் பதினாறும் பட்டு காடுகளிலும், பங்கர்களிலும் ஒழிந்த ஒழிந்து உயிரைக் காப்பாற்றிய காலம் அது. என் அம்மாவும் கைக்குழந்தையாகிய என்னைத் தூக்கிக்கொண்டு ஊராரோடு ஓடித்தான் என்னைக் காப்பாற்றி ஆளாக்கி எடுத்தார். எனக்கு இப்போ 32 வயது.

இப்படி என்ர அம்மாவை யுத்தம் மாத்திரம் கஸ்டப்படுத்தவில்லை என்னைப் பெற்ற தகப்பனும் தான் கஸ்டப்படுத்தியிருக்கிறார். நான் பிறந்து 6 மாத கைக்குழந்தையாம். அப்பா என்னையும் அம்மாவையும் விட்டுப்பிரியும் போது. ஆனால் அம்மா என்னை வெறுக்கவும் இல்ல வேறு திருமணம் முடித்து வாழவும் இல்ல. எனக்காகவே வாழத் தொடங்கினார். என்னை வளர்ப்பதற்காக பல துன்பங்களையும் அனுபவித்தாவாம். அம்மா தான் கதிர் பொறுக்கி நெல் எடுத்து அரிசி குத்தி என்னை வளத்து பெரியாளாக்கினாவாம். அதோடு என்னை நன்றாக படிக்கவும் வைத்தா.

நான் க.பொ.த சா.தரம் (O/L) வரைக்கும் நன்றாகப் படித்தன். எல்லா பாடத்திலும் சித்தி பெற்றன். உயர்தரம் படிச்சாலும் தொடர்ந்து படிக்க வசதி இருக்கல்ல. அதால வீட்டில அம்மாக்கு உதவியாக இருந்து விட்டன். அம்மா என்னிடம் நெல்லு குத்தி அரிசியாக்கித் தருவா. அதை வித்துக் கொடுப்பன். அவவுக்கு நெல்லுக் குத்தியும் கொடுப்பன். அம்மாவும் நானும் நெல்லுக் குத்தி விற்று கொஞ்சக் காலம் வாழ்ந்தம்.

இப்படியான காலக்கட்டத்தில் அப்போ எனக்கு 20 வயது இருக்கும், என் அம்மாவும் உறவினர்களும் சேர்ந்து எனக்கு கலியாணம் கட்டி வைத்தாங்க. கட்டின நாள் தொடக்கம் பட்ட அவமானமும், கஸ்டமும் துன்பமும் கொஞ்ச நஞ்சமில்ல எல்லா கஸ்டமும் பட்டுத்தன். என்ர புருசனுக்கு ஒரே என்னில சந்தேகம். சந்தேகப் பார்வையோட சன்டை பிடிப்பாரு. வேனும் என்றே குழப்புவாரு நானும் ஊருக்குப் பயந்து அம்மாபடும் கஸ்டத்த பார்த்து இரண்டு பிள்ளைகளுக்கு தாயாகும் வரைக்கும் இந்த சந்தேகப் பேயோட வாழ்ந்து குடும்பம் நடத்தினன். அதுக்கு மேல என்னால பொறுக்க முடியாத அளவு கொடுமை. ஒரே என்னைப்போட்டு அடிப்பாரு என்னால பொறுக்க முடியல்ல. பொலிசில முறைப்பாடு போட்டு எனக்கு வேணாம் என்றே சொல்லித்தன்.

எனக்கு 2 பிள்ளைகள் உள்ளார்கள். அம்மாக்கு இப்போ 58 வயது. அம்மப்பாவும் என்னோடு தான் இருக்கிறார். என்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இரண்டு பேருக்கும் இவங்கதான் துனை. எனக்கு தையல் தொழிலும் தெரியும் என்ற படியால் அந்த தொழிலும் ஓரளவு கைகொடுக்கிறது. அதோடு டயலோக் கம்பனியிலும் வேலை செய்கிறன். என்னுடைய வருவாயால்தான் முதியவர்களையும் என்ட பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு சமாளிக்கிறன்.

எனக்கும் என் குடும்பத்தாருக்கும் சமுர்த்தி முத்திரை கூட இல்ல. கணவருடைய உதவியும் இல்ல. நான்தான் உழைக்கனும். உழைப்புக்காக நான் மட்டக்களப்பு ரௌனுக்குதான் (town) வரனும். காலையில் 6.00 மணிக்கு புறப்பட்டு பின்னேரம் 5..30க் குத்தான் வீடு திரும்புவன். அதால சமூகம் என்ன ஏளனமாப் பாக்கிறதும் பல கதைகள் கதைக் கிறதுமா இருக்கு. என்றாலும் மற்றவர்களுடைய கதையோ மற்றவர்களோ எனக்கும் என்ர குடும்பத் திற்கும் சோறு போடுவதில்லையே. ஆட்களின் கதைக்காக உழைப்பை எப்படி விடலாம்? அம்மா சிறுவயதில எவ்வளவோ கஸ்டப்பட்டா. குடிக்கத் தண்ணீ கூட இல்ல அப்போ. 5 கிலோ மீற்றர் தூ ரம் போய்த்தான் தண்ணீ எடுக்கனும். எப்படி எல்லாம் கஸ்டப்பட்டம் என்று அந்த கடவுளுக்கும் எங்களுக்கும்தான் தெரியும். இதெல்லாம் நினைச்சுத்தான் வேலைக்குப் போறன்.

இப்ப என்ர மூத்த மகனுக்கு 12 வயது. இரண்டாவது பெண் பிள்ளைக்கு 8 வயது. நானும் கணவர் திருந்துவார் திருந்துவார் என்று எப்படி யாவது பிள்ளைகளுக்காகவாவது சரி வருவார் என்று நம்பி போட்ட வழக்கையும் "மோசம்" (மோசன்) போட்டு திருப்பித்தன். ஆனா அவன் மாறவே இல்ல. அப்படியேதான் இருக்கான். திரும்பவும் அவனுக்கு எதிரா வழக்குப் போட்டன். அதால நிறைய பாதிக்கப்பட்டதுதான் மிச்சம். நான் பிடிச்ச சட்டத்தரணி, தான் கதச்சி பிரிச்சு விடுரன் என்று சொல்லி என்னிடமும் பணத்தை வாங்கிப் போட்டு, என்ட புருசனிடமும் காசை வாங்கி அவரிட்ட சொல்லி இருக்கார், வழக்கை பிரச்சினை இல்லாம தீத்து வைக்கிறன் என்று. அதால கோட்டில இரண்டு பேரும் சேர்ந்து வாழுங்கள் என்று கூறிவிட்டார்கள். எனக்கும் இதுக்கு மேல ஒன்றும் செய்யத் தெரியல்ல

நான் சூரியா பெண்கள் நிலையத்திற்கு வந்து அட்வைஸ் கேட்டன். உங்களுக்கே தெரியும் தானே நான் வேலை பார்க்கும் கம்பனியில லீவு எல்லாம் இல்லை. வழக்கறிஞரை சந்திக்க வேணும் எண்டா நேரம் தேவை. கம்பனியில நேரம் தர மாட்டாங்க. நாங்கள் பிரிந்து ஏழு மாதம் ஆகிறது. பிள்ளைகளக் கூட பார்க்க வருவதில்ல. எனக்கு போடுவதற்குக்கூட உடுப்பு இல்லை. முழுவதையும் கட்டி எடுத்துக் கொண்டு சென்று விட்டான். எனக்கு உடு துணி இல்லாட்டியும் பரவாயில்லை. குடும்பத்தில நிம்மதி வேண்டும். சமூகம் வேற என்ன ஒரு மாதிரியாக் கதைக்குது. தாய்க்கும் புருசன் இல்லை மகளுக்கும் புருசன் இல்லை என்று. என்ட பிரச்சனை அந்தக் கடவுளுக்கும் எனக்கும்தான் தெரியும்.

இப்படியான பிரச்சனைகளால பாதிக்கப் படுவது என்ட பிள்ளைகள் இருவரும்தான். இப்ப என்ர கிராமத்தில தண்ணிக்கு கஸ்டம் இல்ல. லைன் தண்ணீ வந்து விட்டது. சூழல் சம்மந்தமாக பாத்தா இப்போ பாதுகாப்பான சூழல்தான். எவ் வளவோ பயிற்சிகள் எல்லாம் பெற்று இருக்கிறன். அதால இதுவரை எதுவும் பலன் இல்ல. உரிமைகள் சம்மந்தமாக எவ்வளவோ தெரிந்திருந்தாலும் பாதிப்பு என்று வரக்குள்ள எனக்கும் என்ர பிள்ளை களுக்கும் பயிற்சியால எந்த வித நன்மையும் வரல்ல. சூரியாவில நடக்கிற "பெண்ணியப் பொருளாதார" "கோசு"க்கு எல்லாம் வந்தனான்தான். எனக்கு விருப்பம்தான் வாறதும். ஆனா எனக்கு லீவு இல்லதானே. வேலைக்குச் சேந்து நாலு மாதமாகிறது. ஆறு மாதத்தால இபிஎப், இரிஎப் (EPF, ETF) வெட்டுவம் என்று சொல்லியிருக்காங்க.

நான் இருக்கின்ற வீடும் அரசாங்கத்தால தந்த ஐந்தரை லட்சம் வீடு. அதுவும் குறையாக வுள்ளது. பிள்ளைகளும் படிக்கிறாங்க. அவர்களைப் படிக்க வைத்து ஒரு நல்ல நிலமைக்கு எடுக்கனும் என்பதுதான் என்னுடைய நோக்கமாக இருக்கிறது. ஆனா நான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டுதான் இன்னம் இருக்கிறன். நான் ஏற்கனவே "கிபி பண்ட்" என்ற நிறுவனத்தில் செயற்பாட்டுக் குழுத் தலைவியா வேலை பாத்தன். அதுவும் தொண்டர் அடிப்படையிலதான். ஆனா அது எனக்கு இப்ப பெரிய பிரச்சினையாகித்து. கிபி பன்ட் நிறுவன முகாமையாளர் என்னிடம் வெறும் செக்புக்கில் சைன் வாங்கினார். அவர் வெறும் செக் புக்கில் "நீங்க இதில சைன் பண்ணுங்க" என்டு சொல்லுவார். நானும் போட்டன். ஆனா இப்போ 50,000 ரூபாய், 75,000



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரூபாய் என்று எடுத்த மாதிரியும் அத 40 பேருக்கு நான் கொடுத்த மாதிரியும் கணக்கு வழக்கு உள்ளது. இப்ப அது பெரிய பிரச்சினையாக உள்ளது. அவங்க காச எடுத்து விளையாடித்து இப்ப என்ன மாட்டுறாங்க. 40 பேர்ர கடனையும் நான்தான் கள்ள சையின் பண்ணி எடுத்ததா சொல்லுறாங்க. இதப்பத்தி மனஜரிடம் நான் போய்க் கேட்டன். அவர் சம்பந்தம் இல்லாம கதைக்கார். வங்கியில் நான் காசு எடுத்திருந்தா bank ல் கூட cctv camera இருக்கும்தானே. நான் ஒரு தடவ கூட காசு எடுக்கப் போகவே இல்ல. வெறும் செக்புக்கில் மாத்திரம் சைன் பண்ணிக் கொடுத்தேன். இப்ப சி.ஐ.டி யை அனுப்பி என்னை மிரட்டுகிறாங்க. சரியா தொந்தரவு படுத்துறாங்க. தெரியாத ஆக்கள் எல்லாம் வந்து வீட்டிலயும் அம்மாவை மிரட்டுறாங்களாம். நான் கொள்ளையடித்து விட்டனாம் என்று கள்ள சைன் வைச்ச நானாம் என்று என்னப்பத்தி ஏத்தி குடுத்து ஊர் மக்கள என்னக் கேவலமாகக் கதைக்க வைக்கிறாங்க

எனக்கு என்ன செய்வது என்றே தெரியல்ல. அடிக்கடி தொலைபேசியிலும், நேராகவும் வந்து மிரட்டுறாங்க. "மீற்றிங் வா" என்று கூப்பிடுறாங்க. நான் போற இல்ல. என்ர கணவரின் வழக்குப் பிரச்சினையை சூரியாவில் வந்து கதைக்கும்படி சூரியா லோகா அக்கா வந்து சொல்லி இருக்கா. ஒரு நாளைக்கு லீவு போட்டு வருவன். எல்லா பிரச்சினையையும் தலையில சுமந்து கொண்டு தான் வாழுறன். இப்படித்தான் என்ர வாழ்க்கை தொடருது......

'கண்கள் திரும்பாதோ?'
பொருளாதாரத்தினில்
பொருள்தானே தாரம் எனினும் -
வாழ்வாதாரத்தில்
'தாரத்தின்' நிலை என்னவோ....?

காலனிய அறிவாக்கத்தில்
உச்சம் கண்ட மெத்தப்படித்தவர்கள்
தீட்டும் திட்டங்களில்
பெண்கள் இன்றும் -
தீண்டத் தகாதவர்களாக....!

'இயற்கை அழைப்பிற்கும்'
'டோக்கனில் காத்து நிற்கிறாள்
ஆடைத் தொழிற்சாலைப் பெண்....!

முதுகு வளைய வளைய
தேயிலைக் கொழுந்து பறித்தாலும்
கால் வயிற்றோடு
அரையடிக் 'காம்பறாவில்' என்
மலையகத்துச் சகோதரி....

மீன் வலை இழுப்பவளுக்கும்,
வயலில் களை பறிப்பவளுக்கும்
'பொம்பிளக் கூலி'!
காரில் பவனி வந்து
'மார்க்சீயம் பேசும்' கனவான்களே!
எங்களை நோக்கியும்
உங்கள் கண்கள் சற்றே திரும்பட்டும்!



"நிலாபாரதி"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உலகம் பந்து போன்றது

"நான் சியானா. வயது 23. கிதாயத் நகர், ஏறாவூர்-1 இல் வாழ்கிறன். எனக்கு உம்மா, மூன்று ராத்தாக்களும், இரண்டு நானாவும் இருக்கிறார்கள். எண்ட வீட்டில் நான்தான் ஆறாவது கடைசி மகள். வாப்பா தோட்ட வேலை செய்துதான் எங்களைப் பாதுகாத்தும் பராமரித்தும் வந்தார். இப்ப வாப்பா உசிரோட இல்ல. அது எனக்கு சரியான மனவருத்தம்" இவ்வாறு சியானா எங்களுடன் கதைத்துக் கொண்டு இருக்கும்போதே தனது அம்மாவிடம் கதைக்கும்படி கூறினார். சியானாவின் அம்மாவும் எங்களுடன் கதைக்கத் தொடங்கினார். "நாங்கள் 1990ம் ஆண்டு யுத்தத்தினால் பாதிக்கப் பட்டோம். அப்போது சியானா பிறக்கவில்லை. ஏனைய மக்களுடன் நாங்கள் அனைவரும் ஏறாவூரில் உள்ள ரகுமாணியா ஸ்கூலில் அகதியாக இருந்தோம். அதற்குப் பிறகு ஆற அமர வாழ எண்ட மக்களோடையும் எங்கட கிராமத்து மக்களோடையும் எங்கட சொந்த இடத்திற்கு வந்தோம். வந்தா என்னத்த மனே சொல்றது பாழ்பட்டு போன மக்கள் எண்ட வீட்ட சேதமாக்கிப் போட்டானுகள். கள்ளன் களவு எடுத்துப் போட்டான். ஆக்கித்தின்னையும் சட்டி பானை இல்லாம இருந்தோம். அதனால எல்லா இடமும் பதிவு செய்தம். எல்லா ஆதாரமும் இருக்கு. ஆனா எவ்வித உதவியும் கிடைக்கல்ல. பிறகு எண்ட மூத்த மகள்தான் மனே வெளிநாடு போய் கஸ்டப் பட்டு வீட்ட கட்டி முடிச்சா. அதுவும் அரையும் குறையுமாத்தான் இருக்கு." சியானாவின் அம்மா அதற்குமேல் தொடர்ந்து கதைக்க கஸ்டப்பட்டா. அவருக்கு அவகாசம் தேவைப்பட்டதை நாம் உணர்ந்தோம். தொடர்ந்து சியானா கதைக்கத் தொடங்கினார்.

"எனக்கு யுத்தம் என்றாலே பிடிக்காது. அதோட எனக்கு யுத்தம் சம்மந்தமாக தெரியவும் தெரியாது. ஏனென்றால் அப்ப நான் பிறக்கல்ல. நான் சிறுவயதில் இருந்தே நன்றாகப் படித்தன். எனக்கு படிப்பு என்றால் ரொம்பப் பிடிக்கும். நல்லா படிக்கனும் என்று சரியான ஆசை. ஆனா என் ஆசை நிறைவேறல்ல. எனது வாப்பா வெளியாளின் காணியில் தோட்ட வேலை செய்துதான் குடும்பத்தை நடத்தினார். மூன்று வருட காலமாக செய்து வந்தார். பிறகு வளவுக்காராக் கள் அந்த வளவிற்குள் வீடு கட்டிப்போட்டார்கள். அதால வாப்பா தோட்ட வேலையை விட்டுத்தாரு. வாப்பாக்கும் சிறுநீரகப்பாதிப்பு வந்து கொஞ்சக் காலத்திற்கு பிறகு மௌத்தாகித்தாரு. அது எனக்கு சரியான கவலை.

பிறகு என்ட ராத்தாதான் குடும்பப் பொறுப்பை சுமந்து கொண்டாள். இரண்டு நானாவும் கொழும்பில் கலியாணம் கட்டி அங்கயே இருக்கிறார்கள். அவங்க கலியாணம் கட்டின நேரம் நான் உயர் தரம் முதல் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். எனது குடும்ப நிலை சரியான கஸ்டமாக இருந்தது. ராத்தா வீடு கட்டி குடும்பத்தை பார்த்து வந்தாள். அவளை எனது படிப்புச் செலவிற் கும் கஸ்டப்படுத்த முடியாது. அதால படிப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியிலேயே நிறுத்தி விட்டன். பிறகு உம்மாவும் நானும் முந்திரியம் பருப்புத்தான் சுரண்டி அன்றாடத் தேவையை சமாளித்து வந்தோம். அதுவும் ஒரு நாளைக்கு 5 கிலோ சுரண்டிக் கொடுப்பம். அதுக்கு கூலியாக 150 ரூபாய் தருவார்கள். இப்படித்தான் நானும் உம்மாவம் வாழ்க்கையைக் கொண்டுபோனம்.

இப்படி முந்திரியம் பருப்பு சுரண்டி வாழும்போதுதான் ஒரு நாள் நாங்கள் "சூரியா" உத்தியோகஸ்தர் அரியமலர் அக்காவை சந்தித்தம். அந்த நேரத்தில் சூரியா கூட்டங்கள் எங்கட கிராமத்தில் நடந்து கொண்டிருந்தது. உம்மா அந்தக் கூட்டத்திற்குச் செல்லத் தொடங்கினார். குழு உறுப்பினர்கள் ஐம்பது ரூபாய் சிறு சேமிப்பு செய்து கொண்டிருந்தார்கள். பிறகு உம்மாவுக்கு வயசு போனதால் கூட்டத்திற்கு நான் போகத் தொடங்கினன். அதில் செயளாலராக நான் இருக்கிறன். எங்களுக்கு வாழ்வாதார உதவியாக "வாட்டர் பம்" தருவதாகக் கூறினார்கள். ஆனால் தோட்டவேலை செய்ய ஆள் இல்லாததால் எனக்கு தையல் இயந்திரம் எடுத்துத் தந்தார்கள். ஏனெனில் நான் R.D.S ல் ஆறு மாத தையல் பயிற்சி பெற்றிருந்தன்.

இப்போ நான் தையல் தொழில் செய்தும் உம்மா முந்திரியம் பருப்புச் சுரண்டியும் உழைக் கிறோம். எப்படியோ இப்போது நல்லா இருக்கிறம். எனது ஐந்தாவது அக்கா எனக்கொரு காணி தந்திருக்கிறா. ஜனாதிபதியின் வீட்டுத் திட்டத்தில் ரூபாய் 200000 பெறுமதியான வீடு வந்தது. சமுர்த்தியால் 100000 ரூபா தந்தார்கள். இப்போ ஒரு வீடு கட்டியிருக்கன். ஆனால் சமூர்த்தியில் எடுத்த 100000 ரூபாய் கடனும் கட்ட வேண்டும். சமுர்த்தியினால் வீட்டுக்கு கரண்டும் எடுத்துத் திருக்கன். இரண்டுமே கடன்தான். இந்த இரண்டு கடனையும் நான் தைத்துத்தான் கட்டி வாறன். மேலதிகமாக வாற வீட்டுச் செலவையும் சமாளிக்கன். எனக்கு பெரிய சந்தோஷம். இந்த உதவி கிடைச்சதுக்கு நானும் உம்மாவும் சூரியாவிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறம்.

நான் இந்த தையல் பயிற்சியைத் தவிர வேறு எந்த கோசும் முடிக்கல்ல. காரணம் சமூகம். கலியாணம் கட்டாத நான் வெளியில போனா நிறய கேள்விகள் கேட்பாங்க. எங்கட சமூகத்திற்கும் கட்டுப்பட்டுப்பட்டுத்தானே ஆகணும். "சூரியா"வால் நடத்தப்படும் "பெண்ணிய பொருளா தாரம்" வகுப்பிற்கு தெரிவான என்னால் நாலு வகுப்புக்குத்தான் போக முடிந்தது. ஏனென்றா தனியா போய் வர யாரும் விடமாட்டாங்க. நிக்க வச்சு கேள்விதான் கேட்பாங்க. கவிவா உம்மா போனாத்தான் நான் போவன். எனக்கு ரொம்ப விருப்பம் பெண்ணிய பொருளாதாரப் பயிற்சியை முழுமையாக முடிக்க வேண்டும் என்று. பயிற்சி முடிய என்னக் கொண்டு வந்து வீட்டில் விடுவார்கள் என்றால் நான் அந்த பயிற்சியையும் முழுமையாக முடிப்பன்.

சமுர்த்தி உதவி எனக்கில்ல. என்னுடைய பெயரே பதிவிலும் இல்ல. உம்மாக்கு மாத்திரம் மூன்று நாலு மாதத்திற்கொருக்கா 3000 ரூபாய் அல்லது 4000 ரூபாய் கொடுப்பாங்க. என்னை சமுர்த்தியில் உள்வாங்கவும் இல்லை

1990ம் ஆண்டு பதிவின்படி என்னுடைய பெயர் பதிவில் இல்லையாம் என்று எனது கதையைக் கேட்கவும் இல்லை. பதியவும் இல்லை. எனக்கு மட்டும்தான் இந்தப் பிரச்சினை என்று இல்லை. எனது சமூகத்தில் இதே போன்று நிறையப்பேருக்கு இவ்வாறான உதவி இல்லை. பிள்ளைகள் கலியாணம் கட்டினால் சமுர்த்தியில் இருந்து பெயரை வெட்டி விடுகிறார்கள். ஆனால் கல்யாணம் கட்டாத பதியப்படாத பிள்ளைகளை பதிவில் சேர்க்க மறுக்கிறார்கள். எனது பக்கத்து கிராமத்தில் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர் கள் எங்களுடன் நன்றாகத்தான் புளங்குகிறார்கள். பக்கத்துக் கிராமமாகிய குடியிருப்பு தமிழ் மக்களின் உறவு இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்த உறவு காலம் பூராவும் நீடிக்கனும். எங்களு டைய பெருநாள் என்றால் அவர்களுக்கு கொடுத்து சந்தோஷமாக உண்டு குடித்து மகிழ்வோம். அவங்களும் அப்படித்தான்.

எனக்கு ஒரு ஆசை படித்து பட்டம் பெற வேண்டும் மக்களுக்கு சேவை செய்ய வேணும் என்று. அதே நேரம் பெண் என்ற ரீதியில் கட்டாயம் கைத்தொழில் ஒன்று தெரிஞ்சிருக்க வேண்டும். அது தான் எனக்கு இப்பவும் கைகொடுக்குது. யாரும் படிக்க உதவி செய்வார்கள் என்றால் நான் படிப்பன். அதுக்காக நான் முயற்சி செய்யிறன். அல்லா நிச்சயம் உதவி செய்வார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# என் கனவுகள்

## நம்பிக்கை தரும் ஒளியில் தொடர்கிறது...

**தா**ண்டியடியில் வசிக்கும் தவராசா சிறிவதனியாகிய எனக்கு வயது 38. எனது வாழ்வானது இப்போது புதிதாய் ஆரம்பித்துள்ளது. எனது குடும்பத்தில் நாங்கள் மொத்தமாக ஏழு பேர். நான் மூன்றாவது பிள்ளை. எனது அப்பா விறகு வெட்டி விற்பவர். எனக்கு மூன்று சகோதரியும் ஒரு தம்பியும் உள்ளனர். ஆரம்பத்தில் எனது குடும்பம் ஒரு கஸ்டமான நிலையில்தான் இருந்தது.

எனது சிறுவயதில் அடுத்தடுத்து மறக்க முடியாத சம்பவங்கள் வரத் தொடங்கியிருந்தன. அப்போ நான் 7ம் ஆண்டு படித்து முடித்திருந்தேன். 8ம் ஆண்டு படிப்பதற்கு, புதிய ஆண்டில் கால் வைப்பதற்கு, புத்தகத்தை தூக்கிச் செல்வதற்கு, புது வருடப்பிறப்போடு புத்தாடை உடுத்துவதற்கு, இப்படியான பல கனவுகள், அவை கலைக்கப்பட்ட கனவுகள் ஆயின. அப்போ காலத்தின் கட்டாயமா, எங்கள் ஊர் நிலையா, ஏழைகளின் தலைவிதியா? குடும்பத்தில் ஒரு பிள்ளை போருக்கு தரவேண்டும் என்பது. பெற்ற பிள்ளைகள் எங்களை ஒழித்து மறைத்து பாதுகாத்து காப்பாற்றனுமே என்று என் அப்பா அம்மாவின் வேதனை அவர்கள் பட்ட பாடு என்னால் தாங்க முடியாமல் இருந்தது. நான் 8ம் ஆண்டில் ஒரு அடி கூட எடுத்து வைக்க வில்லை. "படிக்காவிட்டால் பரவாயில்லை நீங்கள் தப்பி ஓடுங்கள்" என்று அங்குமிங்குமாக வெவ் வேறு இடங்களில் அவர்கள் எங்களை அனுப்பிக் கொண்டிருந்தனர். உயிருக்குப் பயந்து நானும் நாவற்குடாவில் உள்ள அக்காவின் வீட்டில் மறைந்திருந்தேன்.

இவ்வாறு மூன்று வருடங்கள் ஓடின. நான் இந்தக் காலப்பகுதிக்குள்ளேயே பெரிய மனிசியாகி விட்டேன். என் அம்மாவை அப்பாவைப் பார்க்க வேணும் போல இருந்தது. நான் திரும்பவும் தாண்யடிக்கு வந்தேன். அப்பவும் பிள்ளை பிடிக்கும் பிரச்சினை மாறவில்லை. என்னை விட என் தம்பியைத்தான் கட்டாயத்தின் பேரில் இழுத்தார்கள். அம்மா கடைசி வரையும் தம்பியை விட வில்லை. எங்களது வீடு களி மண்ணால் கட்டப்பட்ட ஒரு குடிசை வீடுதான் அம்மா தம்பியின் மேல் உயிரையே வைத்திருப்பாவு. அப்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தம்பியைக் குடுப்பாவா? தம்பியை அந்தக் குடிசை வீட்டுக்குள்ளேயே மறைத்து ஒளிச்சு வைத்திருந்தம். அப்பா ஒழிந்தொழிந்து வேலைக்குச் செல்வார். இப்படியிருக்கக்குள்ள ஒரு நாள் அம்மாவை இயக்கம் "உண்ட பிள்ளை எங்க" எண்டு மிரட்டி "மகனைக் கொண்டு வந்து தா" எண்டு அம்மாவை பிடித்து வைத்து விட்டார்கள்.

இரானுவத்தினரை விட இயக்கத்தினரால் தான் கடும் பயமும் கடும் தொல்லையும். அப்பா வேலைக்குப் போனாத்தான் எங்களுக்குச் சாப்பாடு. அம்மாவை மூன்று நாட்கள் வைத்திருந்தார்கள். அப்பா உடனே என்னையும் தம்பியையும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேணுமே எண்டு ஒவ்வொரு திசையிலும் கெஞ்சி கெஞ்சி எங்களைக் கொண்டு சேர்த்தார். திரும்பவும் நாவற்குடாவில் உள்ள அக்காவின் வீட்டில்தான் போய்ச் சேர்ந்தேன். தம்பியை ஆரையம்பதியில் ஒரு உறவினர் வீட்டில் மறைத்து வைத்து விட்டு அப்பா சென்று விட்டார். பிள்ளைகள் இல்லை என்று தெரிந்ததும் அம்மாவை மூன்றாம் நாள் விட்டுவிட்டார்களாம்.

ஆனால் எப்படியோ தம்பி இருக்குமிடத்தை இயக்கம் அறிந்து அவனை வைபோஸ் பண்ணி கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். அவன் ஒரே ஒரு தம்பி நாங்கள் 4 பெண் பிள்ளைகளுக்கு. அவன் ஒரு ஆண்மகன் என்று அம்மாவும் அப்பாவும் தவித்தார்கள், அம்மா பதறினாள், ஓடினாள், எங்கெல்லாம் போகவேணுமோ அங்கெல்லாம் சென்றாள், ஆனால் தம்பி கிடைக்கவில்லை...

மீண்டும் நான் தாண்டியடிக்குச் சென்றேன். என் பெற்றோர் பட்ட கஸ்டமும் துன்பமும் என்னால் மறக்க முடியவில்லை. சாப்பாட்டிற்கு கஸ்டப்பட்டது போல் குடிக்கும் தண்ணிக்கும் கஸ்டப்பட்டோம். சிறுவயதுப் பராயத்தில் இருக்கும் போதே மூன்று நான்கு கிலோமிற்றர் தூரம் தண்ணீர் எடுக்கச் செல்ல வேண்டும். இரண்டு ஆத்துக்காடு தாண்டித்தான் தண்ணீர் எடுக்கப் போக வேணும். இப்படியாகத்தான் கஸ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தோம். இவ்வாறு இருக்கையில் இரண்டு மூன்று வருடங்களுக்கு பின் தம்பி ஓடிவந்து விட்டான். அப்போது மீண்டும் யுத்தம் தொடங்கி விட்டது.

யுத்தத்தினால் தாண்டியடி மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டனர். இதனால் இடம் பெயர்ந்து ஆரையம்பதிக்கு சென்றோம். நான் அக்காவின் வீட்டிற்குச் சென்றேன். யுத்தம் காரணமாகவும், பிள்ளைகள் பிடிப்பதன் காரணமாகவும் தம்பி இளவயதிலேயே திருமணம் முடித்து விட்டான். நான் 10 வருடங்கள் அக்காவின் வீட்டில்தான் வாழ்ந்து வந்தேன். 7ம் ஆண்டு படித்த படிப்புத்தான் பிறகு படிக்கவே இல்லை.

இவ்வாறு காலங்கள் ஓடின. திடிரென ஒரு நாள் தம்பிட மனைவி எனக்கென்று ஒரு மாப்பிளை பாத்துக் கூட்டிக் கொண்டு வந்தாள். எனக்கு கலியாணம் கட்ட விருப்பம் இல்லை. நான் திரும்பவும் தாண்டியடிக்கே சென்று விட்டேன். அம்மாவும், அப்பாவும் தாண்டியடியில்தான் இருந்தார்கள். என்னைத் தேடி அந்த மாப்பிள்ளை தாண்டியடிக்கே வந்து விட்டான். என் அம்மா, அப்பாவின் கட்டாயத்தின் பேரில்தான் நான் அவரைக் கலியாணம் கட்டவேண்டிய நிலை ஆனது. எனது கணவர் மண்டூர். எனக்கு இப்போது இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது முதல் பிள்ளை வயிற்றில் இருக்கும் போதுதான் கணவர் சொன்னார் "உன்னை திருமணம் முடிக்கும் முன்பே நான் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாட்டை செய்து விட்டேன். இப்போ எனக்கு விசா வந்து விட்டது. என்ன வழிப்பட்டாவது காசி வாங்கித் தா" என்று. சரியா என்னை கரைச்சலபடுத்தினார். இதனால் என்னுடைய அப்பாதான் வட்டிக்குப் பணம் வாங்கி வெளிநாடு அனுப்பி வைத்தார். ஆனா வெளிநாடு போன கணவர் எனக்கு பணம் அனுப்பவே இல்லை. அப்பத்தான் என்னுடைய வீட்டிற்கு ஒருவர் வந்தார். அவர் கூறினார். எனது கணவர் ஏற்கனவே திருமணம் முடித்தவர் என்று. "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று நான் கேட்டேன். "உன் புருசன் வேறு யாரையும் கட்டவில்லை, எனது சகோதரியைத்தான் கட்டியிருந்தவர்" என்றார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அதற்கு பிறகு எனக்கு முதல் பிள்ளையும் பிறந்து விட்டது. நான் தொலை பேசியில் திட்டிய பிறகுதான் மூன்று மாதம் அல்லது ஆறு மாதத்திற்கொரு தடவை காசி அனுப்புவார். எனக்கு காசு அனுப்பியிருந்தார். மீதி உழைத்த பணம் அனைத்தையும் அவர் அம்மாவிற்கும், முதல் மனைவிக்கும்தான் அனுப்பியிருந்தாராம்.

இவ்வாறு இருக்கும் போது 2011ல் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. களிமண் குடிசை என்ற காரணத்தினால் குடில் இடிந்து விழுந்து விட்டது. வெள்ளத்தினால் பாதிப்பு என்று எனது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெற்றோருக்கு அரசாங்கத்தால் வீடு கட்டிக் கொடுத்தார்கள். நானும் பதிந்தேன். என்றாலும் எனக்கு வீடு தரவில்லை. எனது கணவர் வெளிநாடு என்றபடியால் எனக்கு வீடு தரமுடியாது என்று ஜிஎஸ் சொன்னார். வீடு இல்லாததால். நான் எனது பெற்றோருடன்தான் வாழ்ந்து வந்தேன். தண்ணீருக்கும் கஸ்டம் என்றதால் நாங்கள் வளவிற்குள்ளேயே கிணறு கட்டி விட்டோம். தண்ணீர் பஞ்சம் இல்லை. அப்பா மேசன் கூலியாளாகச் சென்று உழைத்து வருவார்.

கன வருசங்கள் போன பிறகு கணவர் திரும்பவும் வந்தார். பல சத்தியங்கள் பண்ணி என்னை தன் வசப்படுத்தி ஏமாற்றி என்னோடு வாழத் தொடங்கினார். எங்கள் மூலமாக மீண்டும் கடனைப் பெற்று வெளிநாடு போக யோசித்தார். அப்போது எனக்கு இரண்டாவது பிள்ளையும் பிறந்து விட்டான். கணவர் மீண்டும் வெளிநாடு சென்று விட்டார். வெளிநாடு சென்றவர் மீண்டும் நாட்டுக்கு திரும்பி விட்டார். வந்தவர் எங்கு போனார் என்று தெரியவில்லை. போனவர் போனவர்தான் வீட்டுக்கு வரவே இல்லை. நானும் தேடிப்போகவே இல்லை. எனக்கு சரியான கஸ்டம். எனது பெற்றோரின் உழைப்பில் எத்தனை பேர்தான் சாப்பிடுவது. எனது மூத்த பிள்ளைக்கு 2 வயதும் இளைய பிள்ளையும் 9 மாதமும் இருக்கையில் வீட்டு வேலைக்குச் சென்றேன். ஒரு நாளைக்கு 300 ரூபாய் கூலி. இந்த வருமானம் எனது குடும்பச் சுமையைக் குறைத்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் சூரியா பெண்கள் உத்தியோகத்தர் இருவர் வந்து ஜிஎஸ் எனது பெயரைத் தந்ததாகவும் எனக்கு உதவி செய்வதாகவும் கூறி எனது தரவுகளை எடுத்துக் கொண்டு சென்றார்கள். அவர்கள் எனக்கு சிறுகடைக்காக இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வாங்கித் தந்தார்கள். ஆகவே இன்று வீட்டு வேலைக்கு போவதை நிறுத்தி கடையை நடத்தி வருகிறேன். இன்று நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். அது "நான் சுயமாக உழைக்க வேண்டும்" என்பதாகும்.

எனது வியாபாரம் படிப்படியாக அதிகரிக்க 2015ல் சூரியா நிறுவனத்தின் சட்ட உதவியுடன் எனது கணவருக்கு எதிராக வழக்குப் போட்டேன். இதனால் இன்று எனது இரண்டு பிள்ளைகளுக்கும் தாவரிப்புச் செலவாக கணவனிடமிருந்து மாதம் ரூபாய் 8000 எடுக்கிறேன். சூரியாவின் சக்திக் குழுவிலும் உள்ளேன். ஏற்கனவே எனக்கு கடைத் தெருவிற்குக் கூடப் போகத் தெரியாது. ஆனால் எப்ப சக்திக்குழுவிற்கு வரத் தொடங்கினேனோ அன்றுதான் எனக்கு துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டது. வாழ்வில் அடிபட்டு அடிபட்டே போன எனக்கு நானும் ஒரு மனிசிதான் என்பது தெரிந்தது. இன்று வெளிச்சத்திற்கு வரத் தொடங்கியுள்ளேன்.

வை.எம்.சி.ஏ (Y.M.C.A) யினாலும் சில வேலைத் திட்டங்கள் எனது கிராமத்திற்கு வந்தது. எனது கடையை பெருப்பிக்கும் படி 67500 ரூபாய் காசு 2016ம் ஆண்டு தந்தார்கள். சந்தோஷம் ஒரு பக்கம் இருந்தாலும் ஒரு பக்கம் துக்கம். அக்காவின் கணவர் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்பா இரவில் அக்காவின் கணவருக்கு உதவியாக வைத்தியசாலையில் நிற்பார். பகலில் வந்து கடையைக் கட்டுவார் இவ்வாறு கடையும் கல்லால் கட்டப்பட்டு பொருட்களும் அதிகமாகப் போட்டு வியாபாரத்தை ஆரம்பித்தேன். இன்று கடவுள் புண்ணியத்தில் வியாபாரம் நன்றாகத்தான் போகிறது. வியாபார கணக்கையும் அன்றன்றைக்கு பதிவு செய்து வருகிறேன்.

ஒரு நாள் வழக்கிற்காக நான் ரோட்டில் நடந்து போகும் போது என்னை யாரோ மோட்டசைக்கிளால் அடித்து விட்டுச் சென்றார்கள். அன்றில் இருந்து எனக்கு தலை சுற்றுவதும் ஞாபக மறதியுமாக உள்ளது. இதனால் இப்போ கணக்கு வழக்குகளை கொப்பியில் பதிவு செய்வதும் இல்லை. என்றாலும் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 7000 ரூபாய் வியாபாரம் ஆகும். மகள் 3ம் தரத்தில் படிக்கிறாள். மகன் நேசறி படிக்கிறான். மேலதிக வருமானத்திற்காக மிளகாய் அரைக்கும் இயந்திரம் ஒன்றும் எடுத்து தொழில் செய்கிறேன். போட்டியாளர்களும் கூடிவிட்டார்கள். எனது கடைக்கு எதிர்க்கடையும் வந்து விட்டது. என்றாலும் எனக்கு இன்னமும் வியாபாரம் நன்றாகப் போகிறது.


எனது வீட்டுத் தேவைக்காக வீட்டுத் தோட்டமும் செய்து வருகின்றேன். வியாபாரத்தின் மூலம் நான் கற்ற பாடம் என்னவென்றால், சமூகத்தாருடன் நல்ல உறவு வைப்பதும், எல்லாருடனும் நன்றாகப் பழகுவதும் பொறுமையைக் கையாள்வதும் தொழிலைக் கொண்டு போவதற்கு சிறந்த வழி என்பதாகும். ஏனக்கு தெய்வத்திற்கு அடுத்த படி என் அப்பாவும், அம்மாவும்தான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொழில் முனையும் பெண்கள்

## ஒரு சமூகவியற் பார்வை



**அறிமுகம்:**

மானுடவியல் சார் பெண்ணியத்தின் *(Feminist Anthropology)* பார்வையில் முதலாவது உற்பத்தி முயற்சியாளர்களாகப் பெண்களே காணப்பட்டுள்ளனர். வேட்டையாடல் மற்றும் சேகரிப்பு யுகத்தில் உணவு சேகரித்தல், கிழங்கு வகைகளைத் தேடுதல், இறைச்சியைப் பதனிடுதல் முதலியவற்றிலும் பெண்களே முனைப்பாக ஈடுபட்டுள்ளனர்.

பிற்பாடு நவீன யுகத்தினை எடுத்துக் கொண்டால், முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்கள் இடம்பெற்ற காலப் பகுதியிலேயே பெண்களின் தொழிற்படை சார் பிரவேசம் குறிப்பிடத் தக்களவு அதிகரிக்கலாயிற்று *Betty Friedan,* 1964) அதாவது, மேலே குறிப்பிட்ட யுத்த காலங்களில், ஏலவே, தொழிற்படையில் இணைந்திருந்த ஆண்கள் போரில் ஈடுபடுத்தப்பட அப்போது ஏற்பட்ட இடைவெளியை நிரப்பும் பொருட்டு பெண்களை அதிகளவில் தொழிற்படையில் இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்நிலைமையினைப் பெண்ணிலைவாதிகள் 'முதலாளித்துவமும், தந்தை யாதிக்கமும் கைகோத்துக் கொண்ட' ஒரு காலச் சூழலாகக் குறித்துக் காட்டுவர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேற்குலகில் நிலைமை இவ்வாறெனில், தென்னாசியப் பிராந்தியம் உட்பட்ட கீழைத்தேய நாடுகளில் பெண் 'இல்லாளாகவும்', 'மனைவியாக வுமே நோக்கப்பட்டு, அவள் தொழிலுக்குச் செல்வது என்பதே ஒரு 'தீட்டாகவும்' கருதப்பட்டது 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டின் முற்கூறுகளில் ஸ்தாபிக்கப்பட்ட பிரட்டிஷாரின் ஆட்சி, அதன் விளைபேறுகளால் சமூகமாற்றம், முற்போக்கு இயக்கங்களின் செயற்பாடுகள், கருத்தியல் மாற்றங்கள், பெண்களுக்கான வாக்குரிமை பெண் கல்வி வாய்ப்பும், அதிகரிப்பும் இவை காரணமாக கீழைத்தேயப் பிராந்தியத்தில் பெண்களின் தொழில் முனைவுக்கான வாய்ப்புக் கிட்டியது எனலாம். இத்தகையதொரு பின்புலத்தில், இலங்கையில் தொழில் முனையும் பெண்களின் வாழ்வாதாரம் பற்றிய ஒரு சமூகவியல் உசாவல் முயற்சியாகவே இக்கட்டுரை அமைகிறது.

**வர்த்தக வாழ்வாதாரத் துறையில் பெண்கள்:**

தற்போது, உலகெங்கணும், தமக்கென்று சுயமான சொந்த வியாபாரங்களில் முனைப்போடு ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை கண்கூடு. மேற் குலகில் வாழ்வாதாரப் பொருளாதாரத் துறையில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை கண்கூடு. மேற் குலகில் வாழ்வாதாரப் பொருளா தாரத் துறையில் பெண்களின் ஈடுபாடும், சாதனை நிறை வேற் றமும் கணிசமான ஸ்தானத்தை எட்டியுள்ளது. அதாவது, தந்தை யாதிக்க வர்த்தக நிறுவனங்களில் 'Glass Ceiling' என்று அழைக் கப்படும் உச்ச முகாமைத் துவப் பகுதிகளை எட்டுவதினின்றும் தடுத்து வைத்திருந்த ஆணா திக்க நியமங்களை இத்துறை சார்ந்து பெண்கள் வெற்றி கரமாகவே முறியடித்துள்ளனர் என்றே கூற வேண்டும்.

சில பெண்கள் அவர் களின் சொந்த வியாபாரங்க ளிலும், வேறு புதிய வர்த்தக முயற்சி களிலும் ஈடுபடுவதானது, இப்பெண்களுக்கு அதிகளவு திருப்தியையும், நெகிழ்வுத் தன்மையையும் அளிப்பதாக உணர்கின்றனர். அத்துடன் 'வீட்டுத் துறையுடன்' மாத்திரம் பிணிக்கப்படாமல், தமக்கான பொருளாதார சுயாதீனத்தையும் எய்திக் கொள்ளும் நல்வாய்ப்புக் குள்ளாகின்றனர். இதன் மூலம் தமது வாழ்வியல் சார்பாகத் தீர்மானம் மேற்கொள்ளும் சுதந்திரத்தை யும் பெற்றுக் கொள்கின்றனர். இந்தப் போக்கானது, சில ஆசிய நாடுகளிலும், விசேடமாக கிழக்காசிய நாடுகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும், வர்த்தக, வியாபார, வேறு வாழ்வாதார முயற்சிகளில் பெண்களின் பிரசன்னம் என்பது ஓர் அண்மைக்காலத் தோற்றப்பாடு என்றே கூற வேண்டும். குறிப்பாக, பெண் தொழில் முனைவோர்கள் ஆணாதிக்கத்தால் சூழப்பட்ட, தொழிற்சந்தைசார் எல்லைகள், கட்டுப்பாடுகள், சவால்களுடன் முட்டி மோத வேண்டியுள்ள நிலைமையினையும் நாம் குறைத்து மதிப்பிட இயலாது.

**வர்த்தக, வியாபார, வேறு வாழ்வாதார முயற்சிகளில் பெண்களின் பிரசன்னம் என்பது ஓர் அண்மைக்காலத் தோற்றப்பாடு என்றே கூற வேண்டும். குறிப்பாக, பெண் தொழில் முனைவோர்கள் ஆணாதிக்கத்தால் சூழப்பட்ட, தொழிற் சந்தைசார் எல்லைகள், கட்டுப்பாடுகள், சவால்களுடன் முட்டி மோத வேண்டியுள்ள நிலைமையினையும் நாம் குறைத்து மதிப்பிட இயலாது.**

**தனியார் துறையில் பெண்கள் :**

கடந்த இரண்டரை தசாப்த காலங்களில் ஏற்பட்ட தனியார் துறைசார் மேம்பாடும், விரிவாக் கமும், பொதுவில், உயர் குழாம் அல்லது நடுத்தர வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பெண்களின் தொழில் முனைவு ஈடுபாட்டை அதி கரிக்கச் செய்துள்ளது. இதன் பெறுபேறாக மேலே பிரஸ்தாபிக் கப்பட்ட பெண்களின் வாழ்வியல், பொருளாதாரத் துறைகளிலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்படவே செய்துள்ளது. எழுச்சி நிலைமை யினையும் ஏற்படுத்தி உள்ளது எனலாம்.

மேலே குறிப்பிட்ட சமூக, பொருளாதார மாற்றமானது மேற்படி தொழில் முனையும் பெண்களின் வாழ்வில் பின் வரும் நேர்நிலையான மாற்றங் களைக் கொணர்ந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அப்பெண்களின் தனிப்பட்ட ஆற்றல், பயில்திறன், கைத்திறன் மேம்பட்டுள்ளது.
2. சமுதாய, குடும்ப ஆதரவு எட்டப்பட்டுள்ளது.
3. 'பெண்மையப்பட்ட' பொருளாதார வெளி *(Economical Space)* ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
4. பெண் 'வீட்டுத்துறை' சார் எல்லையுடன் மாத்திரம் பிணைக்கப்பட்டிருந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
5. பெண்கள் ஆண்களில் தங்கியிருந்த நிலைமை வீழ்ச்சியுற்று, ஓரளவுக்குப் பொருளாதார சுதந்திரத்தை எய்தியுள்ளனர்.
6. அவர்கள் தன்னாற்றலும், தற்சார்பும், தீர்க்கமான ஆளுமையும் கொண்டவர்களாக மாறியுள்ளனர்.
7. தம்மைச் சூழவுள்ள இயற்கை வளங்கள், சமூகத் தொடர்புகளைச் சாதகமாகப் பயன் படுத்தும் வாய்ப்பு உருவாகியுள்ளது.
8. சாத்தியப்பாடான வியாபார முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்துள்ளது.

**"தொழில்முனையும் பெண்களை வரையறுத்தல்"**

சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம் வேலை கொள்வோருக்கு *(Employer)* வழங்கியுள்ள வரைவிலக்கணம் பின்வருமாறு அமைகிறது.

'ஒரு நபர், தன்னுடைய சொந்த முயற்சியை இயக்குபவராக / அல்லது ஏனைய தரப்புகளுடன் அரைப்பாகமளவு இணைந்து இயக்குபவராக / அல்லது சமய ரீதியிலான முயற்சியாண்மையில் ஈடுபடுவோரே தொழில் கொள்வோர் ஆவர்.' 'அந்த முயற்சியானது வியாபாரமாகவோ /சேவைகள் துறையாகவோ / அல்லது அமைப்பு ரீதியானதாகவோ அமைதல் வேண்டும்.

பெண்கள் தொழில் கொள்வோராக முன்னேறியுள்ள போதிலும், தொழில் செய்யும் களங்களிலும், அமைப்புகளிலும் அவர்களுக் கெதிரான பாரபட்சங்கள், தடைகள், வன்முறைகள் பாலியற் தொல்லைகள் இன்றளவும் தொடரவே செய்கின்றமை மறுக்கவியலாத சமூக யதார்த்த மாகும். சுயதொழிலில் ஈடுபடும் பெண்கள் நுண்மையான முயற்சியின் உரிமையாளர் அல்லது சுயமாகத் தொழில் புரிபவர் அல்லது குடிசைக் கைத்தொழிலை இயக்குபவர் என்கிற ரீதியில், அவர் இடையறாது தாக்குப் பிடிப்பதற்கு வெளிவாரியான உதவியும் தேவையாக இருக்கிறது. பல வருடங்களாகப் பொருளியலாளர்கள், சமூகவிய லாளர்கள், முகாமைத்துவ ஆய்வறிவாளர்களினால் இவர்கள் தொடர்பிலான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் பெரும் பாலானவை பெண்களின் சுயதொழில் முயற்சி தொடர்பாகவே மையப்படுத்தப்பட்டுள்ளன. *(United Nations Industrial Development Organization / Centre for Women's Research, 2016)*

எவ்வாறாயினும் வாழ்வாதார ரீதியில், தொழிற்படையில் துடிப்பாக இயங்கும் வியாபாரத் துறைசார் பெண்கள் தொடர்பில் பெருமளவுக்கு ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை, அதிலும், குறிப்பாக இவ்விடயம் பற்றிய பால்நிலைக் கண்ணோட்டத்திலான விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமை ஒரு குறைபாடாகவே கணிக்கப்படுகிறது.

**வாழ்வாதார வணிகத் துறையில் பெண்கள், இலங்கையை மையப்படுத்திய பார்வை:**

தென்னாசியப் பிராந்தியத்தில் பெண் களுக்கு முதலில் வாக்குரிமை வழங்கிய நாடாக இலங்கை சிறப்பிக்கப்படுகிறது. காலனித்துவத்தின் பயனாகப் பெண் கல்வியின் பரிமளிப்பும், சுதந்திரத் துக்குப் பின்னரான நவதாராண்மைவாத முன்னெ டுப்புகளும் இலங்கையில் பெண்களின் தொழில் துறை சார்பான பங்குபற்றலை ஓரளவு மேம்படச் செய்தது எனலாம். எனினும், காலவோட்டத்தில் தொழில் முனைவு சார் பெண்களின் வகிபாகமானது. பல்வேறு கட்டம் சார்ந்த மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

கல்வியை எய்துவதில் தென்னாசிய வட்ட கையில் உள்ள நாடுகளை விட, இலங்கையானது முன்னேற்றகரமான தேசமாகத் திகழ்கிறது. பெண்களுக்கும் உயர்கல்விக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பெண்கள் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, பொருளாதாரத் தளத்திலான தந்தையாதிக்க நியமங்களைத் தகர்த்தெறிந்து வருகின்றனர். அதன் வழி, அவர்கள் அதிகளவு சுதந்திரத்தையும், சமூக, பொருளாதார நகர்வையும், பல்வேறு ஆற்றல்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். பாரம்பரியமாகவே, இலங்கைப் பெண்கள் பொருளாதார உற்பத்தித் துறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிசமான வகிபாகத்தைச் செலுத்தியுள்ளார்கள். இலங்கைக்கு அதிகளவு அன்னிய செலாவணியை ஈட்டித்தரும் ஆடைக் கைத்தொழில், பெருந் தோட்டத்துறை, மத்திய கிழக்கிற்கான புலம் பெயர்வு (வீட்டுப்பணிப்பெண்) முதலிய மூன்று துறைகளிலும் பெண்களின் பங்களிப்பே கணிசமானது. இவற்றை விட, மரபுசார், மரபு சாராக் கைத்தொழில்களிலும், சேவைகள் துறையிலும், விவசாயம், மீன்பிடி, சுரங்கக் கைத்தொழில், கட்டிட நிர்மாணம், நெடுஞ்சாலைப் புனரமைப்பு முதலான துறைகளில் துணை (உப) புரிவோராகவும் தமது பங்களிப்பை வழங்குகின்றனர். ஒரு சிலர் அரச சார்பற்ற துறைகளில் பங்கெடுக்கின்றனர். வேறு சிலர் குடிசைக் கைத்தொழில்களையும், சிறு வியாபார முயற்சிகளையும் முன்னெடுக்கின்றனர். விரல் விட்டு எண்ணத்தக்கவர்களே தொழில் அதிபர்களாக விளங்குகின்றனர்.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையிலும் ஊழியர்களாகப் பணிபுரியும் பெண்களின் தொழிற்படை வீதமானது, சார்பளவில் ஆண்களோடு ஒப்பிடுமிடத்து - தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. எடுத்துக் காட்டாக, 1999இன் இரண்டாவது காலாண்டில், இலங்கையில் சுமார் 5.9 மில்லியன் ஊழியர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 67% ஆண்கள் 33% பெண்கள் (மூலம்: புள்ளி விபரத் திணைக்களம்). இவ்வாறெனில், இலங்கைத் தொழிற் சந்தையில் அமர்த்தப்படுகின்ற பெண்களும் தாழ்வான அந்தஸ்து, குறைதிறன் / பயிற்சி, தாழ்வான வேதனம் ஆகியவற்றை இன்று வரை எதிர்கொள்கின்றனர். பால்நிலை அடிப்படையில் தொழில்கள் பிரிவிடப் பட்டுள்ளன. பெண்களுக்கு உகந்த மாதிரியான பிரத்தியேகமான தொழில்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. (ஆசிரியை, தாதி, மருத்துமாது, தையல் வேலை...)

பாரம்பரியமற்ற தொழிற்துறைகளில் பெண்கள் பங்குபற்றினாலும் கூட அங்கும் குறைந் தளவே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். முகாமைத்துவ, நிர்வாகத் துறைகளிலும் பெண்களின் பங்குபற்றல் குறைவாகவே உள்ளது. (ஜயவீர், 1999)

உண்மையில் தொழில் முனைவோர் என்பதனைச் சுற்றாடல், பண்பாட்டுடன் பிணைந்த விடயமாகவே கருத்திற் கொள்ள வேண்டும். எதிரிடையாக, ஆண்கள் பெண்களின் வகிபாகத்தை 'மனைவி'யாகவும், 'தாயா'கவும் நோக்குகின்றனர். இது மட்டுமன்றி இந்நோக்கினைப் பெண்களின் ஆழ் மனதிலும் கருத்தேற்றம் செய்து விட்டுள்ளனர். பொதுவாக வீட்டுப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு உட்பட்ட அதிகளவு வீட்டுப் பொறுப்புக்களை மேற்கொள்கின்றனர் என்பது அனைத்துலக ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் வேலை *(Work)* - குடும்பம் (Family) என்னும் முரண்பாடு ஏற்படுகிறது. மனைவி, துடிப்பான செயற்பாங்கான தொழில் முனைவோராக மாறுவதைக் கணவன்மார் விரும்புவதில்லை. அது போல நன்கு பயிற்சி பெற்ற, புத்திக் கூர்மையும், தன்னாற்றலும் மிக்க பெண்களை (ஆண்) தொழில் கொள்வோர் விரும்புவதில்லை.

இந்த ஆய்வு இறுதியில் தொழில் முனையும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பின் வருமாறு அடையாளப் படுத்தலாம்.

1. தந்தையாதிக்க நியமங்களும், கருத்தியல்களும்
2. மூலதனப் பற்றாக்குறை
3. சமூக மட்டத்திலான ஆதரவின்மை
4. போதிய சந்தை வாய்ப்பின்மை
5. போதிய பயிற்சியின்மை
6. போக்குவரத்துப் பிரச்சினை
7. பால்நிலைக் குருட்டுத் தன்மையுடைய அபிவிருத்தித் திட்டங்கள்

எனவே மேற்படி பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வு காண்பதற்கு அரசும், சமூக அமைப்புகளும், பெண் உரிமை நாடும் இயக்கங்களும் பாடுபடுதல் அவசியமாகிறது.

**ஆண்கள் பெண்களின் வகிபாகத்தை "மனைவி" யாகவும், "தாயா"கவும் நோக்குகின்றனர். இது மட்டுமன்றி இந்நோக்கினைப் பெண்களின் ஆழ் மனத்திலும் கருத்தேற்றம் செய்து விட்டுள்ளனர். பொதுவாக வீட்டுப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு உட்பட்ட அதிகளவு வீட்டுப் பொறுப்புக்களை மேற்கொள்கின்றனர் என்பது அனைத்துலக ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முடிவாக நோக்குமிடத்து, தொழில் முனையும் பெண்கள் பொருளாதார சுதந்திரத்தை ஓரளவு எய்தியுள்ளனர். தமது சுய தொழில்களையும் முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் மூல வளங்களையும், ஆற்றலையும் சரியாகக் கையாள் வதற்கும் பெண்ணுக்கு ஆற்றல் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும், பெண்கள் இப்பொருளாதார மேம்பாட்டுக்கு மத்தியிலும், 1.மனைவி / தாய், 2. வருமானம் ஈட்டுபவள் என்னும் வகிபாகத்தை தந்தையாதிக்கச் சட்டத்தினுள் இயங்கும் தொழிற் சந்தையில் தளராமல் செயற்பட்டதன் மூலமும், சமாளிக்கும் நுட்பங்களைக் கையாண்டதன் வாயிலாகவும், ஓரளவு வெற்றி பெற்றுள்ளனர் என்று கூற வேண்டும். எனினும் தொழில் முனையும் உலகில் பெண்கள் இன்றும் அதிக தூரம் பயணிக்க வேண்டியுள்ள யதார்த்தத்தையும் கருத்தில் கொள்ளுதல் நலம்.

**உசாத்துணை :**


1. *Afshar, H.(ed). Women, Work and Ideology in the Third World, London: Tavistoek.*
2. *Andrmahr, Sonya, Lovell, Terry and Wolkowitz, Carol (1997). A Concise Glossary of Feminist Theory. London: Arnold.*
3. *Barrett, M.(1980). Women's Oppression Todays, London: Verso.*
4. *Underwood, L.A. (1979). Women in Federal employment and training programmes, Washington, DC: The Urban Institute.*
5. *Walby, S.(1990). Theorizing Partriarehy, Oxford; Basil Blackwell.*




**சந்திரசேகரன் சசீதரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல், கிழக்குப் பல்கலைக்கழகம்.

**தம்பிராஜா விமல்**

முதுதத்துவமாணி (M.ph.II) மாணவன், (சமூகவியல்),
பேராதனைப் பல்கலைக்கழகம்


## என் உண்மைகள்



ஏனோ என் கேள்விகள்
அடிக்கடி மௌனமாகவே
பகிரப்படுகிறது.

வெளியே,
அவர்கள்
சொற்களும்
அதன் ஓசையும்
கை குலுக்கலும்...

அலையாய் வீசி அடிக்கையில்
அதற்குள் உள் வாங்கா என்
உண்மைகள், நியாயங்கள், கேள்விகள்
ஆவேச அலைகள்

அமைதியாய்
உறையவைக்கப்படுகிறது
எனக்கெதிராக


**விஜயலட்சுமி சேகர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புடன் ஆசிரியைக்கு!**

பெண்ணியப் பிரக்ஞையுடன் தளரா முயற்சி ஒன்றையே மூலதனமாய்க் கொண்டு வெளிவரும் 'பெண்'ணின் நீண்ட நாள் வாசகன் யான். வேலைப் பளு காரணமாய் விமர்சனம் வரைதலில் இடையிடையே தொய்வு இருப்பினும் 'பெண்ணை' வாசித்து நயக்கத் தவறுவதில்லை.

சென்ற இதழில் ஆசிரியை தன் கூற்றாகப் மொழிந்துள்ள ஒரு கருத்து யதார்த்தமானதே! அதாவது 'உலகளாவிய ரீதியில் பெண் சமத்துவம், பெண்களுரிமை பற்றிய கருத்தியல் ரீதியிலான விழிப்புணர்வுகளும், செயல்வாதங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல தளங்களில் இடம் பெற்ற வண்ணமே உள்ளன' என்று அவர் கூறுகிறார். இவ்வன்முறைகளுக்கு முகம் கொடுக்க எமது சமூக இயக்கங்கள் யாது செய்யப் போகின்றன என்பது நம் முன் உள்ள தலையாய கேள்வியாகும்.

இதழின் உள்ளே 'படுவான் புலமும், பெண் குழந்தைகளின் கல்வியும்' என்ற கட்டுரை சிந்திக்க வைக்கிறது. 'ஞானமும், கல்வியும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமாய் ஈசன் வைத்ததாகப்' பாடுவான் பாரதி. பெண்கள் தேசத்தையே ஆளும் நவீன யுகத்திலும் கொத்தடிமைகளாய் அறியாமையில் உழலும் சிறுமிகளின்பால் அரசும், சமூகமும் சிரத்தை கொள்ள வேண்டும்.

பேரா. தொ. பரமசிவனின் 'தாலியின் சரித்திரம்' பண்டைய ஐதீகங்களைக் கேள்விக் குட்படுத்தும் நல்லதோர் மீள்கட்டவிழ்ப்பு முயற்சி.

த. வினோதினியின் கட்டுரை பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை சமூக, உளவியற் பாங்கில் எதிர்கொள்கிறது. இதைப் படித்த போது முன்பே ஆங்கிலத்தில் வெளிவந்த செல்வி. திருச்சந்திரன், சஸங்க பெரேரா ஆகியோரின் ஆழமான ஆய்வுகள் நினைவுக்கு வந்தன.

விஜயலட்சுமியின் 'தாய்மை' பற்றிய சொல்லோவியம் காலம் காலமான தமிழ் மரபுகளை கேள்விக்குட்படுத்துகிறது. இன்று தந்தையும் தாய்மையின் வகிபாகத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய காலச் சூழலில் நாம் வாழ்கிறோம்.

வாய்மொழிப் பாரம்பரிய இலக்கியத் துறையில் நீண்ட காலமாகவே ஆர்வம் செலுத்தி வரும் பேரா.செ.யோகராஜா இம்முறை வித்தியாசமாக மலையக வாய்மொழிப் பெண் புலவர்களின் பாடல்களைத் திரட்டித் தந்திருக்கிறார். தேயிலைச் செடிகளிடை குருதியும், வியர்வையும் சிந்தும் அப் பெண்களின் - குரல் அற்றவர்களின் குரலைப் பதிவு செய்த பேராசிரியருக்குப் பாராட்டுகள்!

இவற்றை விட 'பெண் எனும் சுமைதாங்கி' , 'மாற்றம்' சிறுகதை, 'முகநூல் பாவனையும் பெண்களும்' , 'மலையகப் பெண்கள்' , 'நுண்கடன்களால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்' என்று அத்துனை அம்சங்களும் காத்திரமாகவே அமைந்திருந்தன.

இதழ் விரித்த கவிதைகளும் பால்நிலைக் கூருணர்வுடன், 'பெண்' என்றும் தனித்துவப் பிரக்ஞையைப் பிரதி பலிக்கும் மொழிதலாகவே அமைந்திருந்தன. பெண்ணியம் இன்று ஒரு சமூக விஞ்ஞான அறிவாராய்ச்சியியல் (Epistimology of Social Science) முறையாக அங்கீகாரம் பெற்று விட்ட நிலையில், இவ்விதழை கனகாத்திரமாகத் தொகுப்பதில் தன் உழைப்பைச் செலுத்திய ஆசிரியைக்கும், படைப்பாளிகட்கும், இதழ் தோழியர்க்கும் என் வாழ்த்துக்கள்! 'பெண்' இன் தடங்கள் தொடரட்டும்!

தோழமையுடன்,

**சந்திரசேகரன். சசீதரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர் (சமூகவியல்)

கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த சந்தா - பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
**US$ - 8**
**இந்தியா**
**ரூபா 500.00**
**இலங்கை**
**ரூபா 200.00**

**சந்தா விண்ணப்பம் 20..............**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ..............................................................................................................

விலாசம் : ..............................................................................................................

திகதி : ..............................................................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தி பேரில் அனுப்பி வைக்கிறேன்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No. 4/1, Thomas Lane,
Batticaloa,
Sri Lanka.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 1391-6122



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org